விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

Registered as a Newspaper in Sri Lanka

# வலம்புரி
# Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 கார்த்திகை '01 திங்கட்கிழமை (17.11.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 333

# ஜனாதிபதித் தேர்தலுக்காக பொய் கூறுகிறார் மகிந்த

## உண்மையை இன்று வெளியிடுவேன் - சொல்ஹெய்ம்

(கொழும்பு) ஜனாதிபதி தேர்தல் நெருங்கவுள்ளதால் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பொய் கூறியுள்ளதாக இலங்கைக்கான நோர்வேயின் முன்னாள் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் குற்றம் சுமத்தியுள்ளார்.

குருநாகலில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, நோர்வேயின் முன்னைய அரசாங்கம் விடுதலைப் புலிகளுக்கு வழங்கிய நிதியுதவிகள் குறித்து விசா 23ஆம் பக்கம் பார்க்க....



## ஒப்பந்த கைச்சாத்து 19 வரை ஒத்திவைப்பு

(கொழும்பு)

அடுத்த ஜனாதிபதி தேர்தலின் போது, இணைந்து செயற்படுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படுவது எதிர்வரும் 19ஆம் திகதிவரை தள்ளிவைக்கப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமாதானத்துக்கான மக்கள் இயக கத்தின்தலைவர்வண. மாதுலுவாவே சோபித தேரர், வைத்தியசாலையில அனுமதிக்கப்பட்டுள்ளதை அடுத்து, இன்று திங்கட்கிழமை கைசசாத் தப்படவிருந்த புரிந்துணர்வு ஒப் பந்தம் எதிர்வரும் 19 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் கூறுகின்றன.

வண. மாதுலுவாவே சோபித தேரருடன் இணைந்து வேலை செய்ய தீர மானித்துள்ள அரசியல்கட்சிகளும்குழுக களும், இந்த ஒப்பந்தத்தில்கைசசாத்திட வுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-6)

## கிழக்கு முதலமைச்சர் மஜீத்துக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம்!

### எதிர்க்கட்சிகள் எச்சரிக்கை



(கொழும்பு)

கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் அப்துல் மஜீத்துக்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானத்தைக் கொண்டு வரப்போவதாக எதிர்க் கடசிகள் எச்சரிக்கை விடுத்துள்ளன.

எதிர்வரும் 24 ஆம் திகதி இடமபெறவுள்ள மாகாணசபை அமர்விலேயே இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையைக்கொண்டு வரப்போவதாக கிழக்கு மாகாணசபையின் எதிர்க்கட்சிகள் குறிப்பிட்டுள்ளன.

கிழக்கு மாகாண துணை முதலமைச்சராக 24ஆம் பக்கம் பார்க்க....

## கிணற்றில் வீழ்ந்த குழந்தை மரணம்

(யாழ்ப்பாணம்)

கிணற்றினுள் தவறி விழுந்த ஒன்றரை வயதுடைய குழந்தை பரிதாபமாக உயிரிழந்த சம்பவம் கச்சாய் வாகையடிச் சந்தியில் இடம்பெற்றுள்ளது.

வீட்டில் விளையாடிக் கொண்டிருந்த மேற்படி குழந்தை தவழ்ந்து சென்று அரு 24ஆம் பக்கம் பார்க்க....

## 81 கிலோ கஞ்சாவுடன் யாழில் இருவர் கைது




(கொழும்பு)

இந்தியாவிலிருந்து கடத்திவரப் பட்டு கார் ஒன்றில் கொழும்புக்கு கொண்டு செல்லப்பட்ட 81 கிலோ கிராம் கேரள கஞ்சாப் பொதிகளுடன சந்தேகநபர்கள் இருவரை இள வாலை பகுதியில் வைத்து நேற்று முன்தினம் சனிககிழமை இரவு கைது செய்ததாக இளவாலை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கே.மஞ்சுல டி சில்வா தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் கூறிய அவர், மாதகல் துறைமுகம் ஊடாக இந்தியாவிலிருந்து கஞ்சாவை கடத்தி, அவற்றை கொழும்புக்கு கொண்டுசெல் 24ஆம் பக்கம் பார்க்க....

## தேர்தல் அறிவிப்பின் பின்னரே வேட்பாளரை ஐ.தே.க. அறிவிக்கும்

### எதிர்க்கட்சித் தலைவர் ரணில் தெரிவிப்பு



(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தலுக்கான உத்தியோகபூர்வ அறிவிப்பிற்காக காத்திருப்பதாக ஐக்கிய தேசியக் கட் சியின் தலைவர் ரணில் விக்கிரம சிங்க தெரிவித்துள்ளார்.

தேர்தல் தொடர்பில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உத்தியோகபூர்வ மாக அறிவித்தால் அதன் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சி ஜனாதிபதித் தேர்தல் பற்றிய தீர்மானம் என்ன என்பதனையும் யார் வேட்பாளர் என்பதனையும் அறிவிக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி மகிந்தவின் இரண் டாம் தவணைக்கான ஆட்சிக் காலம் இன்ன 23ஆம் பக்கம் பார்க்க....

## பசு மாட்டினை வெட்டியவர் கைது

(யாழ்ப்பாணம்)

திருடிய பசு மாட்டினைத் இறைச் சிக்காக வெட்டிக்கொண்டிருந்த நபர் ஒருவரை கோப்பாய் பொலி ஸார் நேற்றுமுன்தினம் நள்ளிரவு வேளை கைது செய்துள்ளனர் என்று யாழ்.கோப்பாய் பொலிஸ் நிலையத் தின் தலைமை 24ஆம் பக்கம் பார்க்க....

## பொய்ப் பிரசாரத்தை முன்னெடுக்க அலரி மாளிகையில் தனிப்பிரிவு

### அரசு உருவாக்கியுள்ளது என்கிறது ஐ.தே.க

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி தொடர்பாக பொய்ப் பிரசாரத்தை அரசாங்கம் முடுக்கிவிட்டுள்ளது. இதற்காக அலரி மாளிகையில் தனிப்பிரிவை அரசாங்கம் உருவாக்கியுள்ளது என ஐக்கிய தேசியக் கட்சியின் கண்டி, மாவட்ட நாடாளுமன்ற உறுப் பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரி வித்தார்.

அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப் பும் காலம் வந்துள்ளது. கம்பளை தொகுதியை எதிர்வரும் தேர்தலில் ஐக்கியத் தேசிய கட்சி வென்றெடுக் கும். இத் தொகுதியில் கட்சியின் செயற பாடுகள் தொடர்பில் கட்சித் தலைமை விரைவில் முடிவுகளை மேற்கொள் ளும் எனவும் அவர் தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சியின் கம்பளை தொகுதி ஆதரவாளர்களின் கூட்டம் நேற்று ஞாயிற்றுக்கிழமை கம்பளை யில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித் தார்.

இங்கு தொடர்ந்தும் உரையாற் றிய அவர், ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற 23ஆம் பக்கம் பார்க்க....

## சபாபதிப்பிள்ளை முகாம் காணியை இராணுவ உதவியுடன் அளவிட முயற்சி

### மக்களின் எதிர்ப்பால் கைவிடப்பட்டது பணி


(யாழ்ப்பாணம்)

சபாபதிப்பிள்ளை முகாம் அமைந துள்ள தனியார் காணியை இராணு வத்தின் துணையுடன் அளவிடும் முயற்சிகள் முறியடிக்கப்பட்டுள் ளன.

முகாம் மக்களை சொந்த இடங களுக்கு குடியேற்றாமல் முகாமி லேயே நிரந்தரமாக குடியேற்று வதற்கு இராணுவம் முயன்று வரு வதாக முகாம் மக்கள் குற்றம் சாட்டி யுள்ளனர்.

நேற்றுக் காலை 10.30 மணிக்கு சுன்னாகம் சபாபதிப்பிள்ளை முகா முக்கு இராணுவத்தினருடன் சென்ற நிலஅளவைத் திணைக்களத்தினர், முகாம் அமைந்துள்ள காணியை அளக்க முயன் 24ஆம் பக்கம் பார்க்க....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புதிய நிர்வாகக் கட்டமைப்புடன் புத்தெழுச்சியுடன் புதிய யுகத்தில் காலடி வைக்கின்றது உங்கள் திசைகாட்டி

## மூத்த முக்கிய இயக்குநர் சபை உறுப்பினர் உயர்திரு. S. சுபசீலன் அவர்கள் திசைகாட்டி குழுமத்தின் புதிய தலைவராக பதவியேற்கும் வைபவம்.

நாள்:- 22.11.2014 பிற்பகல் 4.00 மணி

இடம்:- திசைகாட்டி குழுமத் தலைமைப் பணிமனை
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.

சிறப்பு விருந்தினர்:- திருமதி S. சுகந்தி (நிர்வாகப் பணிப்பாளர் - மீகாமன் தனியார் வரையறுக்கப்பட்ட நிறுவனம் ரொறண்டோ, ஒன்ராரியோ, கனடா)

புதிய தலைமையின் கீழ் திசைகாட்டியின் புதிய பிரகடனங்கள்;

- எல்லா விதமான விசா ஆலோசனைக்கும் ஆரம்ப கட்டணங்கள் எதுவுமில்லை-இலவச உட்பிரவேசம்.

*அனைத்து அன்புள்ளங்களையும் அன்போடும் பணிவோடும் வரவேற்று நிற்கின்றோம்.*

அனைத்து இயக்குநர் சபை
உறுப்பினர்கள்,
பிரதம நிறைவேற்று அதிகாரி,
பணியாளர்கள்

திசைகாட்டி குழுமம்

# திசைகாட்டி பிறைவேட் லிமிட்டட்

இல. 175, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி சந்தி, யாழ்ப்பாணம்
தொலைபேசி: 021 221 9016, 021 568 9090



(சீ-9109)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனவாதத்தை தூண்டுகிறது முஸ்லிம் காங்கிரஸ் கட்சி

(கொழும்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இனவாத ரீதியிலேயே செயற்பட்டு வருகிறது என காங்கிரஸினால் முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியாது போயுள்ளது. அந்த கட்சி இனவாதத்தை தூண்டுகிறது.

இதனால், அப்பாவி முஸ்லிம் மக்கள் இழப்பை செலுத்த வேண் டிய நிலைமை ஏற்படுவதுடன் பாதி ப்புகளை சந்திக்க நேர்ந்துள்ளது எனவும் மொஹமட் முஸம்மில் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

தேசிய சுதந்திர முன் னணியின் ஊடகப் பேச்சாளர் மொஹமட் முஸம்மில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

முஸ்லிம் காங்கிரஸ் கிழக்கில் தனியான நிர்வாக மாவட்டத்தை கோருகிறது. மக்கள் மீதுள்ள உண் மையான அன்பில் அதனை கோரினால் பிரச்சினையில்லை.

எனினும் முஸ்லிம் காங்கிரஸ் இனவாத அடிப்படையில் இந்த கோரிக்கையை விடுத்துள்ளது.

பல ஆண்டுகள் ஆகியும் முஸ் லிம்

## மகளிர் தின நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையத்தின் மகளிர் தின நிகழ் வுகள் நாளை மறு தினம் புதன்கிழமை யாழ். திருநெல் வேலி இராமநாதன் வீதியில் அமைந் துள்ள மேற்படி நிலை யத்தில் 8.30 மணி [illegible]க்கு ஆரம்பமாகவு[illegible] நிகழ்வுகள் [illegible]5 மணி வரை [illegible]டைபெறவு ள்ளது.

ஆர்வமுள்ள அனைவரையும் கலந்து கொள்ளு மாறு ஏற்பாட்டாள ர்கள் அறிவித்துள்ள னர். (7)


# அகவை 60 இல் அகமகிழ்ந்து வாழ்த்துகிறேன்



எந்தையும் தாயும்




அருணோதயா கல்லூரி







ஸ்கந்தவரோதயா கல்லூரி



நு/ புனித சவேரியார் கல்லூரி



எந்தன் குடும்பம்




யாழ்/ இந்துக் கல்லூரி

அமரர்களான என் பெற் றோர், அருணோதயா, ஸ்கந்தா, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்பவற்றில் எனக்கு அறிவுப்பசி தீர்த்த ஆசான்கள், பேராசான்கள், கல்வி கற்ற காலத்தில் ஒருசாலை நண்பர்கள், என் உடன் பிறப்புக்கள், அவர்கள் தம் உறவுகள், தாய், தந்தை வழி உறவுகள், அளவெட்டி, கந்தரோடை, கந்தர்மடம் வாழ் மக்கள், என் மனைவி, அவர் வழி உறவுகள், எம் மைந்தன், என் மாணவச் செல்வங்கள், என் கல்விச் சேவைக்காலத்தில் எனது அதிபர்கள், பிரதி அதிபர்கள், உப அதிபர்கள், ஆசிரியர்கள், உதவியாளர்கள், என்னிடம் கற்ற மாணவச் செல்வங்கள், என்னோடு அரச பரீட்சைக்கடமை, தேர்தல் கடமை ஆகியவற்றில் பணிபுரிந்தவர்கள், யாழ். கல்வி வலயம், நல்லூர்க் கல்விக் கோட்டம் சார் கல்விச் சேவையாளர்கள் யாவரையும் எனது அறுபதாவது பிறந்தநாளும் சர்வதேச மாணவர் தினமுமாகிய இன்றைய நாளில் அன்பு கலந்த நன்றி உணர்வுடன் வாழ்த்தி விநாயகர் இணை அடி தொழுகின்றேன்.

இவ்வண்ணம்: பொ.ஞானதேசிகன், ஓய்வுநிலை பிரதி அதிபர், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி.

(5016-ச)


# இராசி பலன்

17.11.2014
(கார்த்திகை 01, திங்கட்கிழமை)
சூரிய உதயம் காலை- 6.02 மணிக்கு
தசமி பிற்பகல் 2.36 மணிவரை
பூரம் காலை 6.56 மணிவரை
இராகுகாலம் 7.38-9.08 மணிவரை
சுபநேரம் 12.08-1.38 மணிவரை
முதலாம் கார்த்திகை திங்கள்,
சபரிமலை ஐயப்பன் விரதாரம்பம்

வளவன்

**மேடம்:** கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், மற்றவர்களின் மன நிலையை அறிந்து செயற்படு வீர்கள், தேக நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், கௌரவமான நாள்.

**இடபம்:** கனவுகள் நனவாக கந்தனை வழிபட வேண்டிய நாள், பிள்ளைகளின் தேவையறிந்து பூர்த்தி செய்வீர்கள், தொழிலில் முன்னேற்றம் காண பெரிதும் பாடுபடுவீர்கள்.

**மிதுனம்:** நண்பர்கள் மத்தியில் நல்ல பெயர் கிடைக்கும், பயணங்களின் போது பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படலாம்.

**கடகம்:** விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், பயணங்களால் பலனுண்டு, புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், உடன் பிறப்புக்கள் வழியில் உதவிகள் கிடைக்கும்.

**சிம்மம்:** புண்ணிய காரியங்களில் ஈடுபாடு காட்டுவீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும், நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.

**கன்னி:** விரும்பிய உணவுப் பொருட்களை சாப்பிடுவதில் ஆர்வம் காட்டுவீர்கள், புதிய அனுபவங்கள் ஏற்படும் நாள், பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும்.

**துலாம்:** நடப்பதெல்லாம் நன்மைக்கேயென நினைக்க வேண்டிய நாள், செலவுகள் அதிகரித்தாலும் அதற்காக கவலைப்பட மாட்டீர்கள், [illegible]க்கவர்களின் ஒத்து[illegible] கிடைக்கலாம்.

**விருச்சிகம்:** வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், வெளிநாட்டுத் தொடர்புகள் நன்மை தரும், சேமிப்பை அதிகரிக்க முற்படு[illegible] களின் [illegible] பெறலாம்.

**தனுசு:** உறவினர்கள் உங்களின் முன் னேற்றம் கண்டு ஆச்சரியப்படுவர், செய்தொழில் மேன்மையுண்டு, போசன சுகமுண்டு, கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள்.

**மகரம்:** அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், வரவேண் டிய பணவரவுகள் வந்து சேரலாம், தொழில் வளர்ச்சி கருதி புதிய திட்டங்களைத் தீட்டுவீர்கள்.

**கும்பம்:** நிதானத்துடன் செயற்பட்டு நிம்மதி காணவேண்டிய நாள், நீங்கள் நல் லவர் என நினைத்த ஒருவரே உங்க ளுக்கு விரோதமாக செயற்படலாம், பொறுப்புகள் அதிகரிக்கும்.

**மீனம்:** தெய்வீக சிந்தனை மேலோங் கும் நாள், நீண்ட நாளைய ஆசையொன்று நிறைவேறலாம், உறவினர் வழியில் மனதிற்கினிய செய்தியொன்று வந்து சேரலாம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மறுசீரமைக்கப்படும் இறைவரித் திணைக்களம்

ශ්‍රී ලංකා දේශීය ආදායම්
இலங்கை உள்நாட்டு இறைவரி
SRI LANKA INLAND REVENUE

இலங்கையின் உள்நாட்டு இறைவரித் திணைக்களம் பாரிய மறுசீரமைப்புக்கு உட்படுத்தப்பட்டுள்ளதுடன் பிராந்தியத்தில் சிறந்த இறைவரித் திணைக்களமாக திகழச் செய்யும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இதற்கமைவாக வருமான மேற்பார்வை ,மற்றும் நிர்வாக தகவல் கட்டமைப்பு (RAMIS) நிறுவும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது. மேலும், இறைவரித் திணைக்களத்தின் செயற்பாடுகளை புதிய கட்டிடத்துக்கு மாற்றும் செயற்பாடுகளையும் ஆரம்பித்துள்ளது.

இறைவரித்திணைக்களத்துக்கு புதிதாக நியமிக்கப்பட்டுள்ள பணிப்பாளர் நாயகம் வசந்தி மஞ்சநாயக்க கருத்து தெரிவிக்கையில்,

"நிதி அமைச்சுக்கு அருகிலுள்ள பகுதியில் அமைந்துள்ள புதிய வளாகத்துக்கு திணைக்களம் இடம்மாறவுள்ளது. இதற்காக 19.6 பில்லியன் ரூபா செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த திட்டம் பூர்த்தியடைந்தவுடன் இறைவரித் திணைகளமும் நிதி அமைச்சும் ஒரே வளாகத்தில் அமைந்திருக்கும்" என்றார்.

"சிங்கப்பூரின் NCS கம்பனியின் உதவியுடன் வருமான மேற்பார்வை மற்றும் நிர்வாக தகவல் கட்டமைப்பு (RAMIS) நிறுவும் நடவடிக்கையில் நாம் ஈடுபட்டுள்ளோம். இந்த திட்டத்துக்கமைய வரி அறவிடப்படும் முறையில் புரட்சிகரமான மாற்றம் ஏற்படுத்தப்படும் என்பதுடன் சகல வரி செலுத்துவோரும் ஒன்லைன் மூலமாக தமது கொடுப்பனவுகளை மேற்கொள்ள முடியும்" என மேலும் குறிப்பிட்டார்.

இந்த வருமான மேற்பார்வை மற்றும் நிர்வாக தகவல் கட்டமைப்புக்கான (RAMIS) மொத்த செலவினம் 4.2 பில்லியன் ரூபாவாக அமைந்துள்ளது.

இது சகல அமைச்சுகளுடனும் நிறுவனங்களுடனும் இணைக்கப்படும். இதன் மூலம் நாட்டில் சிறந்த வரி நிர்வாக முறை அமுல்படுத்தப்படும்.

# செலான் வங்கியின் வரிக்குப் பின்னரான இலாபம் ரூ.2.2 பில்லியனாக அதிகரிப்பு

SEYLAN BANK PLC
The bank with a heart

செலான் வங்கியானது 2014 செப்டெம்பர் 30-ம் திகதியன்று முடிவடைந்த 9 மாதங்களில் வருமான வரிக்கு முன்னரான இலாபமாக கிட்டத்தட்ட ரூபா 3,490 மில்லியனை பெற்றுக் கொண்டதன் மூலம் மனதில் பதியத்தக்க நிதிப் பெறுபேறுகளை பதிவு செய்திருக்கின்றது. அதேவேளை ரூபா 2,253 மில்லியன் வரிக்குப் பின்னரான இலாபமானது கடந்த வருடத்துடன் தொடர்புபட்ட 9 மாத காலப் பகுதியில் வங்கி பெற்றுக்கொண்ட ரூபா 1,536 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 47% அதிகரிப்பாக காணப்படுகின்றது.

இக் காலாண்டுக்கான (3ஆம் காலாண்டின்) வரிக்குப் பின்னரான இலாபத்தின் பெறுமதி ரூபா 1,041 மில்லியனாக பதிவு செய்யப்பட்டதுடன்கடந்த வருடத்துடன்தொடர்புபட்ட 3 மாத காலப் பகுதியில் அறிக்கையிடப்பட்ட ரூபா 534 மில்லியன வரிக்குப் பின்னரான இலாபத்துடன் ஒப்பிடுகையில் இது 95% வளர்ச்சியாகவும் உள்ளது.

ரூபா 6.79 பில்லியனாக காணப்பட்ட தேறிய வட்டி வருமானம் 2014 செப்டெம்பர் 30-ல் முடிவடைந்த 9 மாத காலப் பகுதியில் ரூபா 8.22 பில்லியனாக 21% இனால் அதிகரித்துள்ளது.


இதேவேளை,வரையறுக்கப்பட்ட தொழிற்பாடுகளுடன் இயங்கிவந்த 20 சௌகரிய வங்கியியல் நிலையங்கள் 2014-ம் ஆண்டில் முழுமையான கிளை அந்தஸ்து கொண்டவையாக தரமுயர்த்தப்பட்டுள்ளன. செலான் வங்கி இக் காலப்பகுதியில் 4 புதிய கிளைகளை திறந்துள்ளதுடன் மேலும் 5 கிளைகள் முற்றாக புதுப்பொலிவூட்டப் பட்டுள்ளன. அதேநேரம் இன்னும் 3 கிளைகள் வாடிக்கையாளர்களுக்கு மேலும் நட்புறவான அமைவிடங்களுக்கு இடம் மாற்றப்பட்டு இருக்கின்றன.

2014 செப்டெம்பர் 30-ம் திகதியில் இருந்தவாறு செலரன் வங்கியின் சேவை நிலைய வலையமைபபானது 155 கிளைகள், 170 ATM மையங்கள் மற்றும் 92 மாணவர் சேமிப்பு நிலையங்கள் ஆகியவற்றை உள்ளடக்கியதாக காணப்படுகின்றது.

## வர்த்தக உலகம்

ஆர்.எஸ்.கே.முருகதாஸ்

# SLIM விருது விழா; CBLக்கு பல விருதுகள்



2014 SLIM வர்த்தகநாம சிறப்பு விருதுகள் விழாவில் சிலோன் பிஸ்கட்ஸ் லிமிடெட் (CBL) நிறுவனம் 2 தங்க விருதுகள் உட்பட 8 விருதுகளை வென்று மீண்டும் ஒரு தடவை அதிகூடிய விருதுகளை தனதாக்கிக் கொண்டுள்ளது.

SLIM வர்த்தகநாம சிறப்பு விருது விழாவின் 13 வருடகால வரலாற்றில் ஒவ்வொரு நிகழ்விலும் அதிகூடிய விருதுகளை வென்றெடுத்து CBL அதன் கீர்த்தியை தக்க வைத்துக் கொண்டுள்ளது என சிலோன் பிஸ்கட்ஸ லிமிடெட் நிறுவனத்தின் சந்தைப்படுத்தல் மற்றும் விற்பனை பிரிவின் தலைவரும் குழும பணிப்பாளருமான நந்தன விக்கிரமகே தெரிவித்தார்.

CBL நிறுவனமானது பிஸ்கட், இனிப்புகள், சீரியல், சேதன உணவு பொருட்கள் மற்றும் பலவற்றை கொண்ட முன்னணி வர்த்தகநாமங்களை உள்நாடு மற்றும் சர்வதேச ரீதியாக உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தி வரும் துரிதமாக வளர்ந்து வரும் பெருநிறுவனமாக விளங்குகிறது.

இந் நிறுவனத்தின் மஞ்சி, ரிட்ஸ்பரி, லங்காசோய், சமபோஷ மற்றும் டியாரா போன்ற மிகப்பெரிய வர்த்தக நாமங்கள் அந்தந்த தயாரிப்பு பிரிவுகளில் சந்தை முன்னோடியாக விளங்குகிறன.

# கடந்த வாரம் பங்குச்சந்தை

கொழும்பு பங்குச்சந்தையானது கடந்த 43 மாதங்களில் பதிவாகிய உயர்ந்த பெறுமதியை கடந்த வாரம் பதிவு செய்திருந்தது.

வங்கிகள் மற்றும் நிர்மாணத் துறைசார்ந்த பங்குகளின் மீது முதலீட்டாளர்கள் அதிகளவு ஆர்வத்தை செலுத்தியிருந்தனர். இதற்கு முன்னர் கொழும்பு பங்குச் சந்தை 2011 ஏப்ரல் 18-ம் திகதி 7547.9 எனும் புள்ளிகளை பதிவு செய்திருந்தது.

நடப்பு நிதியாண்டின் முதலாம் அரையாண்டுக்கான கணக்கறிக்கைகள் வெளியாகிய வண்ணமுள்ளமை, குறிந்த நிறுவனங்களின் மீதான பங்குகளில் உயர்ந்த ஈடுபாட்டை பதிவு செய்ய ஏதுவாக அமைந்திருந்தது.

மேலும் வங்கி வட்டி வீதங்கள குறைந்தளவில் காணப்படுகின்றமையும் பங்குச்சந்தை கொடுக்கல் வாங்கல்களில் நாட்டம் அதிகளவில் காணப்படுவதற்கு ஏதுவாக அமைந்திருந்தது.

கடந்த வாரம் எயிட்கன் ஸ்பென்ஸ்ஹோல்டிங்ஸ், நெஸ்லே லங்கா மற்றும் DFCC வங்கி போன்ற முன்னணி நிறுவனங்கள் தமது அரையாண்டு அறிக்கைகளை வெளியிட்டிருந்தன. கடந்த வெள்ளிக்கிழமை நடவடிக்கைகள் நிறைவடைந்த போது அனைத்து பங்கு விலைச் சுட்டெண் 7,501.09 ஆகவும், S&P சிறிலங்கா 20 சுட்டி 4155.82 ஆகவும் பதிவாகியிருந்தன.

நவம்பர் 10ஆம் திகதியுடன் ஆரம்பமான கடந்த வாரத்தின் இறுதியில் மொத்த பங்கு புரள்வு பெறுமதியாக ரூ. 12,682,154,440 அமைந்திருந்தது. கடந்த வாரம் மொத்தமாக75,170 பங்குக் கொடுகக்கல் வாங்கல்கள் இடம்பெற்றன. இதில் 72,024 உள்நாட்டு கொடுக்கல் வாங்கல்களும், 3,146 வெளிநாட்டு கொடுக்கல் வாங்கல்களும் பதிவாகியிருந்தன.

கடந்த திங்கட்கிழமை சந்தை நடவடிக்கைகள்:

DFCC வங்கி, ஃபின்லேஸ் கொலம்பு மற்றும் டயலொக் ஆக்சியாடா ஆகியவற்றின் மீது விலைச் சரிவுகள் காரணமாக சுட்டிகள் மறை பெறுமதியை பதிவு செய்து நிறைவடைந்திருந்தன. புரள்வு பெறுமதி 1.8 பில்லியனை கடந்திருந்தது.

மறுநாள் செவ்வாய்க்கிழமை:

கொமர்ஷல் லீசிங் அன்ட் ஃபினான்ஸ், ஓவர்சீஸ் ரியால்டி மற்றும் டயலொக் ஆக்சியாடா ஆகியன உயர் பெறுமதியைப் பதிவு செய்தன.லங்கா ஐஓசி, சுவிஸ் டெக் மற்றும் டோக்கியோ சீமெந்து ஆகியவற்றின் மீது சிறியளவிலான் முதலீட்டாளர்கள் ஈடுபாட்டை பதிவு செய்திருந்தனர். வெளிநாட்டவர்கள தொடர்ந்து ஜோன் கீல்ஸ் பங்குகள் கொள்வனவில் ஆர்வம் செலுத்தியிருந்தனர்.

புதன்கிழமை சந்தையில்,

அக்சஸ் என்ஜினியரிங், பீபிள்ஸ் லீசிங் அன்ட் ஃபினான்ஸ் மற்றும் லங்கா ஐஓசி ஆகிய பங்குகளின் மீது உயர் விலை பதிவு காரணமாக சுட்டிகள் நேர் பெறுமதியில் நிறைவடைந்திருந்தன. உயர் தேறிய பெறுமதி வாய்ந்த மற்றும் நிறுவனசார் ஈடுபாடு செவ்ரொன் லுப்ரிகன்ட்ஸ், பீபிள்ஸ் லீசிங் அன்ட் ஃபினான்ஸ், டயலொக் ஆக்சியாடா, கீல்ஸ் ஹோட்டல்ஸ் மற்றும் சிட்டிசன் டிவலப்மன்ட் பிஸ்னஸ் பினான்ஸ் ஆகியவற்றின் மீது பதிவாகியிருந்தது. சிறியளவிலான முதலீட்டாளர்கள் ரேணுகா அக்ரி பூட்ஸ், ஏசியா அசெட் ஃபினான்ஸ் மற்றும் தப்ரோபேன் ஹோல்டிங்ஸ் ஆகியவற்றின் மீது தமது ஈடுபாட்டை பதிவு செய்திருந்தனர். இதேவேளை, கலப்பு ஈடுபாடு என்பது சன்ஷைன் ஹோல்டிங்ஸ் மற்றும் லங்கா ஐஓசி பங்குகளின் மீது பதிவாகியிருந்தது. வெளிநாட்டவர்கள் பீபிள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பங்குகள் கொள்வனவில் ஆர்வம் செலுத்தியிருந்தனர்.

மறுநாள் வியாழக்கிழமை

அபவி. சுட்டி 7,500 புள்ளிகளைக கடந்திருந்தது. புரள்வு பெறுமதி 4.0 பில்லியன் ரூபாவை கடந்திருந்தது. உயர் தேறிய பெறுமதி வாய்ந்த மற்றும் நிறுவனசார் ஈடுபாடு செலான் வங்கி, சம்பத் வங்கி, ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ், ஹற்றன் நஷனல் வங்கி, டயலொக் ஆக்சியாடா மற்றும் டிஸ்டிலரீஸ் ஆகியவற்றின் மீது பதிவாகியிருந்தது. சிறிய ளவிலான முதலீட்டாளர்களின் ஈடுபாடு அடம் இன்வெஸ்ட்மன்ட்ஸ் மற்றும பிசிஎச் ஹோல்டிங்ஸ் ஆகியவற்றின மீது பதிவாகியிருந்தது. இதேவேளை கலப்பு ஈடுபாடு என்பது பீபிள்ஸ் லீசிங் அன்ட் ஃபினான்ஸ், டோக்கியோ சீமெந்து மற்றும் டெக்ஸ்சர்ட் ஜேர்சி லங்கா ஆகியவற்றின் மீது பதிவாகியிருந்தது.

வாரத்தின் இறுதிநாளான வெள்ளிக்கிழமை:

லங்கா ஓரிக்ஸ் லீசிங் கம்பனி, வலிபல் வன் மற்றும் யூனியன் வங்கி ஆகியவற்றின் மீதான விலை உயர்வுகள் காரணமாக சுட்டிகள் நேர் பெறுமதியை பதிவு செய்திருந்தது. புரள்வு பெறுமதி 2.4 பில்லியன் ரூபாவாக பதிவாகியிருந்தது. உயர் தேறிய பெறுமதிய வாய்ந்த மற்றும் நிறுவனசார் ஈடுபாடு சிட்டிசன்ஸ் டிவலப்மன்ட் பிஸ்னஸ் ஃபினான்ஸ், ஏசிஎல் கேபிள்ஸ், டிஸ்டிலரீஸ், டோக்கியோ சீமெந்து, சொஃப்ட்லொஜிக் ஹோல்டிங்ஸ், யூனியன் வங்கி மற்றும் செலான் வங்கி வாக்குரிமையற்ற பங்குகள் ஆகியவற்றின் மீது பதிவாகியிருந்தது. இதேவேளை அக்சஸ் என்ஜினியரிங், டோக்கியோ சீமெந்து வாக்குரிமையற்ற பங்குகள் மற்றும் எம்ரிடி வோல்கர்ஸ் ஆகியவற்றின் மீது கலப்பு ஈடுபாடு பதிவாகியிருந்தது. வெளிநாட்டவர்கள் அக்சஸ் என்ஜினியரிங் பங்குகளை கொள்வனவு செய்வதில் அதிகளவு ஆர்வம் செலுத்தியிருந்தனர்.

கடந்த வார கொடுக்கல் வாங்கலகளில் ஓரியன்ட் காமன்ட்ஸ், எம்ரிடி வோல்கர்ஸ், ரேணுகா அக்ரி, மெட்ரெஸ். ஹொலி மற்றும் என்ட்ரஸ்ட் செக். போன்றன முதல் 5 சிறந்த இலாபமீட்டிய பட்டியலிடப்பட்ட கம்பனிகளாக பதிவாகியிருந்தன.

ரேணுகா ஹோல்டிங்ஸ் (சாதாரண), ட்ரேட் ஃபினான்ஸ். உடபுசல்லாவ, எஸ் எம் பி லீசிங் (சாதாரண) முற்றும் டெஸ் அக்ரோ (சாதாரண) போன்ற நிறுவனங்களின் பங்குகள் அதிகளவு நட்டமீட்டியதாகப் பதிவாகியிருந்தன.



கடந்த சனிக்கிழமை கொழும்பு பங்குபரிவர்த்தனையின் யாழ். கிளையில் பங்கு முதலீட்டில் ஆர்வமுள்ளவர்களுக்கான பயிற்சிப் பட்டறை இடம்பெற்றதைப் படத்தில் காணலாம். எதிர்வரும் சனிக்கிழமையும் பயிற்சிப் பட்டறை இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 129.52 | 132.40 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 202.48 | 208.30 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 160.46 | 165.75 |
| சுவிஸ் பிராங் | 133.38 | 138.23 |
| கனேடிய டொலர் | 113.22 | 117.03 |
| அவுஸ்திரேலிய டொலர் | 111.82 | 116.07 |
| சிங்கப்பூர் டொலர் | 99.63 | 102.88 |
| ஜப்பான் யென் | 1.11 | 1.14 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.12 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 35.65 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழா நாயகனை வாழ்த்துகின்றோம்



**சின்னத்தம்பி திரவியம் (B.A)SLPS 2-1**

அதிபர் கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பாடசாலை

முதல் நியமனம் கிளி/கோணாவில் அ.த.க. பாடசாலை
26.12.1985

கிளி பரந்தன் இந்து ம.வி-10.01.2001
கிளி/திருவையாறு ம.வி-05.01.2007
கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பாடசாலை

தன்னலமற்ற சேவை புரிந்து இன்று மணி விழா காணும் அதிபர் திரு.சி.திரவியம் அவர்களை மனமுவந்து வாழ்த்துவதில் நிறைவடைகின்றோம்.

அதிபர் சங்கம், கிளிநொச்சி மாவட்டம்.


# பொதுவேட்பாளராக போட்டியிட தயார்

(கொழும்பு)

எதிர்க்கட்சிகளின் ஜனாதிபதி பொது வேட்பாளராக போட்டியிட தாம் தயாரென்று இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே மாதுலுவாவே சோபித தேரரின் பொது வேட்பாளர் நிலைப்பாட்டுக்கு அர்ஜுன ரணதுங்க ஆதரவை வெளியிட்டுள்ளார்.

இந்தநிலையில் தான் எப்போதும் நாட்டுக்கு முன்னுரிமை வழங்குவதன் காரணமாக எந்தக் கட்சியும் பொதுமக்களும் விரும்பினால் பொதுவேட்பாளராக போட்டியிடத் தயார் என்று அர்ஜுன ரணதுங்க குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலைக்கு தகுதியானவன் என்று கருதினால் தாம் அதனை ஏற்றுக் கொள்ளத் தயார் என்றும் ரணதுங்க தெரிவித்துள்ளார்.

தாம் ஒரு போதும் பதவிக்காக பணியாற்றியதில்லை.

நாட்டை பாதுகாக்கும் விடயங்களையே முன்னெடுத்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

எவரும் தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்களை கொண்டிருந்தாலும் தற்போது நாட்டுக்கு பொதுவான தேவையாக நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழிப்பதே என்று ரணதுங்க தெரிவித்துள்ளார். (இ-5)


**ALLIANCE FRANÇAISE DE JAFFNA-**

af ONLY OFFICIAL CENTRE FOR FRENCH IN NORTHERN PROVINCE SINCE 1976

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்.

## பிரெஞ்சு மொழி




- கற்பதற்கு FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் உலகின் முதல்தர சர்வதேச நிறுவனம் AF மட்டுமே.
- 136+ நாடுகளில் 1040+ கிளைகள்.
- ஆசிரியர்கள்: யாழ்.பல்கலைக்கழக பிரெஞ் & ஆங்கில விரிவுரையாளர்கள் (பிரான்ஸ் நாட்டவரும்) சரியான உச்சரிப்பு
- இலங்கையில் AF மட்டுமே அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF,DALF)ஐ வழங்குகின்றது. வேறு இடங்களில் படிக்கிறவர்களும் எம்முடன் இணைந்துகொள்கிறார்கள். பிரெஞ்சு மொழிபெயர்புகள். AUDIO CDs & BOOKS இலவசமாக பாவிக்கலாம். யாரும் படிக்கலாம். ஒரிரு மாதங்களும்படிக்கலாம். முன்னரே அனுமதிகளைப் பெறவேண்டும்.

021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்



இவர்களுக்கு மணமகள் தேவை — கல்யாண மாலை — இவர்களுக்கு மணமகன் தேவை

**மணமகள் தேவை**

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: அவிட்டம்
கி.பா: 64 செவ் 7 இல்
உயரம்: 5'10"
தகைமை/தொழில்: A/L
தொ.இ: B/2059

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: உத்தராடம்
கி.பா: 20
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: BSc/மாவட்ட முகாமையாளர்
தொ.இ: B/2062

பிறப்பு: 19883 இந்து
நட்சத்திரம்: திருவோணம் 3
கி.பா: 46 சூரி,செவ் 1 இல்
உயரம்: 174cm
தகைமை/தொழில்: A/L (லண்டன் PR)
தொ.இ: B/2064

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: பூசம் 3
கி.பா: 36 செவ் 8 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: பொறியியலாளர் (ஓமான்)
எதிர்பார்ப்பு: சைவபோசனம்
தொ.இ: B/2073

**மணமகன் தேவை**

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
கி.பா: 61 சூரிசெவ் 1 இல்
உயரம்: 5'1"
தகைமை/தொழில்: CIMA/ கணக்காளர்
தொ.இ: G/3112

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: பரணி 1
கி.பா: 55 செவ் 7 இல்
தகைமை/தொழில்: A/L (சுவிஸ் PR)
தொ.இ: G/3114

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: திருவோணம்
கி.பா: 78 செவ் 7 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: MBBS/ வைத்தியர்
தொ.இ: G/3118

பிறப்பு: 1973 இந்து
நட்சத்திரம்: பூராடம்
கி.பா: 45
உயரம்: 5'1"
தகைமை/தொழில்: BA/ ஆசிரியர்
எதிர்பார்ப்பு: சைவபோசனம்
தொ.இ: G/3119

## கல்யாண மாலை

(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( [illegible] )



## அகவை 60 இல் அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்

**உயர்திரு. பொன்னம்பலம் ஞானதேசிகன்** (பிரதி அதிபர், யா/இந்துக் கல்லூரி)

**2014.11.17**



அகவை அறுபதில் அடி பதிக்கும் அன்பு நண்பனே!
பல்கலைக்கழகத்தில் இணைந்த நட்பு!
இன்பமும் துன்பமுமாய் பல்வேறு களங்கண்ட அரிய நட்பு!
புண்ணியப் பணியாம் ஆசிரியத் தொழிலில் தொடர்ந்த நட்பு!
அகவை அறுபதிலும் தொடரும் நட்பு!
பிரதேச எல்லையேது? மதபேத வாதமேது?
உன் நட்புக்கும் வாழ்வுக்கும் . . . .
நீதி, நேர்மை, நியாயம் நீ கொண்ட தாரக மந்திரங்கள்!
அன்றும் இன்றும் என்றும் மாறாத கொள்கைப் பற்று!
எம்மில் நீ நல்மணி!
உன் நினைவு எமக்கு என்றும் வழிகாட்டும் கலங்கரை விளக்கம்!
உன் போதனைகள் எமக்கென்றென்றும் முதுமைபெறா தமிழ்வேதங்கள்!
உன் வாழ்வு சிறக்கட்டும்!
உன் இல்லாள் மகவோடு இல்லம் விளங்கட்டும்!
நீடூழி வாழ்கவென வாழ்த்தும் உன் ஆருயிர் நண்பர்கள்.

திரு.செ.சேதுராஜா (யா/நெல்லியடி மத்திய கல்லூரி) திரு.ச.சிவனேஸ்வரன் (யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி),
திரு.க.அருந்தவபாலன்(யா/சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி) திரு.ஐ.தயானந்தராஜா (யா/இந்துக் கல்லூரி),
திரு.பொ.அருணகிரிநாதன் (யாழ் கல்வி வலயம்), திரு.அ.அகிலதாஸ் (நல்லூர் கல்விக் கோட்டம்),
திரு.சு.தர்மலிங்கம் (யா/வரணி இடைக்குறிச்சி ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாலயம்),
திரு.ம.ச.பத்மநாதன் (வவுனியா தமிழ் மகா வித்தியாலயம்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடனை திருப்பி செலுத்துமாறு கேட்ட கடை ஊழியர் மீது கடும் தாக்குதல்

(சாவகச்சேரி)


கடனைத் திருப்பி செலுத்துமாறு கேட்ட கடை ஊழியர் ஒருவர் தாக்கப்பட்டு காயங்களுக்குள்ளான நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை சாவகச்சேரியில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

சாவகச்சேரியில் அமைந்துள்ள பிரபல மின்சார பொருட்கள் விற்பனை செய்யும் விற்பனை நிலையம் ஒன்றில் அண்மையில் கடனுக்குப் பொருட்களைப் பெற்று விட்டு பணத்தை திருப்பிக் கொடுத்த வாடிக்கையாளர் ஒருவரிடம் கடை ஊழியர் பணத்தினை மீளச் செலுத்துமாறு கேட்டுள்ளார்.

இதன்போது குறித்த அவ்வாடிக்கையாளர் தனது உறவினர் ஒருவருடன் வந்து கடை ஊழியரை கண்மூடித்தனமாக தாக்கியதில் கடை ஊழியர் படுகாயங்களுக்கு உட்படுத்தப்பட்டார்.

இதேவேளை பொதுமக்களின் உதவியுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட கடை ஊழியர் இது தொடர்பாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றை பதிவு செய்தமைக்கமைய அவ்விரு நபர்களையும் பொலிஸார் கைது செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். இவ்வாறான சம்பவங்கள் யாழ். குடாநாட்டில் அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7-29)



நன்றி-அததெரண

# வரி விபரத் திரட்டை சமர்ப்பிக்கும் இறுதித் தினம் நவம்பர் மாதம் 30

## யாழ்.இறைவரித் திணைக்களம் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

**வருமான வரி செலுத்துவோர் வரி மதிப்பீட்டாண்டான 2013/2014 ஆம் ஆண்டுக்கான வருமான வரி விபரத்திரட்டுக்களை எதிர்வரும் 30 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் உரிய வரி கொடுப்பனவுக்கான பணம் செலுத்தும் படிவத்துடன் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் சமர்ப்பிக்க வேண்டுமென உள்நாட்டு இறைவரித் திணைக்கள யாழ்.பிராந்திய பொறுப்பு உதவி ஆணையாளர் திருமதி சு.சர்வேஸ்வரன் அறிவித்துள்ளார்.**

வரியை செலுத்தாமலோ அன்றி வரி விபரத்திரட்டை சமர்ப்பிக்காமலோ தட்டிக்கழிக்கப்படும் இடத்து தண்டப்பணம் அறவிடுவதற்கான ஏற்பாடுகளுக்கும் உள்நாட்டு இறைவரிச் சட்டத்தில் இடமுண்டு.

நவம்பர் 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை எமது அலுவலகம் திறந்திருக்கும் என்பதுடன் யாழ்.பிராந்திய அலுவலகம் அமைந்துள்ள வீரசிங்கம் மண்டபத்தின் கீழ்த்தளத்தில் அன்றையதினம் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை வருமான வரி திரட்டுக்களை சமர்ப்பிப்பதற்குரிய விசேட கருமபீடமொன்றை அமைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

எனவே உரிய வேளையில் வரிக் கொடுப்பனவுடன் வரி விபரத்திரட்டையும் சமர்ப்பித்து தண்டப்பணம் செலுத்துவதிலிருந்து தவிர்த்துக் கொள்ளுமாறு பொறுப்பு உதவி ஆணையாளர் கேட்டுள்ளார்.

அத்துடன் இறைவரித் திணைக்களத்தின் ஏனைய கிளைகளிலோ, கொழும்பு தலைமைக் காரியாலயத்திலோ வருமான வரிக் கோவைகளை வைத்திருப்போரது (தனிநபர், கம்பனி) விபரத்திரட்டுக்களையும் யாழ். பிராந்திய கிளையில் அன்றையதினம் பெற்றுக்கொள்வதற்கான ஒழுங்குகளும் செய்யப்பட்டுள்ளன. (இ

# இளைஞனைத் தாக்கிய குழுவினர் தொலைபேசியை எடுத்துச்சென்றனர்

(கரணவாய்)

இளைஞர் ஒருவரை தாக்கி தொலைபேசியை அபகரித்த இளைஞர் குழுவொன்றை நெல்லியடிப் பொலிஸார் தேடி வருகின்றனர்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

கடந்த திங்கட்கிழமை இரவு நெல்லியடி புளியடிச் சந்தியில் இளைஞர் ஒருவர் தனியாக வந்து கொண்டிருந்தார்.

இதேவேளை அவ் இளைஞர்களுக்கு எதிரே மோட்டார் சைக்கிள்களில் வந்த மேற்படி இளைஞர் குழுவொன்று அவ் இளைஞரை இடைமறித்ததுடன் அவர் மீது தாக்குதல்களையும் மேற்கொண்டனர்.

மேலும் தாக்குதலுக்குள்ளான இளைஞரை மிரட்டி 25 ஆயிரம் மிரட்டி 25 ஆயிரம் ரூபா பெறுமதியான கையடக்கத் தொலைபேசியை பறித்துச் சென்றுள்ளனர்.

தாக்குதலுக்குள்ளான இளைஞன் இது தொடர்பாக நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இதற்கமைவாகவே இவ் வன்முறைச் செயலில் ஈடுபட்ட இளைஞர் குழுவை நெல்லியடிப் பொலிஸார் தேடி வருகின்றனர். (இ-7-60)




## நாரந்தனை பொது நூலக புதிய கட்டடத்திறப்பு விழா

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு ஊர்காவற்றுறை பிரதேச சபையின் புளியங்கூடல் நாரந்தனை பொது நூலக புதிய கட்டட திறப்பு விழா இன்று திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு ஊர்காவற்றுறை பிரதேச சபைத் தவிசாளர் ம.ஜெயகாந்தன் தலைமையில் இடம்பெறவுள்ளது.


இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சில்வேஸ்திரி அலன்ரினும் சிறப்பு விருந்தினர்களாக ஊர்காவற்றுறை பல நோக்கு கூட்டுறவுச் சங்க தலைவர் தி.சுந்தரலிங்கம், ஊர்காவற்றுறை பனை தென்னை வள அபிவிருத்தி சங்க பொது முகாமையாளர் யூலின் தயாளன் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக புளியங்கூடல் மகாமாரி தேவஸ்தான பிரதம குரு வண ஆ.சிற்சபேசக்குருக்கள், நாரந்தனை பங்குத் தந்தை அருட்தந்தை ஞா.பீற்றர் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-5)

## இருதய ஆண்டவர் சனசமூக நிலைய புதிய கட்டடம் இன்று திறப்பு விழா

வடக்கின் வசந்தம் விசேட நிதியொதுக்கீட்டின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட இருதய ஆண்டவர் சனசமூக நிலைய புதிய கட்டடத் திறப்பு விழா இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு தலைவர் செ.லெனின் ரஞ்சித் தலைமையில் இடம்பெறவுள்ளது. இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சில்வெஸ்திரி அலன்ரினும் சிறப்பு விருந்தினராக ஊர்காவற்றுறை பிரதேசசபைத் தவிசாளர் மருதையினார் ஜெயகாந்தனும் கௌரவ விருந்தினராக ஊர்காவற்றுறை பிரதேசசபை உபதவிசாளர் இமானுவேல் பொன்னாண்டோ எபிலின் ஆல்பேட்டும் கலந்து கொள்ளவுள்ளனர். (இ

# "இனிப்பு நோயின் கசப்பு முகங்கள்" சாவகச்சேரியில் விசேட கருத்தரங்கு





உலக நீரிழிவு நோய் எதிர்ப்பு தினத்தையொட்டி சாவகச்சேரியில் விழிப்புணர்வு ஊர்வலமும் **இனிப்பு நோயின் கசப்பு முகங்கள்** எனும் கருப்பொருளிலமைந்த கருத்தரங்கும் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

சாவகச்சேரி சுகாதார பிரிவினரால் ஏற்பாடு செய்யப்பட்ட இவ் விழிப்புணர்வு ஊர்வலத்தில் யாழ். மாவட்ட 306 B1 லயன்ஸ் கழகமும் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் நோயாளர் நலன் புரிச் சங்கமும் இணைந்து ஈடுபட்டன.

சாவகச்சேரி பொதுச் சந்தையில் இருந்து முற்பகல் 11 மணிக்கு ஆரம்பித்த இவ் விழிப்புணர்வு ஊர்வலமானது நண்பகல் 12 மணிக்கு சாவகச்சேரி நகராட்சி மன்ற பொன்விழா மண்டபத்தை சென்றடைந்தது.

அதன் பின் ஆரம்பித்த கலந்துரையாடலில் நெஸ்ரல லங்கா நிறுவனத்தின் அனுசரணையாளர்களாக கலந்து கொண்டு இலவச இரத்தப்பரிசோதனை மேற்கொண்டிருந்தனர்.

அத்துடன் யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் வசந்தி அரசரட்ணம், வைத்திய அதிகாரிகள் மற்றும் லயன்ஸ் கழக அதிகாரிகள் எனப்பலர் கலந்து கொண்டு கருத்துரைகளையும் வழங்கியிருந்தனர். (இ-7-29)

# வயல் நிலங்களை நாசமாக்கும் நடவடிக்கை தடுத்து நிறுத்தப்படுமா?



யாழ்.ஊர்காவற்றுறை வீதி புனரமைப்பின்போது வீதியோரமாகவுள்ள கடல் சேற்று மண்ணை அள்ளி அல்லைப்பிட்டி சந்திக்கு அண்மையிலுள்ள வயல் நிலங்களில் கொட்டப்பட்டுள்ளது.

இவ்வாறு கொட்டப்பட்டுள்ள மண்ணில் உள்ள உப்பு மழைக்குக் கழுவப்பட்டு நிலத்திற்குள் செல்லுகின்றது.

ஏற்கனவே இப்பகுதி உவர் நிலமாக இருந்து காலங்காலமாக பண்படுத்தப்பட்டு நெற் செய்கை மேற்கொள்ளப்பட்டு திருத்தி வைக்கப்பட்டள்ள பகுதியாகும்.

அல்லைப்பிட்டியில் வடக்குப் பக்கம் உவர்நிலமாக மாறிவரும் நிலையில் உள்ளது. .

இப்போது கடல் சேறு இங்கு கொட்டப்பட்டுள்ளதால் நிரந்தரமாக உவர் நிலமாகும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

அத்துடன் அருகில் உள்ள வயல் நிலங்கள் கடந்த காலத்தில் நல்ல விளைச்சல் கொடுத்த பகுதியாகும்.

தற்போது பெய்துவரும் மழை காரணமாக உப்புக்கரைந்து அருகில் உள்ள வயல் நிலங்களில் படிந்து வயல் நிலங்களை உவர் நிலங்களாக மாற்றப் போகிறது.

அத்துடன் உப்பினால் நிலத்தடி நீரின் உப்புத் தன்மையையும் அதிகரித்து அல்லைப்பிட்டியின் நன்னீர் வளத்தையும் பாதிக்கப் போகிறது.

தீவுப்பகுதியின் ஏனைய பிரதேசங்களுக்கு அல்லைப்பிட்டி- மண்கும்பான் பகுதியிலிருந்து கணிசமான அளவு குடிநீர் வழங்கப்படும் நிலையில் எதிர்காலத்தில் தீவுப் பகுதியில் குடிநீர் தட்டுப்பாடு ஏற்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

ஆகையால் இவ்விடயம் தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் எடுத்து குறித்த கடல் சேற்று மண்ணை அகற்றி எமது நிலவளத்தையும் நீர்வளத்தையும் பாதுகாக்க உடன் நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாணத்தின் பேண்தகு அபிவிருத்திக்கான சவால்களும் எதிர்கொள்வதற்கான கல்வி முறைகளைக் கண்டறிதலும்

...கணிசமான எண்ணிக்கையான இலங்கையர்கள் இன்னமும் விவசாயம், கால்நடை உற்பத்தி, உள்நாட்டு மீன்பிடி போன்ற மழைவீழ்ச்சியை நம்பிய வருமான மூலங்களில் தங்கியிருக்கின்றார்கள்.

எதிர் காலத்தில், கடுமையான காற்றின் அதிகரிப்பு, வரட்சி மற்றும் மழைவீழ்ச்சி முறைகளில் ஏற்படும் மாற்றம் ஆகியவை அவர்களது உணவுப் பாதுகாப்பு, வாழ்வாதாரம் ஆகியவற்றில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என எதிர்வு கூறப்படுகின்றது.

விவசாய நிலங்கள் கைவிடப்படவேண்டியநிலை ஏற்பட்டிருப்பதால் பல்லாயிரக்கணக்கான மக்கள் தமது வாழ்விடங்களை விட்டு வெளியேறும் அவலநிலையும் காணப்படுகின்றது.

எதிர்காலத்தில், நாட்டின் பரந்துபட்ட கரையோரப் பிரதேசங்களில் மீன்பிடிக்கு கணிசமான பாதிப்பு ஏற்படுவதுடன் கடுமையான அலைகள், நீர்மட்டம் உயர்தல் ஆகியவற்றால் கரையோர உயிரத்தொகுதியும் பாதிக்கப்படக் கூடிய ஆபத்துள்ளது.

காலநிலை மாற்றம் காரணமாக இலங்கையின் கரையோர மற்றும் விவசாய மூல வளங்களில் ஏற்படும் சேதம் இந்த நூற்றாண்டின் இறுதியளவில் நாட்டின் பொருளாதாரத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 6% பாதிப்பை ஏற்படுத்தும் என்று ஆசிய அபிவிருத்தி வங்கியின் தெற்காசியாவுக்கான காலநிலை மற்றும் பொருளாதாரம் குறித்த பிந்திய அறிக்கை எச்சரித்துள்ளது.

### காலநிலை மாற்றத்தின் சமகால அனுபவங்கள்

அண்மைக்கால பத்திரிகைகள், தொலைக்காட்சிகள் தினம் தினம் நாட்டில் ஏற்பட்டுள்ள கடுமையான வரட்சி பற்றியே பேசுகின்றன. அவை வெளியிடும் புகைப்படங்களும், காட்டூன் சித்திரங்களும் வரட்சி நிலத்தின் வெடிப்புக்களையும், தண்ணீருக்காய் காத்திருக்கும் மக்களையும், நீருக்காய் அலையும் கால்நடை உயிரினங்களையும் காட்டுகின்றன.

வீடுகளின் கிணற்றில் தண்ணீர் இல்லை. குளங்களில், ஆறுகளில் தண்ணீர் இல்லை. குடிநீருக்காக மக்கள் அலைகிறார்கள். கால்நடைகள் குடிக்கத்தண்ணீரில்லாமல் இறக்கின்றன. இதற்கான முன்னேற் பா்டுகளை நாம்மேற் கொண்டோமா? மழைகாலத்தில் மிதமிஞ்சிய மழை நீரைச்சேமித்தோமா? ஊர்க்குளங்களையும், கோயில் கேணிகளையும் தூர் வாரினோமா? சில இடங்களில் தற்போது நடைமுறைப்படுத்தப்படும் இவ்வாறான நல்ல செயற்பாடுகளினை நாம், எதிர்காலத்தில் அனைத்து பிரதேசங்களிலும் முன்னெடுக்கவேண்டும்.

மழைகாலத்தில் கடலைச்சென்றடையும் நல்ல தண்ணீரை, வீடுகளில், பாடசாலைகளில், சனசமூக நிலையங்கள் மற்றும் பொது இடங்களில் சேமிப்பதற்கான முயற்சிகளை இனியாவது முன்னெடுக்க வேண்டும்.

பாடசாலைகளில், பல்கலைக் கழகங்களில் கோட்பாட்டு ரீதியில் கற்றதை, நடைமுறையில் பிரயோகிக்கவேண்டும். இது தொடரபாக பொதுமக்களுக்கு விழிப்பூட்டப்பட வேண்டும். கிராமத்து, நகரத்து இளைஞர்கள் இதில் கூடிய பங்காற்ற முடியும். எமதுநிலத்தில், நன்நீரை நீண்டகாலத்துக்கு நிலை நிறுத்தும் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும்.

அரசியல் வாதிகள், நீர்வளங்களின் பங்கீட்டில் அரசியல் செய்ய முனையக் கூடாது. பொதுநோக்கில் அனைத்து மக்களும் பயனடையும் வகையிலான செயற்றிட்டங்களை முன்னெடுக்கவேண்டும்.

### வடமாகாணத்தில் "பேண்தகு விவசாயம்"

பேண்தகு விவசாயம் தொடர்பாக எமது விவசாயிகள் அறிவூட்டப்பட வேண்டும். இலங்கையில் விவசாய நடவடிக்கைகளில் இரசாயன வளமாக்கிகள் மற்றும் இரசாயன கிருமிநாசினிகள் அதிகளவில் பயன்படுத்தப்படுத்தப்படுவதனால், குறுகிய காலத்தில் அதிக விளைச்சலைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கின்றபோதும், இவ்வுணவுகளை உண்ணும் மக்கள் அதிகளவில் சிறுநீரகநோய் மற்றும் புற்றுநோய்த்தாக்கத்திற்கு உள்ளாகின்றனர்.

இலங்கையில் இரசாயனவளமாக்கிகளின் பாவனை உயர்ந்த அளவிலுள்ள மாட்டங்களில் ஒன்றாக யாழ்ப்பாண மாவட்டம் காணப்படுகின்றது.

இதன்விளைவாக நிலத்தடிநீர் அதிகளவில் மாசடைகின்றது. மக்கள் அதிகளவில் புற்றுநோய்த் தாக்கத்திற்கு உட்பட்டு வருகின்றனர்.

வெள்ளப்பாதிப்பை எதிர்த்து நிற்கக்கூடிய பயிரினங்களை தெற்காசியா அறிமுகப்படுத்தவேண்டிய தேவை காணப்படுகின்றது. அத்துடன் கரையோரவலய முகாமைத்துவம் சிறப்பான முறையில் மேம்படுத்தப்பட வேண்டும்.

நோய் கண் காணிப்பு, தரைநீர்ப் பாதுகாப்பு, நீர் சுற்றுவட்டப்பயன்பாடு என்பனவற்றில் அதிகளவுக்கு கவனம்செலுத்த வேண்டியதேவை காணப்படுகின்றது.



திரு.ஆ.நித்திலவர்ணன்
விரிவுரையாளர்
கல்வியியல்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

சேதனவிவசாயம், நீரைச்சிக்கனமாக பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் விவசாயமுறைகள், மண பரிசோதனைகள், பயிர்ச்சிகிச்சை முறைகள், அறுவடைக்கு பின்னரான தொழில்நுட்பம் என்பன தொடர்பான அறிவும் செயன்முறை விளக்கமும் எல்லா விவசாயிகளுக்கும் வழங்கப்பட வேண்டும. (தொடரும்)

அதிமேதகு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களின்

பிறந்தின, பதவியேற்ற நாளை முன்னிட்டு அவர்களின் வாழ்வு சுபீட்சம் பெறவும் பணிகள் சிறக்கவும்

மேன்மை தங்கிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு அங்கஜன் இராமநாதனின் ஏற்பாட்டில் 18.11.2014 அன்று 14 ஆலயங்களில் பூஜை வழிபாடுகளும் மதியம் 12 மணிக்கு அன்னதானமும் இன்னும் பல நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. வடமாகாண சபை உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் ஒவ்வொரு பிரதேசங்களிற்கும் விஜயம் செய்து மக்களுடன் ஜனாதிபதியின் பிறந்த நாளை கொண்டாடவுள்ளார். இதில் சகல மக்களையும் கலந்து சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்

1. செல்வ சந்நிதி முருகன் கோவில்
2. கச்சாய் அம்மன் கோவில் (சாவகச்சேரி)
3. மூளாய் பிள்ளையார் கோவில்
4. மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில்
5. தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோவில்
6. தம்பட்டி அம்மன் கோவில் ( நாரந்தனை)
7. கைலாசப்பிள்ளையார் கோவில் (யாழ்ப்பாணம்)
8. கோண்டாவில் பேருந்து நிலையம்
9. துன்னாலை கலிகை முருகன் கோவில்
10. கீரிமலை சிவன் ஸ்ரீகோவில்
11. அரியாலை யுதாவியார் கோவில்
12. வல்லை வேவில் பிள்ளையார் கோவில்
13. நாகவிகாரை நயினா-தீவு
14. கிளிநகர் சித்திவிநாயகர் ஆலயம்






அங்கஜன் இராமநாதன்
சிறிலங்கா சுதந்திரக்கட்சியின்
யாழ் மாவட்ட பிரதான அமைப்பாளர்,
அங்கத்தவர்கள் மற்றும் ஆதரவாளர்கள்

(8342)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப்பரீட்சை-2014
## மாதிரி வினாத்தாள்- கிழக்கு மாகாணம்

**வரலாறு** | **பகுதி II** | **மூன்று மணித்தியாலம்**




1.மேலே தரப்பட்டுள்ள தேசப்படத்தில் பின்வரும் வரலாற்று சிறப்பு மிக்க விகாரைகள்,கோயில்கள் காணப்படும் இடங்களை இனம் கண்டு அவை குறித்து நிற்கும் ஆங்கில எழுத்துக்களை எதிரே உள்ள அடைப்புக்குள் எழுதுக.

1.குதுப்பினார் கோபுரம் காணப்படும் நகரத்தினைக் குறித்து நிற்கும் எழுத்து ( )

2.ஸ்வேதகொன் விகாரை அமைந்துள்ள நாட்டினைக் குறித்து நிற்கும் எழுத்து ( )

3.அங்கோர்வட் பௌத்த தலம் அமைந்துள்ள நாட்டினைக் குறித்து நிற்கும் எழுத்து ()

2. அடைப்புக்குள் தரப்பட்ட நபர்கள் தொடர்பாக ABCD யில் கேட்கப்படும் வினாக்களுக்கு விடை தருக.

(அலாவுதீன்கல்ஜீ,அக்பர்,ஜஹாங்கீர்,அகம்மதுஷா,கியாசுத்தின் பல்பன்,கஜினி முகம்மது)

A.தலைநகராக பீகாரை தெரிவு செய்த பாமினி அரசன்............................

B.ஆப்கான் பரம்பரையைச் சேர்ந்த சிறந்த ஆட்சியாளன்........................

C.11ஆங்கிலேயர் இந்தியாவுக்கு வந்து சூரத் எனும் இடத்தில் கோட்டையை அமைத்த போது ஆட்சி புரிந்த மன்னன் ..............................

D.இந்தியாமீது பதினேழு தடவைகள் போர் தொடுத்தவன்.................

3.இலங்கைக்கும்தென்கிழக்காசியாவிற்கும் இடையில் இருந்த தொடர்புகள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக.

4.மத்திய கால ஆசியாவில் முஸ்லிம் பேரரசு பலம் பொருந்தியதாக காணப்பட்டமைக்கான காரணங்கள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக.


9) 1.ABC எழுத்துக்களால் குறிப்பிடப்படும் சம்பவங்களுடன் தொடர்புபட்ட நபர்களின் பெயர்களை ஒழுங்கு முறையில் தருக.

A.ரஷ்யாவின் சான்சலர் பதவியில் அமர்ந்து லிபரல் வாதத்தை அடக்கிப் படையைப் பலப்படுத்தியவன்

B.கி.பி 1852 ஆம் ஆண்டு இத்தாலியில் பீட்மன்ட் அரசின் பிரதம மந்திரியானவன்

C. வடஇத்தாலி என்ற அரசை ஆரம்பித்து அதன் அரசனாக முடி சூட்டிக்கொண்டவன்

2.பின்வரும் ABCD ஆகிய எழுத்துக்களால் காட்டப்பட்டுள்ள கண்டுபிடிப்புக்குரிய நபர்களை அதே ஒழுங்கில் தருக.



A B C D

கைத்தொழில் புரட்சியால் ஏற்பட்ட பொருளா தார மாற்றங்கள் இரண்டினைக்குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக

4.பிரான்சியப்புரட்சிக்கு வழிவகுத்த சிந்தனையாளர்கள் மூவரை குறிப்பிட்டு அவர்களது சிந்தனை கருத்துக்கள் ஒவ்வொன்று தருக

10. 1)பின்வரும் வினாக்களுக்குரிய விடையினைத் தருக

A.இந்தியாவின் சுதந்திரப்போராட்டத்தில் முக்கிய நிகழ்வாக கொள்ளப்படும் சிப்பாய்க்கலகம் இடம் பெற்ற காலப்பகுதி யாது?

B. டயற் எனப்படும் இரு சபைகளைக் கொண்ட பாராளுமன்றம் காணப்படும் நாடு எது?

C.1959ஆம் ஆண்டில் சீனாவில் விவசாயத்துறையில் வளர்ச்சியை ஏற்படுத்துவதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட வேலைத்திட்டம் யாது?

2) அடைப்புக்குள் தரப்பட்டுள்ள நபர்களுடன் தொடர்பான பின்வரும் வினாக்களுக்குரிய விடையினை ABCD எனும் ஒழுங்கு முறையில் தருக.

(வாஸ்கொடகாம,ரூஸ்வெல்ட், பாலகங்காதரதிலகர், மகாத்மகாந்தி, சியங்-காய செக், நொபுனகா, சுரேந்திரநாத் பானர்ஜி, முட்சுக்கிதோ)

A.கோமிங்டாங் கட்சியின் சிறந்த தலைவராக விளங்கியவர்

B.ரஷ்ய ஜப்பான் யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்தவர்

C.1498 இல் கள்ளிக் கோட்டைத் துறைமுகத்தை வந்தடைந்தவர்

D.உலக அபிமானி என்ற பெயரால் அழைக்கப்பட்டவர்

3.இந்தியாவில் பிரித்தானிய ஆட்சியில் சுதந்திரம் பெறும் நோக்குடன் உருவான அரசியல் அமைப்புக்கள் இரண்டினைக்குறிப்பிட்டு விளக்குக

4.டொகுகாவா காலத்தில் சமூகப் பொருளாதார நிலைகள் பற்றிய இரு விடயங்களுக்கும் ஒவ்வொரு காரணிகள் தந்து விளக்குக.

# ஈழத்தமிழ் அரசியல் கைதிகளின் மீதும் ஜனாதிபதி கவனம் செலுத்த வேண்டும்

அண்மையில் இலங்கை நீதித்துறையினால் வழங்கப்பட்ட இந்திய மீனவக் கைதிகள் மீதான மரண தண்டனை தீர்ப்பு மீது ஜனாதிபதியின் காருண்ய கவனம் திரும்பி உள்ள இவ்வேளையில் அதே கவனம் பல தசாப்தகால சிறைக்கைதிகளாக உள்ள இலங்கை ஈழத்தமிழ் அரசியல் கைதிகள் மீதும் திரும்ப வேண்டும் என ஜனநாயக மக்கள் முன்னணி ஊடகச் செயலாளரும் கொழும்பு மாநகர சபை உறுப்பினரும் வீடமைப்பு நிலையியற் துறை தலைவருமான சி. பாஸ்க்கரா தெரிவித்துள்ளார்.

மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,இலங்கை நீதித்துறையால் வழங்கப்பட்ட மரணதண்டனைக்கு எதிர்ப்பு தெரிவித்து இந்தியா தமிழ்நாடு இந்திய அரசு பாரிய போராட்டங்களையும் பல கட்சிகளின் அழுத்தங்களும் பாரியளவில் இலங்கை மீது செலுத்திக் கொண்டிருக்கின்ற இவ்வேளையில் ஜனாதிபதியதியின் இந்திய மீனவர்கள் மீதான காருண்ய மரணதண்டனை நீக்கம், பொதுமன்னிப்புக் கருத்தானது வரவேற்கக் கூடியதும் போற்றக் கூடியதும் காலத்துக்கேற்ற ஒரு செயற்பாடாகவே நோக்க



வேண்டியுள்ளது.

இந்த மரண தண்டனை நீக்கத்துடன், பொது மன்னிப்பு செயற்பாடானது உட னடியாக எவ்வித கால விரயமும் இன்றி நடைமுறைப்படுத்த ஜனா திபதி முன்வரவேண்டும்.

இந்த ஜனாதிபதியின் பொது மன்னிப்புச் செயற்பாடானது உடன் நடைபெறின் இந்திய இலங்கை உறவுகளின் பாரிய இடைவெளி ஏற்பட்டதை ஈடுசெய்வதற்கான கைங்கரியமாக அமைவதுடன் உறவை மேம்படுத்தவும் வழிசெய்யும்.

அதேவேளை ஜனாதிபதியின் கவனம் இந்திய மீனவர்களின் விடுதலை மீது சென்றதை நூற்றுக்கு இருநூறு வீதம் வரவேற்கின்ற அதேவேளை யுத்தம் முடிந்து புலிகள் இல்லை என்ற சூழ் நிலையிலும் கூட பயங்கரவாத சந்தேக நபர்கள், புலிச் சந்தேக நபர்கள், ஆதரவாளர்கள், போராளிகள் என பல ஆயிரக் கணக்கானவர்கள் பல வருடங்களாக சிறையில் உள்ளனர்.

இதேவேளை கட்டளைகளைப் பிறப்பித்த புலிகளின் மூத்த தளபதிகள் இன்று அரசுடன் முக்கிய பொறுப்புடனும் அமைச்சுப் பதவிகளிலும் இருக்கின்ற இவ்வேளையில் ஒன்றுமறியாத கட்டளைகளை நிறைவேற்றியவர்களையும் ஆதரவாளர்களையும் சிறையில் அடைத்து வைப்பது எவ்விதத்திலும் நியாயமாகாது.

மேலும் அரசு ஜனாதிபதித் தேர்தலில் கூட்டமைப்பின் ஆதரவை கோரியுள்ள இவ்வேளையில் அரசின் ஒரு நல்லெண்ண செயற்பாடாகக் கூட இதனை கவனத்தில் கொண்டு நிவர்த்தி செய்ய ஜனாதிபதி தமது அரசியல் கைதிகளையும் விடுதலை செய்ய முன்வர வேண்டும் என அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

# புதிய ஆட்டோத் தரிப்பிடங்கள் நெல்லியடியில் சுழற்சி முறையில்

(கரணவாய்)

யாழ்.நெல்லியடியில் ஆட்டோக்களுக்குரிய தரிப்பிடங்கள் சுழற்சி முறையில் அமைக்கப்படவுள்ளது என வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையால் தீர்மானம் கொண்டு வரப்பட்டுள்ளது.

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் மாதாந்த கூட்டம் கடந்த புதன்கிழமை உப தலைவர் தலைமையில் நடைபெற்றபோதே மேற்படி தீர்மானம் கொண்டு வரப்பட்டுள்ளது.

இதில் ஆட்டோ தரிப்பிடம் பற்றிய தீர்மானம் உறுப்பினர்களால் முன்வைக்கப்பட்டபோது ஆட்டோக்களுக்கென தரிப்பிடம் இன்மையால் எங்கும் நிறுத்திவைக்கப்படுகிறது. இதனால் சாரதிகளுக்கிடையிலும் முறுகல் நிலை ஏற்படுவது வழமையாகவுள்ளது.

இதனைக் கருத்திற்கொண்டே சுழற்சி முறையில் தரிப்பிடங்கள் அமைக்கப்படவுள்ளன.

அதாவது ஒவ்வொரு இடங்களிலும் குறைந்தது 5 ஆட்டோக்கள் மட்டும் நிறுத்தப்பட்டு அவர்களது சேவைகளை செய்யவேண்டும் என தீர்மானம் கொண்டு வரப்ப ட்டுள்ளது.

அத்துடன் நெல்லியடி மரக்கறிச் சந்தை மற்றும் மீன்சந்தை என்பவற்றுக்கு பாதை அமைக்கப்பட வேண்டும் எனவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.மேலும் நெல்லியடி நகரத்தில் பொருத்தப்பட்டுள்ள 70 மின் விளக்குகள் தொடர்பான மின் கட்டணத்தை இலங்கை மின்சார சபையினரே பொறுப்பேற்க வேண்டும்.

வீதிகளில் ஒளிர விடப்படும் மின் விளக்குகளின் மின் கட்டணங் களை மின்சார சபையினரே பொறுப் பேற்க வேண்டும் என அண்மையில் வடக்குக்கு 3 நாட்கள் பயணத்தை மேற்கொண்ட ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கிளிநொச்சியில் நடைபெற்ற கூட்டத்தில்இவ்வாறுதெரிவித்திருந்தார்.

இதற்கமையவே நெல்லியடியில் ஒளிர விடப்படுகின்ற மின் விளக்குகளுக்கான மின் கட்டணங்களை இலங்கை மின்சார சபை பொறுப் பேற்க வேண்டும்.

மேலும் 2015 ஆம் ஆண்டுக்கான கேள்வி அறிவித்தல்கள் இம் மாத இறுதிக்குள் நிறைவடையும் எனவும் தீர்மானம் கொண்டு, வரப்பட்டது.

அதாவது நெல்லியடி பொதுச் சந்தை, இறைச்சிக் கடைகள் என்பவற்றின் கேள்வி விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கவுள்ளது என தெரிவிக்கப்பட்டிருந்தது.

இவ்வாறு பலதீர்மானங்கள்நிறைவேற்றப்பட்டதன் பின்னர் 3 மணிக்கு கூட்டம் அமைதியான முறையில் நிறைவடைந்தமையும் குறிப்பிடத்தக்கது. (இ-7-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதிபதியான விசாரணை நடத்தப்பட வேண்டும்

## நகுலேஸ்வரன் படுகொலை குறித்து ஆனந்தன் எம்.பி.வலியுறுத்து

(குருமன்காடு)

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் முன்னாள் போராளியான நகுலேஸ்வரன் தனது தனிப்பட்ட குடும்ப நலன்களை விடுத்து கிராம மக்களின் பொருளாதார மேம்பாட்டுக்காகவும், பொதுமக்களின் வளர்ச்சிக்காகவும் பலதரப்பட்ட பணிகளை செய்திருக்கிறார். பொதுப்பணிகளில் கூடியளவு அக்கறை காட்டியிருக்கிறார்.

குறிப்பாக காணி அபகரிப்புகள், வளப்பங்கீடுகளில் பாரபட்சம், குளறுபடி போன்ற விடயங்களுக்கு எதிராக குரல் கொடுத்திருக்கிறார் என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார்.


துப்பாக்கிச்சூட்டு சம்பவம் நடைபெற்ற பகுதிக்கு நேற்று முன்தினம் சென்று பார்வையிட்ட பின்னர் அப்பகுதி மக்களுடனும், நகுலேஸ்வரனின் குடும்பத்தினர், நண்பர்கள், உறவினர்களுடனும் துக்கம் விசாரித்து கலந்துரையாடிய பின்னர், ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

நகுலேஸ்வரனின் படுகொலையுடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் நால்வரை கைது செய்துள்ளதாகவும், படுகொலைக்கு பயன்படுத்திய ரி-56 வகை துப்பாக்கியை கண்டெடுத்துள்ளதாகவும் பொலிஸ் ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது.

சம்பவம் தொடர்பில் நீதி நியாயமாக விசாரணைகள் நடத்தப்பட்டு குற்றத்துடன் தொடர்புடைய அனைவரும் பொதுமக்களுக்கு அடையாளப்படுத்தப்படல் வேண்டும். அவர்கள் சட்டத்தின் முன்னால் நிறுத்தப்பட்டு தண்டிக்கப்பட்டு அவர்கள் தொடர்பில் பொதுமக்களுக்கு பகிரங்கப்படுத்தப்படல் வேண்டும்.

ஏனெனில் யுத்தம் முடிவடைந்து ஐந்தரை வருடங்களை கடந்து பயணித்துக்கொண்டிருக்கும் சாதாரண நிலையில், புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்ட முன்னாள் போராளிகளில் ஒருவர் மீது துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டு அவர் உயிரிழந்திருக்கும் முதலாவது சம்பவம் இதுவாகும். இச்சம்பவம் தொடர்பில், விடுவிக்கப்பட்டுள்ள போராளிகள் அனைவரும்



தத்தமது எதிர்காலம் தொடர்பில் அச்சமும் கவலையும் கொண்டுள்ளனர்.

வடக்கு முழுவதும் இச்சம்பவத்தால் ஒருவித பதற்றம் மேலோங்கி காணப்படுகின்றது.

எனவே பொதுமக்களின் அமைதியை, இயல்பு வாழ்க்கையை குழப்பியுள்ள துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தையும் படுகொலையையும் வன்மையாக கண்டிப்பதோடு, சட்டம் ஒழுங்கைப்பேணி பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு நீதியை பெற்றுக்கொடுக்க அரசு முனைய வேண்டும் எனவும் அவர் இதன் போது வலியுறுத்தியுள்ளார். (2-250)

## செட்டிகுளத்தில் நடைபெற்ற விழிப்புணர்வு பாதயாத்திரை



(குருமன்காடு)

வவுனியா சுகாதார திணைக்களத்தின் ஏற்பாட்டில் சர்வதேச நீரிழிவு நோய் எதிர்ப்பு தினத்தையொட்டி வவுனியா செட்டிகுளத்தில் விழிப்புணர்வு பாத யாத்திரையொன்று அண்மையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் வைத்திய அதிகாரிகள், சுகாதார திணைக்கள உத்தியோகத்தர்கள், பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

செட்டிகுளம் தள வைத்தியசாலையில் இருந்து ஆரம்பித்த பாத யாத்திரை செட்டிகுளம் பிரதேச செயலகம் வரை சென்றதுடன் அங்கு விழிப்புணர்வு கலந்துரையாடலொன்று இடம்பெற்றமையும் குறிப்பிடத்தக்கது. (2-250)

### தனிநபர் கடற்றொழில் அமைப்புக்கள் ஊக்குவிக்கப்படும்

மன்னார் மாவட்டத்தில் தனிநபர் கடற்றொழில் அமைப்புக்களை ஊக்குவித்து வருவதாக மன்னார் மாவட்ட நீர் வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரி பா.நிருபராஜ் தெரிவித்துள்ளார்.

எனவே கடற்றொழில் சார்ந்த அமைப்புக்களான இளைஞர் அமைப்பு, பெண்கள் கிராம அபிவிருத்திச் சங்கம்முதலான அமைப்புக்களைஊக்குவித்து வருவதாகஅவர்கூறியுள்ளார்.

அந்தவகையில்கடலட்டை,கொடுவா மீன், பாலைமீன் உள்ளிட்ட மீன் வளர்ப்பு முறைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இவ்வகையானமீன்உற்பத்திகளை மேற்கொள்வதற்கு பெரிய அளவிலான முதலீடுகள் தேவை. எனவே இங்கு தனிநபர் முதலீடுகளை மேற்கொள்ளும்போது பல்வேறு பிரச்சினைகள் ஏற்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (2)

## பூநகரி பிரதேச கலாசாரப் பேரவையின் இலக்கியப் படைப்புக்களின் வெளியீடு

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் பூநகரி பிரதேச செயலகமும் பிரதேச கலாசார பேரவையும் இணைந்து நடத்தும் மூன்று இலக்கியப் படைப்புக்களின் வெளியீட்டு நிகழ்வு நாளை செவ்வாய்க்கிழமை பி.ப 2 மணிக்கு பூநகரி மத்திய கல்லூரியில் பூநகரி பிரதேச செயலர் சி. சத்தியசீலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட செயலாளர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள் ளார்.

சிறப்பு விருந்தினர்களாக கிளிநொச்சி மாவட்ட செயலக மேலதிக அரசாங்க அதிபர் செ.ஸ்ரீநிவாசன், கிழக்குப் பல்கலைக்கழக முன்னாள் கலைப் பீடாதிபதியும் சிரேஷ்ட விரிவுரையாளருமான பேராசிரியர் சி. மௌனகுரு, யாழ்.பல்கலைக்கழக கல்வியியற்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி த.கலாமணி, பருத்தித்துறை பிரதேச செயலாளர் கவிஞர் இ.த.ஜெயசீலன், கிளிநொச்சி மாவட்ட செயலக கலாசார உத்தியோகத்தர் மா.அருள் சந்திரன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

இந் நிகழ்வில் செல்வி.பொ.நித்தியமதியின் வலிகளின் பொறி கவிதைக் தொகுதி வெளியீடும் பூநகரி கலா சாரப் பேரவையின் அறியா மலே குறும்பட வெளியீடும், சி.யேசுதாசனின் பூநகரி பிரதேச கூத்துக் கலைக் காவலர்கள் கள ஆய்வுக் கட்டுரை நூலும் வெளியீடு செய்யப் படவுள்ளது.

சிறப்பு நிகழ்வாக பேராசிரியர் சி.மௌனகுருவின் நெறியாளர் கையிலான நொண்டி நாடகம் இடம் பெறும். (அ-2)

## காலநிலை மாற்றத்திற்கு தீர்வு காண்பதற்கு காடுகளில் மீள்மர நடுகைத் திட்டம் அவசியம்

### வடமாகாணசபை உறுப்பினர் வை.தவநாதன் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

சூழலில் ஏற்பட்டு வரும் மாற்றங்கள் இன்று மனித வாழ்வுக்கு சவாலாக அமைந்து வரும் நிலையில் சூழலை பாதுகாக்கின்ற செயற்திட்டங்களில் முனைப்பு காட்ட வேண்டியது அவசியம்.அதற்கமைவாக இன மத அரசியல் வேறு பாடுகளுக்கப்பால் சூழலை பாதுகாக்க அனைவரும் ஒன்றுபட வேண்டும் என வடக்கு மாகாண சபை உறுப்பினர் வை.தவநாதன் தெரிவித்துள்ளார்.



தேசத்தின் நிழல் தேசிய மர நடுகைத்திட்டம் நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டது. வருடாவருடம் தேசிய ரீதியாக நவம்பர் மாதம் 15 ஆம் திகதி முன்னெடுக்கப்பட்டு வரும் மரநடுகைத் திட்டத்தில் ஒரு பகுதியாக நேற்று முன்தினம் சுமார் 30 ஆயிரம் மரக்கன்றுகள் நடும் நிகழ்வு கிளிநொச்சி மாவட்டத்தில் நடைபெற்றது.

இதில் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் கிளி/திருவையாறு மகாவித்தியாலயத்தில் ஆரம்பிக்கப்பட்ட நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

இலங்கை நாட்டில் இன்று 22 விகிதமான காடுகளே காணப்படுகின்றன. அதை 35 விகிதமாக மாற்ற வேண்டும் என்ற நோக்கின் அடிப்படையிலேயே இவ்வாறான திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. அதனூடாகவே நாட்டில் சடுதியாக ஏற்பட்டு வரும் இயற்கை மாற்றங்களை சீராக்க முடியும் என்ற உயரிய கொள்கைக்கமைவாக இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு நடைமு றைப்படுத்தப்பட்டு வருகின்றது. இன்று உலகளாவிய ரீதியில் ஏற்பட்டு வரும் காலநிலை மாற்றத்திற்கும் தீர்வு காணப்பட வேண்டுமாயின் காடுகள் மீள் மர நடுகைத் திட்டம் பெருமெடுப்பில் முன்னெடுக்கப்பட வேண்டும்.

[illegible] ங்களுக்கு முன்னர் குடிநீரை சுமந்து சென்று பாவிக்கின்ற நிலை ஏற்படும் என்று எவரும் எண்ணவில்லை. ஆனால் அதற்குப்பின்னர் சடுதியாக ஏற்பட்ட சூழல் மாற்றம் இன்று குடிநீரை விலை கொடுத்து வாங்கி சுமந்துகொண்டு செல்ல வேண்டிய நிலையை ஏற்படுத்தியுள்ளது. இந்த நிலை தொடருமானால் எதிர்காலத்தில் சுத்தமான சுவாசத்திற்கான வாயுக்களைக்கூட சுமந்துகொண்டு சென்று பாவிக்க வேண்டிய நிலை ஏற்படும். எனவே அவ்வாறான அபாயகரமான மாற்றங்களை எதிர்கால சந்ததியினர் எதிர்கொள்வதை தடுப்பதற்காக இன்றே திட்டங்களை வகுத்து செயற்படுத்த வேண்டும். தவறின் எதிர்காலத்தில் மனித வாழ்க்கையே கேள்விக்குறியாக்கிவிடும். எனவே இவ்வாறான நல்ல திட்டங்களை இன மத மொழி அரசியல் வேறுபாடுகளுக்கப்பால் செயற்படுத்த வேண்டும். இதில் ஏதேனும் ஒரு காரணம் முன்னிலைப்படுத்தப்பட்டு திட்டங்கள் தடைப்படுமானால் எதிர்கால சந்ததியினருக்கு மாசுபட்ட இருண்ட யுகத்தையே கையளிக்க வேண்டிவரும் என அவர் மேலும் தெரிவித்தார்.(2-29)




## குடும்பஸ்தர் மீது வாள்வெட்டு

வவுனியா, புளியங்குளம், பிள்ளையார் குடியிருப்பு பகுதியில் நேற்று முன்தினம் இரவு குடும்பஸ்தர் மீது வாள் வெட்டுத்தாக்குதல் நடைபெற்றுள்ளதாக புளியங்குளம் பொலிஸார் தெரிவித்தனர். இது தொடர்பாக தெரியவருவதாவது,

கந்தையா செல்வராசா என்ற குடும்பஸ்தரின் வீட்டினுள் புகுந்த சிலர் அவர் மீது சரமாரியாக வாளால வெட்டிவிட்டு தப்பியோடியுள்ளனர். படுகாயமடைந்தவர் புளியங்குளம் வைத்தியசாலையில் நோயாளர் காவு வண்டி மூலம் வவுனியா கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து கொழும்புக்கு மாற்றப் பட்டுள்ளார். இச் சம்பவம் தொடர் பாக தாம் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர் என்று புளியங்குளம் பொலிஸார் தெரிவித்தனர். (2-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப்பரீட்சை-2014
# மாதிரி வினாத்தாள் - கிழக்குமாகாணம்

## விஞ்ஞானம் ஒரு மணித்தியாலம்

**பகுதி I**


**எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**

01. இலங்கையில் காணப்படும் நாகபாம்பிற்கு வழங்கப்படும் விஞ்ஞானப் பெயரீட்டு முறைமையில் சரியான பெயரீட்டு முறை எது?
1. NaJa NaJa 2. *Naja naja* 3. Naja Naja 4. naja naja

02. பின்வரும் கலப்புன்னங்கம் ஒன்று.
மென்சவ்வினால் சூழப்பட்டது, சிறுகட்டுக்கள் போன்ற வடிவுடையது, கடத்தற் செயற்பாட்டை செய்யும் மையமாக தொழிற்படும் இப்புன்னங்கம்
1. இழைமணி 2. கொல்கி உடல்
3. கரு 4. அகமுதலுருச்சிறுவலை

03. தாவர வேர் மயிருள் நீர் உட்புகவிடும் செயற்பாடு.
1. பரவல் 2. உயிர்ப்பான அகத்துறிஞ்சல்
3. பிரசாரணம் 4. திணிவுப்பாய்ச்சல்

04. உருவில் உள்ள அமைப்பு எத்தாவரப் பகுதியின் குறுக்குவெட்டுமுகம் ஆகும்.



1. ஒருவித்திலைத் தாவரத்தண்டு
2. இருவித்திலைத் தாவரத்தண்டு
3. ஒருவித்திலைத் தாவர வேர்
4. இருவித்திலைத் தாவர வேர்

05. A,B,C,D ஆகிய 4 நபர்களின் சிறுநீர் மாதிரிகள் பெனடிக் கரைசலுடன் சேர்த்து பரிசோதனைக்கு உட்படுத்தியபோது முறையே நீலம், சிவப்பு, பச்சை, செம்மஞ்சள் ஆகிய நிறங்கள் பெறப்பட்டன. இப் பெறுபேறுகளுக்கமைய நீரிழிவு நோய்த் தாக்கத்திற்கு ஆளாகாத நபர்.
1. A 2. B 3. C 4. D

06. மாணவர்குழு ஒன்று ஆவியிர்ப்பு உறிஞ்சன்மானியின் உதவியுடன் ஆவியுயிர்ப்பு பரிசோதனை ஒன்றை அறை ஒன்றினுள் மேற்கொண்டது. இதன் போது 5mm $min^{-1}$ எனும் ஆவியுயிர்ப்பு வீதம் பெறப்பட்டது. மீண்டும் இவ்வுபகரணத்தை காற்றோட்டமுள்ள இடத்தில் வைத்து பரிசோதனை மேற்கொள்ளும் போது கிடைக்கக் கூடிய ஆவியுயிர்ப்பு விதமாக அமையக் கூடியது.
1. 3mm $min^{-1}$ 2. 4mm $min^{-1}$ 3. 5mm $min^{-1}$ 4. 6mm $min^{-1}$


07. டெங்குக் காய்ச்சலுக்கான குருதிப் பரிசோதனையின் போது குருதியின் எக்கல வகை பரிசோதனைக்கு உள்ளாக்கப்படும்.
1. நடுநிலை நாடி 2. மூலநாடி 3. குருதிச்சிறுதட்டு 4. செங்குருதிக்கலம்

08. வாழ்வுக்காலம் முடிந்த செங்குருதிக் கலம் ஈரலிலும், மண்ணீரலிலும் அழிக்கப்படுவது போல, நுண்ணங்கியை விழுங்கிய நிணநீர்க்கலம் அழிக்கப்படும் இடம்.
1. ஈரல் 2. மண்ணீரல் 3. சிறுநீரகம் 4. நிணநீர்கணுக்கள்

09. இரைப்பைச் சுவரினால் சுரக்கப்படும் ஐதரோக்குளோரிக்கமிலத்தின் செயற்பாடாக அமையாதது.
1. நொதிய தொழிற்பாட்டிற்கான அமில ஊடகத்தை வழங்கல்
2. குழந்தைகளில் பாலைத் திரளச் செய்தல்
3. தேவையற்ற நுண்ணங்கிகளை அழித்தல்
4. சிறிய என்புத் துண்டுகளைக் கரைத்தல்

10. பக்றீரியாக்களின் கலச்சுவரில் காணப்படும் இரசாயனப் பதார்த்தம் பின்வருவனவற்றில் எது?
1. செலிலோசு 2. பெக்டின் 3.மியூரின் 4. கைற்றின்

11.




தோல் அகற்றப்பட்ட உருளைக்கிழங்கு துண்டொன்று பிரசாரண பரிசோதனையை திட்டமிடும் நோக்கில் பின்வருமாறு செப்பம் செய்யப்பட்டது. இவ் உபகரணத் தொகுதியில் சில மணி நேரத்தின் பின் உமது அவதானம் யாது?
1. உப்புக்கரைசலின் நீர்மட்டம் உயர்ந்தது
2. உப்புக்கரைசலின் நீர்மட்டம் குறைந்தது
3. பாத்திரத்தின் நீர்மட்டம் உயர்ந்தது
4. திரவ மட்டங்களில் மாற்றம் இல்லை

12. பூக்களால் சுவாசிக்கக் கூடிய அங்கிக் கூட்டம் எது?
1. மீன் , திமிங்கிலம் 2. திமிங்கிலம் , தேரை
3. மீன், வாற்பேய் 4. வாற்பேய், திமிங்கிலம்


13, 14 ஆம் வினாக்கள் கீழ்வரும் அட்டவணையை துணையாகக் கொண்டது.

| மூலகம் | A | B | C | D |
|---|---|---|---|---|
| புரோத்தன்களின் எண்ணிக்கை | 11 | 09 | 08 | 08 |
| இலத்திரன்களின் எண்ணிக்கை | 11 | 10 | 08 | 10 |
| நியூத்திரன்களின் எண்ணிக்கை | 12 | 10 | 09 | 10 |

13. எம் மூலங்கள் அயன் நிலையில் காணப்படுகின்றன.
1. A,B 2. B,C 3. C,D 4. B,D

14. ஒரே மூலக அணுக்கள் எவை?
1. B,C 2. C,D 3. A,C 4. B,D

15.




A, M என்னும் எழுத்துக்களின் நியமக் குறியீடுகளாக அமைவது முறையே.
1. H,O 2. C,H
3. H,N 4. N,O

16. ஒட்சிசனின் சார்மூலக் கூற்றுத்திணிவு 32. 3.2 g ஒட்சிசன் மூலக்கூறில் உள்ள ஒட்சிசன் அணுக்களின் எண்ணிக்கை யாது?
1. $1.204 \times 10^{23}$ 2. $12.04 \times 10^{22}$ 3. $6.02 \times 10^{22}$ 4. $6.02 \times 10^{23}$

17. A. $CaCo_{3(s)} \xrightarrow{\Delta} CaO_{(s)} + Co_{2(g)}$

B. $2Mg_{(s)} + O_{2(g)} \rightarrow 2Mgo_{(s)}$


C. $Mg_{(s)} + H_2O_{(\ell)} \rightarrow Mgo_{(s)} + H_{2(g)}$

மேற்படி தாக்கங்களில் A,B,C ஆகிய தாக்கவகைகள் முறையே.
1. ஒற்றை இடப்பெயர்ச்சி, இரட்டை இடப்பெயர்ச்சி, பிரிகை
2. ஒற்றை இடப்பெயர்ச்சி, பிரிகை, சேர்க்கை
3. பிரிகை, சேர்க்கை, ஒற்றை இடப்பெயர்ச்சி
4. பிரிகை, சேர்க்கை, இரட்டை இடப்பெயர்ச்சி

18. தீப்பாறைகள் அடையற்பாறைகளிலும் பார்க்க வன்மையானவை. பின்வரும் பாறை வகைகளில் வன்மையான பாறை வகை எது?
1. சுண்ணக்கற்பாறை 2. சேற்றுக்கல் 3. பசோல்ற் 4. உருண்டைக் கற்திரள்

19. எந்த வகைத் தீயையும் அணைக்கப் பயன்படும் தீயணை கருவி எது?
1. ஏலோன் தீயணை கருவி 2. சோடா – அமில தீயணை கருவி
3. நுரை தீயணை கருவி 4. உலர்பொடி தீயணை கருவி


20




மேற்காட்டப்பட்ட ஒழுங்கமைப்பு ஏற்படுத்தி மறுநாள் அவதானிக்கப்பட்டபோது இரும்பாணியைச் சுற்றி நீல நிறம் அவதானிக்கப்பட்டது. உலோகத்துண்டு X ஆக இருக்கக்கூடியது.
1. Zn 2. Cu 3. Mg 4. Al

21. சத்திர சிகிச்சையின் போது பயன்படுத்தப்படும் லேசர் கதிரினை உற்பத்தி செய்யப் பயன்படும் வாயு எது?
1. Ne 2. Ar 3. He 4. Kr

22.




மேற்காட்டப்பட்ட கரைசல்களில் நீர் – சோக் தூள் கரைசலாக அனுமானிக்கக் கூடியது எது?
1. A 2. B 3. C 4. D

23. 200 ml கரைசலில் 8g NaoH கரைந்துள்ளது. இக்கரைசலின் செறிவு mol $dm^{-3}$ ல் எவ்வளவு?

(Na - 23, O = 16, H - 1)

1. $\frac{40 \times 1000}{8 \times 200}$ 2. $\frac{8 \times 1000}{40 \times 200}$ 3. $\frac{200 \times 40}{8}$ 4. $\frac{40}{8 \times 200}$

24. பின்வரும் காரணிகளில் கரைதிறனில் செல்வாக்கு செலுத்தாத காரணி எது?
1. வெப்பநிலை 2. கரைப்பானின் தன்மை
3. கரையத்தின் பௌதீக நிலை 4. கரையத்தின் தன்மை

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5 மீனவர்களுக்கு பொதுமன்னிப்பு வழங்குவது தொடர்பான தகவல்களில் உண்மையில்லையாம்

## மொஹான் சமரநாயக்க தெரிவிப்பு

கொழும்பு மேல்நீதிமன்றத்தினால் மரண தண்டனை விதிக்கப்பட்ட ஐந்து தமிழக மீனவர்களுக்கும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பொதுமன்னிப்பு வழங்கியுள்ளதாக கடந்த வெள்ளிக்கிழமை இந்திய ஊடகங்களில் வெளியான தகவல்களை ஜனாதிபதி செயலகம் நிராகரித்துள்ளது.

ஜனாதிபதி மகிந்த ரர்ஜபக்ஷ இந்த ஐந்து தமிழக மீனவர்களுக்கும் பொதுமன்னிப்பு அளித்து விடுதலை செய்ய உத்தர விட்டுள்ளதாக, ஊவா மாகாண அமைச்சர் செந்தில் தொண்டமான் இந்திய ஊடகங்களிடம் தகவல் வெளியிட்டிருந்தார்.

ஆனால், இந்த ஐந்து தமிழக மீனவர்களுக்கும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பொதுமன்னிப்பு வழங்கி விட்டதாக வெளியான செய்திகளில் எவ்வித உண்மையும் இல்லை என்று ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் மொஹான் சமரநாயக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள அவர்,

"இவ்விடயம் தொடர்பில் பல்வேறு தெரிவுகள் குறித்து ஜனாதிபதி ஆலோசனை நடத்தி வருகிறார்.

மரணதண்டனையை ஆயுள் தண்டனையாக குறைத்தல், எஞ்சியுள்ள தண்டனைக் காலத்தை இந்தியாவில் கழித்தல், அதன் மூலம் ஜனாதிபதியின் பொதுமன்னிப்பை பெறும் வாய்ப்புகள் குறித்தும் ஆலோசிக்கப்படுகிறது என்று மேலும் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, இந்த ஐந்து மீனவர்களையும் எவ்வித நிபந்தனையுமின்றி உடனடியாக விடுவிக்க வேண்டும் என இந்தியா வலியுறுத் தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

# ஊடக அடக்குமுறை தொடர்பான குற்றச்சாட்டில் உண்மையில்லை

## அமைச்சர் கெஹலிய மறுப்பு

(கொழும்பு)

ஊடகங்கள் அடக்குமுறைக்கு உட்படுத்தப்படுவதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களில் உண்மையில்லை என ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

ஊடக அமைச்சிற்கான நிதி ஒதுக்கீடு தொடர்பிலான வரவு செலவுத்திட்ட விவாதத்தில் பங்கேற்று உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்தார்.

ஊடக சுதந்திரத்தை அரசாங்கம் முடக்க முயற்சிப்பதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களில் எவ்வித உண்மையும் கிடையாது என அவர் தெரிவித்துள்ளார்.



பாராளுமன்ற சிறப்புரிமைகள் என்ற போர்வையில் எதிர்க்கட்சிகள் அரசாங்கத்தின் மீது குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வருவதாகத் தெரிவித்துள்ளார்.

ஊடகச் சுதந்திரம் கிடையாது என சிலர் குற்றம் சுமத்தி வருகின்ற போதிலும் ஞாயிறு பத்திரிகைகளைப் பார்த்தால் ஊடகச் சுதந்திரம் எவ்வாறு காணப்படுகின்றது என்பதனை புரிந்து கொள்ள முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஊடகவியலாளர்களுக்கு லப்டொப் கணனிகள் வழங்கப்பட்ட போது உரிய விதிகள் முறைகள் பின்பற்றப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# தமிழ், முஸ்லிம் மக்களையும் நம்பியே அரசுக்கு எதிராக களமிறங்கவுள்ளோம்

## ஐ.தே.க.எம்.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்தை வீழ்த்தும் பொது எதிரணியில் சிங்கள மக்களை போல் தமிழ், முஸ்லிம் மக்களையும் நம்பியே களமிறங்குகின்றோம்.

பொதுஎதிரணியில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் எம்முடன் கைகோர்க்க வேண்டும் என தெரிவிக்கும் ஐக்கிய தேசியக் கட்சி எமது அரசாங்கத்தில் தமிழ் மக்களின் இனப் பிரச்சினைக்கான தீர்வு எட்டப்படும் எனவும் குறிப்பிட்டுள்ளது.

பொது எதிரணிக் கூட்டிற்காக தமிழ் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவீர்களா? இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் பொது எதிரணி என்ன செய்யப் போகின்றது என்பன தொடர்பில் வினவிய போதே ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரும் பாராளுமன்ற உறுப்பினருமான லக்ஸ்மன் கிரியெல்ல மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரசாங்கத்தின் மீதான அதிருப்தி சிங்கள மக்களுக்கு இருக்கின்றது. ஆனால், அதைவிட அதிகமான வெறுப்பும் அதிருப்தியும் தமிழ், முஸ்லிம் மக்களுக்கே இருக்கின்றது. அவர்கள் ஒரு சந்தர்ப்பத்திலும் அரசாங்கத்தை ஆதரிக்கப் போவதில்லை.

இன்று வடக்கு; கிழக்கில் இடம்பெறும் அடக்கு முறைகளும் இனவாதச் செயற்பாடு களும் முற்றிலும் அரசாங்கத்தினா லேயே மேற்கொள்ளப்படுகின்றது. இவற்றில் சிக்கித் தவிக்கும் சிறு



பான்மை மக்கள் இனியும் இந்த அரசை ஆதரிக்கப் போவதில்லை.

தமிழ் - முஸ்லிம் மக்களையும் நம்பியே நாம் அரசாங்கத்திற்கு எதிரான போராட்டத்தில் களமிறங்கியுள்ளோம். வெறுமனே சிங்கள மக்களின் வாக்குகளையும் ஆதரவையும் நம்பி அரசாங்கம் கூட செயற்படுவதில்லை. சிறுபான்மை மக்களின் வாக்குகளும் கட்டாயமானது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# இன்று ஒரு தகவல்

## கடவுளுக்கு மரியாதை

ஒருவர் வெளியூர் சென்று அழகான ஆண்டவன் சிலையொன்றை வாங்கிக் கொண்டு வந்தார்.

அவர் தனது வீட்டிற்கு முன்புறமாக ஒரு சிறிய கோயிலை அமைத்தார். அதனுள் அந்தச் சிலையை வைத்தார்.

தினமும் அதற்கு முன்னால் போய் நின்று வழிபடுவது அவரது வழக்கமாக இருந்தது.

நாட்கள் செல்ல அருகில் இருந்த அயலவர்கள் தினமும் அங்கே வந்து சாமி வழிபாடு செய்ய ஆரம்பித்தார்கள்.

ஒருநாள் இவர் அந்தச் சிலையை எடுத்து சுத்தம் செய்யும்போது... அது தவறிக்கீழே விழுந்து விட்டது. விழுந்த சிலையின் கை உடைந்தும் விட்டது.

என்ன செய்யலாம் என்று யோசித்தார்.

சரி பரவாயில்லை என்று சொல்லிவிட்டு அந்தச் சிலையை தூக்கி ஒரு ஓரமாக போட்டு விட்டார்.

மீண்டும் அதே ஊருக்குப் போய் அதே உருவில் இன்னொரு சிலையை வாங்கிக் கொண்டு வந்தார். அதை பழைய இடத்தில் வைத்தார். பழையபடி தினமும் சாமி கும்பிட ஆரம்பித்தார்.

கை உடைந்த சிலையை திரும்பிப் பார்ப்பதில்லை. இது ஒரு விதமான பக்தி.

இது மாதிரி பக்தர்கள் தெரிந்து கொள்ள வேண்டிய செய்தி ஒன்று உள்ளது.

இது ஒரு நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்னால் நடந்த ஒரு நிகழ்வு.

ஒரு கோயில் அங்கே ஒரு அர்ச்சகர். அந்தக் கோயிலில் தினமும் ஒரு பழக்கம்.

இரவு வேளையிலே இறைவன் விக்கிரகத்தை எடுத்துப் படுக்கையிலேயே சயனிக்க வைக்கிறது.

ஒருநாள் இரவு அவர் விக்கிரகத்தை எடுத்துக் கொண்டு மெதுவாகப் போகும்போது கால் தவறி விழுந்துவிட்டார்.

அவருக்குக் காலில் எதுவுமே நடக்கவில்லை. ஆனால், மீண்டும் அந்தச் சிலையின் ஒரு கை உடைந்துவிட்டது.

அவர் பதறிப் போனார். மறுநாள் அங்கே இருந்தவர்கள் ''சேதமடைந்த சிலையை வழிபடக்கூடாது. அதனால் வேறொரு சிலையை இங்கே வைத்து வழிபடலாம்'' என்றார்கள்.

இருந்தாலும் அர்ச்சகர் சற்று யோசனை செய்து விட்டு அங்கே இருந்த சிறிய பாமரர் பட்டாச்சாரியாரிடம் சென்று ஒரு தடவை இது தொடர்பாக யோசனை கேட்டுக் கொண்டு வரலாம் என எண்ணினார்.

அவரிடம் போய் யோசனை கேட்டார்.

நடந்தவற்றை விபரமாக எடுத்துரைத்தார்.

இதைக்கேட்ட பெரியவர் சொன்னார்; ''ஏன் ஐயா, உனது மருமகனுக்கு கை உடைந்து போனால் நீ என்ன செய்வாய்? உடனே அவரைத் தூக்கி கங்கையிலே வீசிவிடுவாயா? அப்படிச் செய்து விட்டு உன் பெண்ணுக்கு இன்னொரு திருமணம் செய்து விடுவாயா?என்றார்.

வந்தவர் தலையை சொறிந்தார்.

உன் சொந்த உறவினருக்கு எப்படி அன்பாக செய்வாயா அப்படித்தான் இறைவனுக்கும் செய்ய வேண்டும்.

"அப்படியென்றால்... ? "

"அந்தச் சிலையையே சரி செய்து வழிபடுவது தான் முறை "

அர்ச்சகர் தெளிவோடு திரும்பி ஆலயம் சென்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் அரங்கம்

984

## குள்ள மனிதனும் தங்க மந்திரமும்!



அந்த ஊரில், மில்லர் என்ற ஏழை இருந்தான்.

அவனுக்கு ஓர் அழகான மகள்.

அவளுக்குத் திருமணம செய்துவைக்க, மில்லருக்கு ஒரு யோசனை தோன்றியது.

அரசனைச் சந்தித்த மில்லர், என் மகள் அழகானவள்.

அவள், தங்க மகள். வைக்கோலைத் தொட்டால், அது தங்கமாகும் என்றான்.

அரசனுக்குத் தங்கம் என்றால் அப்படி ஒரு மோகம்.

உன் மகள் வைக்கோலைத் தங்கமாக்கினால், நானே அவளை மணக்கிறேன்.

பொய்யாக இருந்தால், உன் தலையைச் சீவி விடுவேன்" என்றான்.

மில்லரைச் சிறையில் அடைத்தனர்.

அரண்மனையின் ஓர் அறையில் வைக்கோலை நிரப்பி, அவன் மகளை அங்கே அழைத்துவந்தனர்.

விடிவதற்குள் இந்த வைக்கோலைத் தங்கமாக மாற்றாவிட்டால், உன் தலையையும் சீவி விடுவேன் என்றான் அரசன்.

அவளை, அந்த அறையில் பூட்டினர்.

அவளுக்கு அழுகை வந்தது.


அப்பாவின் பொய், நம் மையும் ஆபத்தில் சிக்க வைத்துவிட்டதே' என்று இரவு முழுக்க அழுதாள்.

விடியும் நேரம் ஓர் அற் புதம் நிகழ்ந்தது.

ஒரு குள்ள மனிதன் அங்கே தோன்றினான்.

அவனது மூக்கு நீள மாகவும் கண்கள் பெரிதா கவும் இருந்தன.

சிவப்புத் தாடி வைத்திருந்தான்.



மில்லரின் மகள், பயத் தில் அலறினாள்.

பயப்படாதே, உனக்கு உதவி செய்யவே வந் தேன்.

இந்த வைக்கோலைத் தங்கமாக மாற்றினால், நீ என்ன பரிசு தருவாய்? என்று கேட்டான்.

என் நெக்லஸைக் கொடுக கிறேன் என்றாள் அவள்.

குள்ளன் நெக்லஸை வாங்கிக் கொண்டு, ஒரு மந்திரத்தைச் சொல்லி, வைக்கோல் முழுவதையும் தங்கம் ஆக்கினான்.

*(தொடரும்)*

## 11.2014 17 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

❖1292 - ஜோன் பலியல் ஸ்கொட்லாந்தின் அரசன் ஆனான.

❖1511 - ஸ்பெயின் மற்றும் இங்கிலாந்து ஆகியன பிரான்ஸ்"க்கு எதிராக அணி திரண்டன.

❖1558 - இங்கிலாந்தின் முதலாம் மேரி இறக்க அவரது ஒன்றுவிட்ட சகோதரி முதலாம் எலிசபெத் அரசியானார்.

❖1796 - பிரெஞ்சுப் படைகள் ஆஸ்திரியர்களை இத்தாலியில் ஆர்க்கோல் என்ற இடத்தில் தோற்கடித்தன.

❖1820 - கப்டன் நத்தானியல் பால்மர் அண்டார்ட்டிக்காவை அடைந்த முதலாவது அமெரிக்கர் ஆனார். பால்மர் குடாநாடுக்கு இவரது நினைவாகப் பெயர் சூட்டப்பட்டது.

❖1831 - எக்குவாடோர் மற்றும் வெனிசுவேலா ஆகியன பாரிய கொலம்பியாவிலிருந்து பிரிந்தன.

❖1869 - எகிப்தில் சூயஸ் கால்வாய் திறக்கப்பட்டது.

❖1873 - பெஸ்ட், பூடா, மற்றும் ஓபுடா ஆகிய நகரங்கள் இணைகப்பட்ட புடாபெஸ்ட் நகரம் ஹங்கேரியின் தலைநகராக்கப்பட்டது.

❖1918 - யாழ்ப்பாணத்தில் சூறாவளி மற்றும் வெள்ளம் காரணமாக பலத்த சேதம் ஏற்பட்டது. நூற்றுக்கணக்கானோர் வீடுகளை இழந்தனர். நிவாரண நிதியம் அமைக்கப்பட்டது.

❖1922 - முன்னாள் ஓட்டோமான் பேரரசின் சுல்தான் ஆறாம் மெஹ்மெட் இத்தாலிக்கு நாடு கடத்தப்பட்டான.

❖1933 - ஐக்கிய அமெரிக்கா சோவியத் ஒன்றியத்தை அங்கீகரித்தது.

❖1950 - 14 ஆவது தலாய் லாமா டென்சின் கியாட்சோ தனது 15ஆவது வயதில் திபெத்தின் அரசுத் தலைவரானார்.

❖2003 - ஆர்னோல்ட் ஸ்வார்செனேகர் கலிபோர்னியாவின் ஆளுநரானார்.

### பிறப்புகள்

❖1904 - இசாமு நொகுச்சி சிற்பக் கலைஞரும், கட்டடக் கலைஞரும் (இ. 1988)

❖1909 - சி. இலக்குவனார், தமிழறிஞர் (இ. 1973)

❖1920 - ஜெமினி கணேசன் தமிழ்த் திரைப்பட நடிகர் (இ. 2005)

❖1927 - கமில் சுவெலபில், செக்நாட்டுத் தமிழறிஞர் (இ. 2009)

❖1930 - பிரேம்ஜி ஞானசுந்தரம் முற்போக்கு எழுத்தாளர், பத்திரிகையாளர் (இ. 2014)

### இறப்புகள

❖1558 - இங்கிலாந்தின் அரசி முதலாம் மேரி (பி. 1516)

❖1796 -ரஷ்சியாவின் இரண்டாம் கத்தரீன், ரஷ்சிய அரசி (பி. 1729)

❖1858 - ராபர்ட் ஓவன், வேல்சு நாட்டு செயல்திறனாளர் (பி. 1771)

❖1917 - ஆகுஸ்ட் ரொடான், பிரெஞ்சு சிற்பி (பி. 1840)

❖1928 - லாலா லஜபத் ராய், இந்திய எழுத்தாளர், அரசியல்வாதி (பி. 1865)

❖1973 - மிரா அல்பாசா, பிரெஞ்சு-இந்திய ஆன்மிகத் தலைவர் (பி. 1878)

❖2000 - இலூயீ நீல், பிரெஞ்சு இயற்பியலாளர், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1904)

❖2013 - டோரிஸ் லெசிங், ஆங்கிலேய எழுத்தாளர், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1919)

❖2013 - [illegible]

## அன்புச் சுட்டிகளே!

**உங்கள் மனதில் தாக்கத்தை ஏற்படுத்திய சம்பவங்களை, நீங்களும் சிறுவர் பக்கத்தில் - சுட்டி மனசு- பகுதியில் பதிவு செய்துகொள்ளலாம்.**

## நீங்கள் செய்ய வேண்டியது....



**உங்களால் மறக்க முடியாத சம்பவத்தைத் தெளிவாக எழுதி, முழுப்பெயர், கல்வி கற்கும் பாடசாலை, தரம், உங்கள் புகைப்படம், உங்கள் வீட்டு முகவரி, உங்கள் வீட்டு தொலைபேசி இலக்கம் என்பவற்றை,**

**ஆசிரியர்,சிறுவர் பக்கம்**
**வலம்புரி,**
**இல 03, 2 ஆம் ஒழுங்கை,**
**பிறவுண் வீதி,**
**யாழ்ப்பாணம்,**

**என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சச்சின்

## சாதனை நாயகனின் சரித்திரம்



127

...இரு அணிகளும் பரஸ்பரம் ஒரு போட்டியில் வெற்றி பெற மற்றொன்று டிராவில் முடிந்தது. மொத்தத்தில் இந்தியா - தென் ஆபிரிக்கா சிரீஸ் 1-1 என்று நிறைவு பெற்றது. 2008 மத்தியில் இந்தியா -இலங்கைக்கு இடையேயான மூன்று டெஸ்ட் போட்டிகள் இலங்கையில் தொடங்கின.

❖ லட்சியம்:- உலகின் நம்.1 விளையாட்டு வீரன்
❖ பிடித்த மைதானம்:-ஆஸ்ரேலியாவின் சிட்னி
❖ பிடிக்காத மைதானம்:- பெங்களூர் மைதானம்
❖ வேறு விளையாட்டு:-டென்னிஸ்
❖ கனவு மங்கை:-எனது மனைவி அஞ்சலி
❖ வெறுப்பது:- வதந்தி
❖ பிடித்த உடை:-:ஜீன்ஸ், டீசர்ட்
❖ பிடித்த கடவுள்:- பிள்ளையார் சாய்பாபா மீதும் பக்தி உண்டு
❖ பிடித்த வாசகம்:-உனக்கு நீயே உண்மையாக இரு

போட்டிகள் போட்டிகள் தொடங்கும் முன்பு டெஸ்ட் போட்டிகளில் பிரயன் லாராவின் 11953 ரன்களைக் கடந்து



காதனைப் படைக்க சச்சினுக்கு 177ரன்கள் மட்டுமே தேவை என்ற நிலை இருந்தது. கிரிக்கெட் ரசிகர்கள் அனைவருமே இந்தச் சாதனையை இலங்கை மண்ணில் சச்சின் படைப்பார் என்று ஆவலுடன் காத்திருந்தனர். ஆனால் ஆறு இன்னிங்சில் சச்சின் வெறும் 95 ரன்களே எடுத்து ரசிகர்களின் ஆசையை நிராசை ஆக்கினார். இன்னும் தொடுமையாக இந்தியா 1-2 என்ற கணக்கில் இலங்கையிடம் தோற்றுப் போனது. தொடர்ந்து நடைபெற்ற ஒருநாள் போட்டிகளில் சச்சின் காயம் காரணமாக கலந்துகொள்ளாமல் ஒதுங்கிக் கொண்டார். ஒவ்வொரு முறை சச்சின் மோசமாக விளையாடும் போதும் ஏனைய இந்திய வீரர்களும் மோசமாக விளையாட இந்தியாவின் தோல்விக்கு வழி வகுக்கின்றர் என்பது பதவி செய்யப்பட வேண்டிய முக்கியச் செய்தி.

2008 அக்டோபர் மாதம் ஆஸ்திரேலியக் குழு இந்தியாவிற்கு வந்தது. முதல் டெஸ்ட் போட்டியில் சச்சின் எடுத்தது 13 மற்றும் 49 ரன்கள் மட்டுமே. இரண்டாவது டெஸ்ட்

### 35ஆவது டெஸ்ட் சதம் சச்சின் உலக சாதனை!

முதல் இன்னிங்சில் 88 ரன்களைக் கடந்தபோது பிரையன் லாரா எடுத்த அதிகபட்ச 11953 ரன்களைத் தாண்டி 12000 என்னும் புதிய உலக சாதனையைப் படைத்தார். மூன்றாவது டெஸ்டில் 50 ரன்களைக் குவித்தார். 2008 நவம்பர் 6 நாக்பூரில் நடைபெற்ற நான்காவது டெஸ்ட் போட்டியில் 109 ரன்கள் எடுத்து தனது 40 ஆவது டெஸ்ட் சதத்தை எட்டினார். இந்தியா 2-0 என்ற கணக்கில் வெற்றிபெற்று கவாஸ்கர்- பார்டர் கோப்பையை ஆஸ்திரேலியாவிடம் இருந்து தட்டிப் பறித்துக்கொண்டது.

ஆஸ்திரேலியாவை வெற்றி கொண்ட களிப்புடன் இந்தியா அணி அடுத்து வர இருக்கும் இங்கிலாந்து அணியை வரவேற்கக் காத்திருந்தது. 7 ஒருநாள் மற்றும் 2 டெஸ்ட் போட்டிகள் என்னும் திட்டத்துடன் இங்கிலாந்து அணி இந்தியாவிற்கு வந்தது. சச்சினுக்கு மீண்டும் காயம் ஏற்பட்டதால் முதல் மூன்று ஒருநாள் போட்டிகளில் பங்கேற்க முடியாமல் போனது. நான்காவது ஒருநாள் போட்டியில் 11 ரன்களும் ஐந்தாவது ஒருநாள்போட்டியில் 50 ரன்களும் எடுத்தார். அப்போது யாருமே எதிர்பாராத உலகையே குலை நடுங்க வைக்கும் சம்பவம் நவம்பர் 26/27 ஆம் திகதி நடைபெற்றது.

கே. ரமேஷ் (தொடரும்)

# ஆத்ம ஞானத்தைத் தேடி

## கவலைகள் இன்றி வாழ்தல்!

...நீங்கள் தோல்வியைச் சந்தித்ததனால் கொஞ்சம் வருத்தமாக இருப்பீர்கள். அது பரவாயில்லை. ஆனால் அத்துடன் நிறுத்திக் கொள்ளாமல் நீங்கள் மிகவும் விரக்தியுடன் கோபமும் அடைந்து எல்லாவிதமான விடயங்களையும் உங்கள் தலைக்குள் போட்டுக் கொள்வீர்கள்...

ஓ... தொடுவதெல்லாம் தோல்வியில்தான் முடியும். நான் எதற்கு லாயக்கில்லை. நான் ஏன் எப்பொழுதும் துரதிஷ்டசாலியாகவே இருக்கிறேன்? நான் என்ன செய்யப் போகிறேன்? இவ்வாறாக பல விடயங்களையும் மனதில் போட்டுக் குழப்பிக் கொள்வீர்கள்.

இதுதான் எதிர்மறைத் தன்மை என்பது. இதுதான் கவலையின் மூலம் கவலையைப் பற்றி ஒரு விடயம் என்னவென்றால் நமது கவலைகளில் 99% ஒருபோதும் உண்மையாக இருப்பதில்லை. நமது கவலைகளில் 99% முழுவதும் காரணமற்றவை.

கொஞ்சம் கொஞ்சமாக இந்த எதிர்மறையான போக்கு, இந்த எதிர்மறையான பேச்சு உங்கள் இருப்புத் தன்மையில் நிரந்திரமாக உறுதிப்பட்டு, பின்னர் நீங்கள் செய்யும் எல்லாச் செயல்களிலும் ஒருவிதமான எதிர்மறைச் செல்வாக்காகவே வெளிப்படுகிறது. உங்களிடம் திட்டமாகிவிட்ட, இதைப் பற்றி நீங்கள் வெகுவாக விழிப்பின்றி இருப்பது மிகவும் அபாயகரமானது. அதுவே உங்கள் இயல்



பாகிவிட்டதால் உங்களிடம் உங்கள் அமைப்பில் இருக்கும் இந்த ஓட்டத்தைப் பற்றிய ஒரு கூரிய விழிப்பை ஏற்படுத்துவதே ஒரு பெரும் வேலையாகிறது. அதை உங்களால் உங்களிடமிருந்து வேறுபடுத்திப் பார்க்க முடியாது. அது உங்களின் ஒரு பகுதியாகி விட்டது.

இந்த எதிர்மறையானது மனோபாவத்தின் மருத்துவப் பெயர்தான் மனச்சோர்வு. சிலரிடம் மனச்சோர்வு கொஞ்சமாக இருக்கிறது. சிலரிடம் அதிகமாக இருக்கிறது. அவ்வளவே இந்தப் பேச்சு உங்களை அதிகமாக விழுங்க நீங்கள் அனுமதித்தால் நீங்கள் அதிக மனச்சோர்வுக்கு உள்ளாகும் மக்கள் சில சமயங்களில் மட்டுமே அதுவும் குறைந்த அளவில் உணருகிறார்கள். ஆனால் அதிக மனச்சோர்வுக்கு உள்ளாகும் மக்களோ பல் சம

### ஆன்மீகம் 77

யங்களில் அதுவும் அதிக அளவில் உணருகிறார்கள். ஆனால் இருவருக்குமே எப்பொழுதும் இந்த ஓட்டம் இருக்கிறது. அதனால் மனச் சோர்வு சிலரிடம் அல்லது எதிர்மறைத் தன்மை என்பது நீங்கள் உங்களுடனயே பேசிக்கொள்ளும் எதிர்மறையான எண்ணக் குவியல்களைத் தவிர வேறில்லை.

ஒருமுறை இது போன்ற எண்ணங்களை நீங்கள் உங்கள் மனதுக்குள் அனுமதித்துவிட்டால் ஒவ்வொரு முறை நீங்கள் சின்னத் தோல்வியடையும் பொழுது மீண்டும் மீண்டும் உங்களுக்குள் ஒடிக்கொண்டிருக்கும்.

(தொடரும்)

பரமஹம்ஸ சுவாமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எது நடந்ததோ அதுவே தொடர்ந்தும் நடாத்தப்பட்டு வருகிறது... ஒருவித மாற்றமும் இல்லாமல்!

கீதையின் பிரபலமான ஒரு மேற்கோள் எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது என்பது ஆகும். ஆனால், இந்தியா என்ற பெரிய நிலப்பரப்பின் மத்திய ஆட்சி எமது உரிமைப் போராட்டம் மீது எதனை நடத்தியதோ அதனையே நன்றாக இன்னும் தொடர்ந்து நடத்துகின்றது என்பதே நாம் பார்த்து வரும் யதார்த்தம் ஆகும்.

அங்கு ஆட்சிக்கதிரையில் அமரும் ஆட்கள் மாறினாலும்கூட, ஆட்சிக் கட்டிலில் அமருபவர்களின் தோள் துண்டுகளின் நிறம் மாறினாலும்கூட, ஏறத்தாழ ஒரே விதமான நிலைப்பாடே எமது தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டம் மீது கையாளப்பட்டு வந்து கொண்டு இருக்கின்றது.

மிகமிக அண்மைய கேவலம் என்னவென்றால் சிங்கள இனவாதத்தின் பிதாமகர்களில் முன்னோடியான அநகாரிக தர்மபாலாவுக்கு ஒருசில வாரங்களுக்கு முன்னர் இந்திய ஜனாதிப்தி பிரணாப் முகர்ஜி முத்திரை ஒன்றை இந்திய அரசின் சார்பில் வெளியிட்டார் என்பதே.

இந்திய பெருநிலத்தின் மத்திய ஆட்சி உமிழ்நீரை தமிழ்நாட்டு மக்கள் அனைவரது நெற்றியில் பூசி அதன் மீது ஒட்டிய முத்திரை இது. இதனைவிட வேறு என்ன அவமானம் வேண்டும். இது அதிர்ச்சியாகவும் திகைப்பாகவும் தோன்றலாம்.

ஆனால் இதில் அதிர்ச்சியடையவோ திகைக்கவோ எதுவுமே இல்லை. ஏனெனில் இது ஒன்றும் திடீரென நடாத்தப்பட்ட ஒரு சம்பவமேயல்ல. மிக நீண்ட வரலாறு கொண்ட ஒரு பாரபட்சமான வெளியுறவுக் கொள்கை ஒன்றின் நீட்சி அல்லது தொடர்ச்சிதான் இது.

இந்தியாவின் ஒருமைப்பாடு என்ற பதத் தின் மீது ரோ அமைப்பு வழங்கும் தகவல்களினடிப்படையிலேயே கடந்த நாற்பது ஆண்டுகளாக இந்த வெளியுறவுக் கொள்கை நடாத்தப்பட்டு வருகின்றது.

எப்போது தமிழீழ விடுதலைப் போராட்டம் மிதவாதிகளின் கைகளை மீறி தியாகம் நிறை ந்த இளைஞரின் போராட்டமாக, மக்கள் போராட்டமாக மாறியதோ அந்நாளிலிருந்தே இந்த அணுகுமுறையே மேற்கொள்ளப்படுகின்றது.

ஜவகர்லால் நேரு, இந்திரா காந்தியிலிருந்து இன்றைய மோடி வரைக்கும் இதுவே தொடர்கதையாக தொடர்கிறது. இதில் ஒரு விடயம் சுட்டிக்காட்டபபடவே வேண்டும். அது என்னவென்றால் "இந்திராகாந்தி இருந்தி ருந்தால் தமிழீழத்தை எடுத்து தந்திருப்பார்" என்ற கருத்து ஒன்று நிலவுகின்றது. அது முழுக்கவே கலப்பில்லாத கற்பனை.

இந்திரா காந்தி காலத்தில் உலகம் இர ண்டு அணிகளாக நின்றிருந்ததும் அதில் ஒரு அணியில் அவரது தந்தையும் இந்தியாவின் முதலாவது பிரதமருமான ஜவகர்லால் நேரு இணைந்திருந்ததால் இந்திராவும் அதிலேயே தொடர்ந்ததும் அதில் ஒரு அணியாகிய அமெ ரிக்க சார்பு நாடுகள் இலங்கையுடன் நெருங்குவதை தடுப்பதற்காகவும் அதேநேரம் இலங்கைக்கு ஒருவிதமான மென்அழுத்தம் (கவனிக்க, மென் அழுத்தம் மட்டுமே) கொடுத்து அதனை எந்த பக்கமும் ஒரேயடியாக சாய்ந்து விடாமல் வைத்திருக்கவுமே ஆயுத அமைப்புகளுக்கு பயிற்சி என்ற வலை வீசப்பட்டது.

இந்திரா காந்தியின் செயலரான ஜி.பார்த்தசாரதியை வெளிப்படையான தொடர்பாளராக வைத்து அமைப்புகளை கையாண்டபடியே இந்திய பாதுகாப்பு தொடர்பான கொள்கை வகுப்பாளர்கள் ஏற்படுத்திய நிகழ்ச்சி நிரலின்படி

1.அமைப்புகளுக்கு பயிற்சி

2.எல்லா அமைப்புகளையும் ஒரே அளவில் வளர்த்தல்,

3.ஒரு கட்டத்தில் இங்கு அழுத்தம் கொடுத்து அங்கு அனுப்பி வைத்தல்,

4.அங்கு ஆயுதக்குழுக்களின் மோதல் நலமாக வட-கிழக்கு மாறும் அதே நேரத்தில் இலங்கை மீது அழுத்தம் கொடுத்து தனது வழிக்கு கொண்டுவருதல் என்பதுதான் அந்த நிகழ்ச்சிநிரல்.

இதற்கிடையில் தமிழ் போராட்ட குழுக்களின தலைமைகளுக்குள் பிளவுகளை ஏற் படுத்தி தனி தமிழீழம் ஒருபோதும் சாத்தியமல்ல என்று கருத்துருவாக்கம் விதைக்கவும் செய்யப்பட்டது. எல்லா இயக்கங்களையும் ஒரே பலத்துடன் வளர்த்து தமிழீழத்தில் இறக்கி விட்டு தமிழீழத்தை இன்னொரு லெபனான் ( அந்த நேரத்து லெபனான், இப்போது சிரியா) ஆக மாற்றி அதற்குள்ளாக அரசியல் செய்யும் இந்திய கனவுக்கு இடைஞ்சலாக இருந்தது தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவரும், அதன் போரிடும் வலுவும், உறுதியுமே.



மட்டுப்படுத்தப்பட்ட வழங்கல்களுடனேயே வைத்திருந்த போதும் தமிழீழ விடுதலைப் புலிகள் எவ்வாறு இப்படி தாக்குதல்களை வெற்றிகரமாக செய்து சிங்களத்தை முகாம்களுக்குள் முடக்குகிறார்கள் என்பதில் இந்திய மத்திய அரசு பெரிய விசனத்துள்ளும் அதிர்ச்சிக்குள்ளும் இருந்தது.

இந்திய புலனாய்வு நினைப்புக்கு மாறாக அதிகமான தாக்குதல்களை செய்ததற்காக தமிழீழ விடுதலைப் புலிகள் மீது மேற்கொள் ளப்பட்ட அழுத்தங்கள் வரலாற்றில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

தாக்குதல்களில் தமிழீழ விடுதலைப்புலிகள் ஏதேனும் புதிய ஆயுதங்களை பயன்படுத் தியது பற்றி தெரிய வந்தால் அது எப்படி உங்கள் கைகளுக்கு வந்தது என்ற கேள்வி உடனடியாக ரோ அமைப்பால் தமிழீழ விடுதலைப் புலிகளின் மீது தொடுக்கப்பட்டே வந்துள்ளது. ஆனால் அந்த ஆயுதங்கள் சிங்கள படை களிடமிருந்து கைப்பற்றபட்டவை என்பதே தமிழீழ விடுதலைப் புலிகளின் பதிலாகவும் இருந்து வந்தது.



இந்திய மத்திய அரசின் கட்டி அணைத்தபடியே நெஞ்சுக்குள் ஆழமாக கத்தியை சொருகும் அணுகுமுறையை ஆரம்பத்திலேயே இனங்கண்டுகொண்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமை மாற்று ஏற்பாடுகளை மிக இரகசியமாக ஆனால் மிகமிக உறுதியான பின்னணியுடன் செய்ய ஆரம்பித்தது.

அதற்கு உறுதுணையாக தமிழக முதல்வர் எம்.ஜி.ராமச்சந்திரன் நின்றிருந்தார். அவருக்கு மக்கள் மத்தியிலிருந்து அசைக்க முடியாத ஆதரவும், பலமும் மிகமிக பெரிய காரணிகள். நாடுகளில் உள்ள வேற்று நாட்டு தூதுவர்களை சம்மன் கொடுத்து அழைத்து விளக்கம் கேட்பதுபோல தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முக்கியமானவர்கள் அடிக்கடி இவ்வாறு ரோ அலுவலகத்துக்கு விளக்கம் கேட்க, அதிருப்தியை தெரியப்படுத்த, ஆட்சேபம் தெரிவிக்க ஏன் சிலவேளைகளில் மிரட்டப்படவும் என்று அழைக்கப்பட்ட நாட்கள் அதிகம். தமிழீழ தாயகம் என்ற எண்ணக்கருவை, விடுதலை இலட்சியத்தை அழித்துவிடும் இந்திய நிகழ்ச்சி நிரல் தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுதிமிகு, வீரமிக்க தலைமையால் சீர்குலைந்துபோனதை அடுத்து இந்தியா நேரடியான தலையீடுகளை மேற்கொள்ள ஆரம்பித்தது.

இந்திய சதிகளை பற்றி எழுத் தொடங்கினால் ஒரு நீண்ட புத்தகமாக முடியும். நமது பிரச்சினை இப்போ அதுவல்ல. ஏன் இந்த இந்தியா அப்போதிலிருந்து இன்று வரைக்கும் தொடர்ந்து எம் போராட்டத்தை கருவறுக்கும் வேலையை செய்கின்றது.?

இந்தியா என்ற பெருநிலப்பரப்பின் ஒரு மாநிலமான தமிழ்நாட்டு மக்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதைவிட இலங்கை அரசு என்ன நினைக்கிறது என்பதில் இந்திய மத்திய அரசின் கரிசனையும், ஆதங்கமும் அதிகமாக இருப்பது ஏன்..? என்ற கேள்விகளுக்கு விடை தெரிந்தால் அல்லது புரிந்தால் எமது பயணத்தின் சுமை குறையும்.

பாதையில் உள்ள தடையின் பரிமாணம் புரிந்து கொண்டாலே பயணம்சாத்தியமாகும. இல்லையா. எந்தவொரு அடிப்படையும் இல்லாத பெரிய ஒரு பயம் இந்திய கொள்கை வகுப்பாளர்களுக்கு இருந்து வருவதே முதலாவது காரணமாகும்.

அந்த பயம் என்னவெனில், தமிழீழம் சுதந்திர நாடாக ஆகினால் தமிழ்நாடு மாநிலமும் இந்தியாவிலிருந்து பிரிந்து செல்லும் போராட்டத்தை ஆரம்பித்துவிடும். ஏற்கனவே இந்தியாவின் வடமுனையில் காஸ்மீரம், மணிபபூர், நாகலாந்து, அசாம், மிசோரம், மாவோயிஸ்டுகள் என்று ஆயுதம் ஏந்திய போராட்டம் முனைப்பெடுத்து நிற்கையில் கீழ் முனையிலும் தென் பகுதியில் தமிழ்நாடும் போராட்டத்தை ஆரம்பித்தால் சோவியத் யூனியன் சிதறியது போல இந்தி யாவும் உடைந்துவிடும் என்ற பயம் அது. சர்தார் வல்லபாய் பட்டேல் மிகவும் சிரமப்பட்டு ஒன்றாக்கிய இந்த இந்திய நிலப்பரப்பை தமிழீழ விடுதலைப் போராட்டம் சிதறடித்து விடும் என்ற பயம்.

தேசிய இனங்களின் ஒருங்கி ணைவு என்ற அத்திவாரத்தில் எழுப்பப்படாத இந்த இந்தியா என்ற நிலப்பரப்பு மக்கள் மனதில் பதிந்துவிட்ட இதிகாசங்களினா லும் (மகாபாரதம், இராமாய ணம்), மதரீதியான நினைப்புகளாலும் மட்டுமே ஒருதேசம் என்று செதுக்கப்பட்டுள்ளது.

தேசிய இனங்களின் எழுச்சியானது இந்த ஒன்றை தேசம் என்ற கருத்தை உடைத்து இந்தியாவை துண்டு துண்டான பல தேசங்களாக ஆக்கிவிடும் என்ற பயமும், பதட்டமும் விடுதலையடைந்த நாளிலிருந்தே இந்திய கொள்கை வகுப்பாளர்களுக்கு இருக்கிறது.

அதன் ஒரு வெளிப்பாடு தான் தமிழீழத் துக்கு எதிரான நிலைப்பாடு. சிங்கள தேசத்தை வருடிவிடும்நிலைப்பாடு. சிங்கள ஆட்சிகளை கடுமையாக எதிர்க்காத மென்போக்கு. ஒரு தேசிய இனம் எழுச்சிகொள்ளவும், தனது சுயநிர்ணய உரிமையை பயன்படுத்தவும் வேண்டிய வரலாற்று போக்கு என்பது இன்னொரு தேசிய இனத்துடன் ஒருபோதும் ஒப்பீடு செய்யமுடியாதது என்ற மிகச்சின்ன விடயத்தையே புரிந்துகொள்ள மாட்டாத இந்த கொள்கை வகுப்பாளர்களின் பிழையான புரிதல்தான் தமிழீழம் பற்றிய கடும்போக்கு க்கு முக்கிய காரணம். இந்த பயம் ஒரு ஆதாரமற்றது என்பதை பல தடவைகள் தமிழீழ மக்களின் தேசிய விடுதலை அமைப்பான தமிழீழ விடுதலைப் புலிகள் குறிப்பிட்டும்கூட டெல்லி சவுத்பிளக் அதனை விளங்கிக் கொள்ளவேயில்லை. அப்படி அவர்கள் விளங்கிக் கொள்ள, தொடர்ந்து மறுப்பதற்கு இன்னொரு காரணம் ஒட்டு மொத்தமாகவே தமிழர்கள் முழுவரின் மீதும் ஒரு ஏளனப் போக்கு, ஒரு வெறுப்புதான் காரணம்.

இன்னொரு முக்கிய காரணம் ஆரியர் என்ற ஒரு நினைப்பு. இப்போது நாம் அநகாரிக தர்மபாலாவுக்கு முத்திரை வெளி யிட்ட இடத்துக்கு வந்துவிட்டோம். ஆம், இந்த ஆரிய சிந்தனையை மிக உரத்து கூறிய இன வெறியர்களில் முதன்மையானவர் இந்த அநகாரிக தர்மபாலாதான். சிங்களவர்கள் மிகவும் சுத்தமான ஆரிய இரத்தம் என்று வெறி ஏற்றி போதனை செய்த அநகாரிக தர்மபாலாவின் வழித்தடத்தில்தான் மற்றைய சிங்களத் தலைவர்களும் தங்களை தாமே ஆரிய சிங்கங்கள் என்று கர்ஜனை செய்தார்கள். சிங்களத் தலைவர்கள் டெல்லிக்கு செல்லும் சந்தர்ப்பங்களில் எல்லாம் நீங்களும் நாங்களும் ஒரே இரத்தம் என்ற பாசத்தை மீண்டும் உறுதிபடுத்தி வர தவறுவதேயில்லை. ஜே.ஆர்.ஜெயவர்த்தனா இதனில் ஒருபடி மேலேயே போய் "இந்திரா காந்தியின் மூக்கும் தன்னுடைய மூக்கும் ஒரே அமைபபு என்று ஆரிய மூக்குக்கு காப்புரிமை பெறும் கதைகள் நேரடியாகவே சொல்லியதும் இதன் தொடர்ச்சியேதான.

என்னதான் தமிழ்நாட்டு தமிழர்களை இந்திய கடற்பரப்பினுள் வைத்து சிங்களம் சுட்டுகொன்று குருதி சிதற வைத்தாலும்கூட சிங்களத்தை கட்டி அணைத்து இந்தியா தழுவுவதற்கு இதுதான் முக்கிய காரணம்.

இந்தியாவின் அருணாசலப் பிரதேசத்தின் பலநூறு சதுர மைல்களை ஆக்கிரமித்து நிற்கும் சீனாவுடன் கூட இந்தியா தோளில் கைபோட்டு தோழமை கொள்ளும், கொள்ளுகிறது ( இந்தியாவினுள் மாற்றங்களை உருவாக்க நினைத்த இரண்டு இந்திய பிரதமர்கள் முதலில் விஜயம் செய்தது சீனாவுக்குதான. சீனாவுடனான இந்திய வர்த்தகம் இன்று 73 பில்லியம் டொலர்)

தனது குடிமக்களை கொன்று குவிக்கும் சிங்களத்தைக்கூட இந்தியா செல்லப்பிள்ளையாக குலாவும். ஆனால் தமிழர்களை, அது ஈழத்தமிழனாக இருந்தால் என்ன இந்தியத் தமிழனாக இருந்தால் என்ன இந்திய ஆளும் தரப்பு ஒருபோதும் மனிதர்களாகவே நினைக்காது என்பதே உண்மை.

அந்த நினைப்பின் ஒரு வெளிப்பாடுதான் அநகாரிக தர்மபாலாவுக்கு முத்திரை வெளியீடு. சுப்ரமணியன் சுவாமியின் ருவிற்றர் தான் இப்போது இந்திய வெளியுறவு கொள்கையை அறிவிக்கும் முதல் இடமாக இருக்கும் இந்த சந்தர்ப்பத்தில் இதுவும் நடக்கும் இன்னமும் நடக்கும். நாம் விழித்துக் கொள்ளாதவரை..

*-ச.ச.முத்து-*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகரஜோதி பெருவிழாவில் சபரிமலை ஐயப்ப தரிசனம்

**சபரிமலை வாழ் தேவா சரணம் நின்**
**தாள் பணிந்தோம் காத்தருள்வாய் ஐயனே சரணம்**
**பதினெட்டுப் படி மீதமர்ந்து தரிசனம் தரும் ஐயனே**
**அகிலாண்ட கோடி நாயகனே அருள்புரிவாய் ஐயப்பா!**

பக்தர்கள் புனித யாத்திரை செல்லும் திருக்கோயில்கள் பல உள்ளன. எனினும் தனித் தன்மை வாய்ந்த ஒன்றாகச் சபரிமலையைக் குறிப்பிடலாம். முதலாவது ஒரு மண்டலம் (41) நாட்கள் நெறி தவறாத விரதங்களைக் கடைப்பிடித்து முறைப்படி வாழ வேண்டியது சபரிமலைக்குமிகமுக்கியம்.

சபரி மலை யாத்திரை கொடுமை நிறைந்த காட்டுப் பகுதியில் கால்நடையாகக் கல்லும் முள்ளும் நிறைந்த காட்டு வழியில் பல நாட்கள் நடக்க வேண்டும். இப் புனித யாத்திரையில் இல்லற மனப்பாங்கினை முற்றிலும் துறந்து தெய்வீகச் சிந்தனை ஒன்றினையே உடையவராய்ச் செல்லும் இந்த யாத்திரையின் மூலம் கிடைக்கும் அனுபவங்கள் வாழ்க்கையில் என்றும் நிலைத்திருந்து பக்தி பூர்வமாக ஒருவர் வாழ உதவும்.

இனம், சமயம் போன்ற வேறுபாடுகளை விட்டு விடவும் ஏழை, பணக்காரன் என்ற வித்தியாசமும் இல்லாமல் யாவரும் உணர்வு பூர்வமாய்ச் செல்லும் யாத்திரை இது. சபரி மலை தரிசனத்திற்குக் கட்டணம் இல்லை. ஒருவர் பணக்காரராயிருந்தாலும் பரம ஏழையாகயிருந்தாலும் சபரி மலையில் ஒன்றுதான்.

இத்தகைய சிறப்புத் தன்மைகள் நிறைந்துள்ளதால் தான் இந்த நாகரிக யுகத்திலும் சபரிமலை யாத்திரையில் ஈடுபடும் பக்தர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே போகிறது.



**சபரி மலையின் தனித் தன்மைச் சிறப்பு**

சாதாரணமாக உள்ள மற்ற ஸ்தலங்களை விட அதிகமான சிறப்புக்கள், பொருத்தங்கள் சபரிமலைக்கு உண்டு. புண்ணியஸ்தலங்கள் ஏதாவது ஏழு பொருத்தங்களில் ஒன்றை பெற்றிருக்க வேண்டும்.

ௐ சுயம்பு லிங்க பூமி (சுயமாக உண்டானதோ அல்லது இறைவனுடைய ஜீயோதிர்லிங்கம் உள்ளவை)

ௐ யாகபூமி (மஹாயகம் நடந்த ஸ்தலம்)

ௐ பலிபூமி (பக்தி மார்க்க யுத்தம் நடந்த இடம்)

ௐ யோகபூமி (ரிஷியின் தவமிருந்த ஸ்தலம்)

ௐ தபோபூமி (யோகிமார் வாழ்ந்த ஸ்தலம்)

ௐ தேவபூமி (தேவர்களால் முக்கியத்துவம் கொடுக்கப்பட்ட பூமி)

ௐ சங்கமம் பூமி (நதி சங்கமிக்கும் ஸ்தலம்)

இந்த ஏழில் ஏதாவது ஒன்று இருந்தாலும் அது தீர்த்த பூமியாகும். இத்தகைய இடத்திற்குப் போவதாலும் தரிசனம் செய்தாலும் ஒரு ஜீவாத்மாவினுடைய அனைத்துப் பாவங்கள் நீங்கி கோடி புண்ணியம் உண்டாகும் என்று சாஸ்திரங்கள் சொல்கின்றன.

சபரி மலை மேற் கொண்ட ஏழு அம்சங்களையும் பொருந்தியுள்ளதால் சபரி மலை வருபவர்களுக்கும் ஐயப்பனை தரிசிப்பவர்களுக்கும் கோடி புண்ணியம் கிடைக்கிறது. அவர்கள் செய்த பாவங்கள் நீங்கி மோட்சமடையத் தகுதி பெறுகிறார்கள். இத்தகு சபரி மலை தரிசனத்தில் இவ்வாண்டும்ஏராளமானபக்தர்கள்கோண்டாவில் ஈழத்து சபரி மலை ஸ்ரீ ஐயப்பன்-ஆலயத்திலிருந்து அந்த புனித யாத்திரையை மேற்கொள்ளவுள்ளனர்.

அந்த வகையில் கார்த்திகை மாதம் முதலாவது நாள் சாமிமார்களுக்கு புனித விரத மாலை அணிவிக்கப் படும். அன்று தொடக்கம் மண்டல விரத பூஜைகள் சிறப்பாக நிறைவேற்றி சபரிமலை யாத்திரையை ஆரம்பிக்கும் மரபு ஆண்டுதோறும் ஈழத்து சபரி மலையில்வளர்ந்து வருகிறது.

**வர்ணனைக் கலாநிதி மதுரகவி**
**காரை.எம்.பி.அருளானந்தன்**
**பணிப்பாளர், சைவத்தமிழ் பண்பாட்டுக்கழகம்.**

# பசிலுக்கு அ.இ.ம.கா.சிவப்பு சமிக்ஞை

**பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தலைமையில் கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற மாகாண சபை உறுப்பினர்களுக்கான கூட்டத்தில் அமைச்சர் றிசாத் பதியுதீன் தலைமை யிலான அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் உறுப்பினர்கள் பங்கு பற்றவில்லை. கிழக்கு மாகாண சபையிலுள்ள அக்கட்சியின் உறுப்பினர்களே இந்தகூட்டத்தை புறக்கணித்துள்ளனர்.**

இது தொடர்பாக, அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தேசிய கொள்கை பரப்புச் செயலாளரும் கிழகக்கு மாகாண சபையின் தவிசாளருமான எம்.எஸ்.சுபைர் தெரிவிக்கையில்,

எமது அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், அடுத்த ஜனாதிபதி தேர்தலில் யாரை ஆதரிப்பது என எதிர்வரும் 24 ஆம் திகதி நடைபெறவுள்ள கட்சியின் அரசியல் அதியுயர் பீடக் கூட்டத்தில் முடிவு செய்யவுள்ளது.

அதற்கிடையில் அரசாங்கதத்தின் உயர் மட்டக் கூட்டங்களில் நாம் பங்கு கொள்வதில்லையென கட்சியின் கடந்த 11.11.2014 ஆம் திகதிய அரசியல் உயர் பீட கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டது.

அந்த தீர்மானத்துக்கு அமைவாகவே அமைச்சர் பசில் ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்ற மாகாண சபை உறுப்பினர்களுக்கான கூட்டத்தில், கிழக்கு மாகாண சபையிலுள்ள அகில இலஙகை மக்கள் காங்கிரஸ் உறுப்பினர்கள் பங்குபற்றவில்லையென அவர் தெரிவித்தார்.

அமைச்சர் பசில் ராஜபக்ஷ தலைமையில், நடத்தப்பட்ட மாகாண சபை உறுப்பினர்களுக்கான கூட்டத்துகது எமது அகில இலங்கை மக்கள் காங்கிரஸ உறுப்பினர்களான எம்.எஸ்.எஸ்.அமீர் அலி, சிப்லி பாறூக் மற்றும் எனக்கும் அழைப்புக்கள் அனுப்பப்பட்டிருந்தன.

எனினும், கட்சியின் தீர்மானத்துக்கு அமைவாக இக் கூட்டத்தில் நாங்கள் கலந்து கொள்ளவில்லையென சுபைர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## ஆட்சியாளர்களை விரட்டியடிக்க நாம் முன்னிற்போம்-பொன்சேகா

நாட்டின் தற்போதைய ஊழல ஆட்சியாளர்களை விரட்டியடிபபதற்கு தனது கட்சியினர் முன்னிற்பார்கள் என்று சரத் பொன்சேகா சூளுரைத்துள்ளார்.

ஜனநாயகக் கட்சியின் தலைவர் சரத் பொன்சேகா, நேற்று முன்தினம் தனது கட்சி முக்கியஸ்தர்களுடன் கண்டிக்கு விஜயமொன்றை மேற்கொணடிருந்தார். கண்டியில் அஸ்கிரிய மற்றும் மல்வத்து மகாநாயக்க தேரர்களைச் சந்தித்து ஆசி பெற்றுக் கொணடபின் அவர் ஊடகவியலாளர்களைச் சந்தித்தார்.



இதன்போது சரத்பொன்சேகா மேலும் தெரிவிக்கையில்,

கடந்த முறை போன்று இம்முறையும் பொது வேட்பாளர் ஒருவரை முன்னிறுத்தினால் மட்டுமே இந்த ஊழல் ஆட்சியாளர்களை விரட்டியடிக்க முடியும். அதற்கான முயற்சியில் எனது கட்சி முன்னிற்கும் என்றார். சரத் பொன சேகாவுடன் அவரது மனைவி அனோமா, நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த கெட்டகொட, மாகாண சபை உறுப்பினர் சுசில் கிந்தெல்பிடிய ஆகியோரும்குறிதத விஜயத்தின் போது உடனிருந்தனர். (இ-5)

### ஒரு அங்குலம் கூட இல்லை கவலைப்படுகிறார் அமைச்சர்

விவசாயம் சம்பந்தப்பட்ட அமைச்சராக இருந்த போதிலும் ஒரு அங்குல நிலம் கூட இல்லாத ஒரே அமைச்சர் தான் என சிறு ஏற்றுமதி பயிர் ஊக்குவிப்பு அமைச்சர் ரெஜினோல்ட் குரே தெரிவித்துள்ளார்.

மாத்தறையில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டம் ஒன்றில்பேசும்போதே அவர் இதனை கூறியுள்ளார். அவர்மேலும்தெரிவிக்கையில்,அந்தகாலத்தில்காணி, நீர்ப்பாசனம், விவசாயம் ஆகிய மூன்று துறைகளை கொண்டுள்ள அமைச்சரையே விவசாய அமைச்சர் என கூறுவார்கள். சிறு ஏற்றுமதி பயிர் ஊக் குவிப்பு மாத்திரமே எனது பொறுப்பில் உள்ளது. இதனால் வெள்ளையர்கள் காணிகளை பகிர்ந்தது போல் என் னால் காணிகளை பகிர முடியாது எனவும் ரெஜினோல்ட் குரே தெரிவித்தார். (இ-5)

# தமிழ், முஸ்லிம் தலைவர்கள் ரணிலுக்கு ஆதரவளிக்கவும்

## விக்கிரமபாகு கோரிக்கை

தமிழ், முஸ்லிம் தலைவர்கள் ரணில் விக்ரம சிங்கவை ஆதரிக்க வேண்டும் என்று விக்கிரமபாகு கருணாரத்ன வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நேற்றுமுன்தினம் கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பொன்றில் கலந்து கொண்ட நவசமசமாஜக் கட்சியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரத்ன, இந்த வேண்டுகோளை முன்வைத்துள்ளார்.

தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்துள்ள விக்கிரமபாகு கருணாரத்ன, எதிர்வரும ஜனாதிபதித் தேர்தலில் மும்முனைப் போட்டி தவிர்க்க முடியாதது. ஜாதிக ஹெல உறுமய மற்றும் ஜே.வி.பியினர் கூட்டிணைந்து ஒரு வேட்பாளரை தேர்தலில் களமிறக்குவார்கள்.

அதன் மூலம் அரசாங்கத்திற்கு சார்பாகவுள்ள இனவாத அடிப்படையிலான வாக்குகள் பிரிந்து செல்லும் வாய்ப்புக் காணப்படுவதால், எதிர்க்கட்சிகளுக்கு சாதகமான நிலை ஏற்படும்.

இந்நிலையில் தமிழ், முஸ்லிம் கட்சிகளின் தலைவர்கள் எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்ரமசிங்கவை ஆதரிக்க வேண்டும். அவரையே பொது வேட்பாளராக முன்னிறுத்தி, வெற்றி பெறச் செய்வதன் மூலம் இந்நாட்டில் அதிகாரப் பரவலாக்கலுக்கான வழி பிறக்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

**தேர்தல் பிரசாரம்**

# வடக்கு-கிழக்கு வாசு பொறுப்பு


(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தேர்தல் பிரசார நடவடிக்கைகள் தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக அரச தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவின் ஜனநாயக இடதுசாரி முன்னணியின் முக்கியஸ்தர்கள் கடந்த வாரம் ஜனாதிபதி மகிந்த ராஜபஷவைச் சந்தித்துப் பேச்சு வார்த்தை நடத்தியபோது ஜனாதிபதி இத்த தீர்மானத்தை அறிவித்தார் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபா



கடந்த நூற்றாண்டிலும் தற்போதும் பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபா ஆன்மீகத்தில் சமயங்களில் ஆரம்ப இடைக் கால உயர் கல்வியில் பொறியியல், விஞ்ஞானம், இலவச மருத்துவம், கலை, பொருளாதாரம், அரசியல், இயற்கை அனர்த்தங்களிற்கு புனர் நிர்மாணம் புனர்வாழ்வளித்தல், அதியுயர் தொழில் நுட்பம் ஆகிய ஏறக்குறைய எல்லாத் துறைகளிலும் புரிந்துணர்வையும் நம்பிக்கைகளையும் மறுமலர்ச்சியையும் ஏற்படுத்தி வரலாறு காணாத சாதனையை படைத்தவர் என்றால் மிகையாகாது

அன்னாரது 89ஆவது அவதார தின விழா கார்த்திகை மாதம் 23ஆம் திகதி உலகளாவிய ரீதியில் கொண்டாடப்படவுள்ளது. பகவானின் மார்க்கத்தில் தாயின் கருப்பையில் சிசு உண்டாகி இருக்கும் அந்த ஏறக்குறைய ஒரு வருடத்தையும் ஒருவருடைய வயதில் உள்ளடக்கப்படுகிறது. ஆகவே 1926ஆம் ஆண்டு அவர் உலகில் அவதரித்தாலும் 1925 ஆம் ஆண்டில் இருந்து அவரது வயது கணிப் பிடப்படுகிறது. இயேசு பிரான் பிறப்பில் இருந்து கிறிஸ்தவ மதத்தை தோற்று வித்தவர் பாபா பிறப்பில் இருந்து எல்லா மதங்களையும் அரவணைத்து வேற்றுமையில் ஒற்றுமைகண்டவர். சத்திய சாயி பாபா சமாதி அடையும் முன்பு தான் மறைந்த பின்பு தான் எனது லீலைகள், மகிமைகள் பல தரப்பட்ட சேவைகள் மனித மேம்பாட்டு கல்வி சனாதன தர்மம் உலகெங்கும் முன்பு நான் சாதனை செய் வதை விட பல முன்பு பல்மடங்கு மக்கள் எல்லோருக்கும் வெளிப்படும் என்று அறை கூறினார். திரேகா யுகத்தில் கஜமுக சங்காரம், மகிஷா சூரசங்காரம், சூரசங்காரம் என்று இங்கொன்றும் அங்கொன்றுமாக நடந்து அதன் பின்பு ஏற்பட்ட மிக பாரிய பிரளயத்தில் பூகோள அமைப்பில் அதிக மாற்றம் ஏற்பட்டது. கிரேகா யுகத்தில் இராமாயணம் மிகவும் தூரத்தில் நடைபெற்றது. துவாரகா யுகத்தில் ஒரு குடும்பத்தில் உள்ள சகோதரர்களிடையே மகாபாரத யுத்தம் நடைபெற்றது. யேகோவாவின் காலத்தில் யூத இஸ்லாமிய கிறிஸ்தவ மதங்கள் ஆரம்பிக்கப்பட்ட ஏடன் தோட்டத்தில் பற்பல பிரச்சினைகள் உருவானது. நோவாவின் காலத்தில் 40 நாட்கள் தொடர்ந்து பெய்த கடும் மழையி னால் ஏற்பட்ட பெரு வெள்ளத்தில் இருந்து காப்பாற்றப்பட்ட நோவாவும் அவரது பிள்ளைகளாகிய ஹம் ஜெம் ஜெபத் முறையே ஆபிரிக்காவுக்கும் ஐரோப்பாவிற்கும் கிழக்கிற்கும் சென்று தங்களது இறையாட்கொள்ளப்பட்டு காப்பாற்றப்பட்ட அனுபவத்தை கூறி னார்கள். கௌதம புத்தர் உடைய காலத்தில் வேதாகம சுருதி உபநிடத. இதிகாச புராணங்களில் கூறப்பட்டுள்ளவற்றை பிழையாக விளங்கி மக்கள் நாகரிகப்பற்று, காட்டு மிராண்டித்தனமாக வாழ்ந்த பொழுது புத்த தத்துவத்தை, சமயத்தை, சாதனத்தை ஏற்படுத்தினர். பாலைவன ங்களில் இஸ்லாமிய மக்கள் உண்ண உணவின்றி, உடுக்க உடுப்பின்றி, இருக்க வீடின்றி அலை ந்து திரிந்த போது கஷ்டப்பட்ட போது, நபிகள் நாயகம் அல்லாஹ்விடம் சரணடை ந்து வணங்கி கேட்ட அசரீரி புனித குர் ஆன் ஆக உருவெடுத்தது. இதே மாதிரி சம்பவங்கள் பல முன்பு நாரதர், ஔவையார் சப்தரிஷிகள், பதுஞ்சலி முனிவர், திருவள்ளுவர், 63 நாயன்மார்கள், 14 மெய்கண்டதே வர்கள், 18 ஆழ்வார்கள், ஆதிசங்கரர், பட்டினத்தடிகள், அருணகிரிநாதர், இராமலிங்க சுவாமிகள், தாயுமான சுவாமிகள், இயேசுநாதரின் பன்னிரெண்டு விசுவாசிகள், அநாகரிக தர்மபாலா ஜோஸ்ர மகாவீரர், குருநானக் போன் றவர்களின் வாழ்க்கையிலும் நடை பெற்றது. சுவாமி கூறுகிறார் வேதாக மம் கொள்ளு பூட்டன் என்றால் யூத மதம் பூட்டன் ஆகவும் புத்த மதம் பேரன் ஆகவும் கிறிஸ்தவ மதம் தாய் தந்தையாகவும் இஸ்லாமிய மதம் பிள்ளையாகவும் என்று கூறினால் மிகையாகாது என்று. ஆனால் தற்போது கலியுகத்தில் ஒவ்வொருவருடைய மனதிலும் சதா மீண்டும் மீண்டும் நல்ல கெட்ட எண்ணங்கள் மாறி மாறி உண்டாகி எல்லோரிடத்திலும் மன நிம்மதி குறைவு உள்ளது. இவற்றில் இருந்த விடுபட அன்பு, பாவம் செய்யும் நினைவு செயலிற்கு பயப்படுதல் தெய்வத்திடம் சரணாகதி முக்கியம் என்று ப்கவான் கூறுகிறார். அத்துடன் ஆரம்பத்தில் அர்ச்சனை, அபிஷேகம், விரதங்கள், நேர்த்தி, தவக்காலம், நோன்பு பூஜை, ஜெபம், பிரார்த்தனை, ஆராதனை, கூட்டுப் பிரார்த்தனை, குழுப் பாடல்கள், பஜனை, நகர சங்கீர்த்தனம், கல்வி வட்டம் குழு முயற்சி, நாராயண சேவை, சற் சங்கங்களை பார்த்தல், கேட்டல் பின்பு சாதனையில் முன்னேறி சும்மா இருத்தல் (பிரத்தியாகரம்), தியானம் (ஏகாசித்தம்), ஈற்றில் சர்விகல்ப நிர்விகல்ப சகாஜ சமாதி நிலையை அடைய நாமெல்லாரும் பயிற்சியை ஆரம்பித்து கிரமமாக செய்ய முயற் சிக்க வேண்டும் என்று. அப்பொழுது நாமனைவரும் முக்காலத்தையும் உணரும் முக்தி, பேரின்ப, பேரானந்த, தன்னை உணர்தல், கடவுளை உணர்தல், மோட்சம் என பல பெயர்களில் அழைக்கப்படும் நிலையை அடையலாம். மேற்கூறியவற்றை அன்னாரது பிறந்ததின விழாவில் நினைவுகூர்ந்து பயின்று பயனடைவோமாக.

வைத்திய கலாநிதி
க.சிவநேசன்
மருத்துவப்பீடம், போதனா
வைத்தியசாலை
யாழ்ப்பாணம்

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 80 | 90 | 60 |
| உருளைக்கிழங்கு | 120 | 110 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 130 | 130 | 150 | 140 |
| தக்காளி | 200 | 160 | 200 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 20 | 40 | 40 | 50 |
| கோவா | 120 | 120 | 100 | 120 |
| கரட் | 200 | 100 | 200 | 200 |
| பூசணி | 60 | 40 | 50 | 50 |
| புடோல் | 60 | 60 | 80 | 80 |
| வாழைக்காய் | 100 | 60 | 60 | 100 |
| சின்ன வெங்காயம் | 100 | 100 | 100 | 100 |
| பெரிய வெங்காயம் | 100 | 120 | 110 | 120 |
| பாகற்காய் | 200 | 200 | 200 | 200 |
| வெண்டிக்காய் | 100 | 80 | 110 | 100 |
| கருணைக் கிழங்கு | 100 | 60 | 80 | 70 |
| பயற்றங்காய் | 120 | 140 | 160 | 140 |
| லீக்ஸ் | 250 | 160 | 170 | 200 |
| பீற்றூட் | 100 | 80 | 90 | 150 |
| கறிமிளகாய் | 200 | 200 | 200 | 200 |
| முருங்கைக்காய் | 150 | 350 | 300 | 200 |
| போஞ்சி | 200 | 200 | 150 | 160 |
| கத்தரிதம்புள்ள | 40 | 60 | 70 | 60 |
| கீரை - 1 பிடி | 30 | 30 | 30 | 30 |
| தேசிக்காய் | 120 | 180 | 170 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 30-50 | 40 | 40 | 35-40 |
| இராசவள்ளி | 250 | 130 | - | - |

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 195


டொறின் மன்மதநாயகம்





செந்தூரம் சர்மா



சக்தி வேல்




கனகரத்தினம் கீர்த்தனா




பிரிய கருண





நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## அஞ்சலி நிகழ்வும் இரத்ததான நிகழ்வும்

இலங்கை விவசாயக் கல்லூரி வவுனியா வளாகத்தின் மாணவர் ஒன்றியத்தினால் நடத்தப்படும் கல்லூரி வளாகத்தில் கற்றல் செயற்பாட்டில் ஈடுபட்டிருந்த வேளையில் படுகொலை செய்யப்பட்ட மாணவர்களின் 8 ஆவது ஆண்டு நினைவஞ்சலி நிறைவும் இரத்ததான நிகழ்வும் நாளை செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு கல்லூரி வளாகத்திலுள்ள அமரர் அச்சுதன் மண்டபத்தில் அதிபர் திருமதி எஸ்.கைலேஸ்வரன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் விவசாயக் கல்லூரியின் பழைய மாணவர்கள், குருதிக் கொடையாளர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (2)




## புதுமுறிப்பு குளத்தை கொஞ்சம் கவனியுங்கள்!

(கிளிநொச்சி)

கிளிநொச்சி புதுமுறிப்புக்குளத்திற்கு அருகில் மண் அகழ்வு நடைபெற்று பாரிய கிடங்குகள் பள்ளங்கள் ஏற்பட்டுள்ளன. இதனை மட்டப்படுத்தி குளத்துடன் இணைத்து சீர் செய்து தருமாறு பொதுமக்கள் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

புதுமுறிப்புக்குளமானது பெரிய குளமாகும். இக் குளத்து நீரை விவசாயிகள் விவசாய நிலங்களுக்கு பாய்ச்சி விவசாய நடவடிக்கைக்கு பயன்படுத்தி வருகின்றனர். அத்துடன் நாளாந்த தேவையினையும் பொதுமக்கள் இக்குளத்து நீரில் நிறைவேற்றி வருகின்றனர். இக்குளத்துக்கு அருகில் அண்மைக்காலங்களில் கனரக வாகனங்கள் மூலம் கிரவல் மண் அகழ்ந்தெடுக்கப்பட்டமையால் ஆங்காங்கே பெரிய குழிகள், பள்ளங்கள் ஏற்பட்டுள்ளன.



இவ்வாண்டுக்கான பருவ மழை பெய்ய ஆரம்பித்துள்ள நிலையில் இக்குளத்தின் நீர்மட்டம் அதிகமானால் குளத்தை மேவி இப்பள்ளங் களில் நீர் தேங்கி நிற்க ஆரம்பித்து விட்டால் குளத்துநீரும் பள்ளநீரும் ஒன்றாகி விட வாய்ப்புள்ளது.

தமது அன்றாட நீர்த் தேவையின் நிமித்தம் இக் குளத்திற்கு சிறுவர்கள் வயோதிபர்கள் கால்நடைகள் வரும் வேளையில் பாரிய பள்ளங்களினுள் விழுந்து உயிராபத்தை சந்திக்கும் நிலைஏற்படும்என பொது மக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

எனவே கிளிநொச்சி மாவட்ட நீர்ப்பாசன அதிகாரிகள் நேரில் சென்று பார்வையிட்டு கிளிநொச்சி மாவட்ட திணைக்களம் இப் பள்ளங்களை கனரக வாகனங்கள் மூலம் மட்டப்படுத்தி உயிராபத்து ஏற்படாதவாறு பாதுகாக்க வேண்டுமென பொது மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (2-27)

## போக்குவரத்து விதிமுறைகளுக்கு அமைவாக சாரதிகள் வாகனத்தை செலுத்த வேண்டும்

### பொலிஸார் அறிவுறுத்து

லொறியுடன் மோட்டார் சைக்கிள் மோதிய விபத்தில் குடும்பப் பெண்ணொருவர் காயம் அடைந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று காலை மாங்குளம் சந்தியில் நடைபெற்றது.

இவ்விபத்தில் இல.133, துணுக்காய் வீதி, மாங்குளத்தை சேர்ந்த பொன்னம்பலம் சதீஸ்குமாரி என்பவரே காயமடைந்து மாங்குளம் ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டவராவார்.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

மாங்குளம் எரிபொருள் நிலையத்தில் லொறிக்கு எரிபொருள் நிரப்பிவிட்டு சாரதி, மாங்குளம் சந்தி யில் வைத்து மல்லாவி செல்வதற்காக திருப்ப முயன்ற வேளை, மாங்குளம் ஆதார வைத்தியசாலையிலிருந்து பயணித்த மோட்டார் சைக்கிள் மோதியதில் இவ்விபத்து இடம்பெற்றது.

இதன்போது காயமடைந்த பிரஸ்தாப குடும்பப்பெண் மாங்குளம் ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். இச்சம்பவம் தொடர்பில் மாங்குளம் பொலிஸார் அவ்விடத்திற்குவிரைந்து மேலதிகவிசாரணையை நடத்தினர்.

இது தொடர்பில் அவர்கள் தெரிவிக்கையில்,

மோட்டார் சைக்கிளில் பயணித்த குறித்த பெண்ணின் அவதானக் குறைவே விபத்து சம்பவிக்க காரணம் எனவும் ஏ-9 வீதியில் வாகனங்கள் வீதி சமிக்ஞைகளுக்கு அமைவாக பயணிப்பதில்லை என்றும் தெரிவித்துள்ளனர். அத்துடன் வாகனச் சாரதிகள் போக்குவரத்து விதிமுறைகளை பின்பற்றி சீரான வேகத்தில் பயணித்தால் விபத்துக்களையும் உயிராபத் துக்க ளையும் தவிர்த்துக் கொள்ள முடியுமென பொலிஸார் அறிவுறுத்தினர். (அ-2-281)

## தமிழ்விழா, திருக்குறள் மாநாடு அடுத்தாண்டு ஜனவரி நடைபெறும்

### கிளிநொச்சி தமிழ் சங்கத்தலைவர் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் ஆண்டு தோறும் பாடசாலைகளில் சான்றோர் நினைவு தினம், திருக்குறள், தமிழ் இலக்கியம், கலைத்திறன் போட்டிகள், கருத்தரங்குகள், திருக்குறள் மாநாடு ஆகியவை நடைபெற்று வருகின்றன.

அத்துடன் பல்வேறு துறைகளில் தொண்டு செய்பவர்களை தெரிவு செய்து கௌரவிக்கும் நிகழ்வினையும் பரிசளிப்பு விழாவினையும் கோட்ட மட்டங்களில் ஔவையார் விழா, தமிழ்சான்றோர் விழா, திணைக்களங்களுக்கு இடையில் தமிழ் போட்டி ஆகியவற்றை சிறப்பாக நடத்தி வருகின்றது.

மாரிகாலம் அண்மித்துள்ள நிலையில் தமிழ் விழாவையும் திருக்குறள் மாநாட்டையும் அடுத்தாண்டு ஜனவரி மாதம் 16, 17, 18 ஆம் திகதிகளில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச்சங்கத்தலைவர் வே.இறைபிள்ளை அறிவித்துள்ளார்.

இதன்படி 2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 16 ஆம் திகதி ஆரம்ப நிகழ்வாக பண்பாட்டு ஊர்வலம் நடைபெற்று அதனைத் தொடர்ந்து திருக்குறள் நூல் ஓவியக்கண்காட்சி திறந்து வைக்கப்படவுள்ளது.

மறுநாள் 17 ஆம் திகதி தமிழ் விழா கருத்தரங்கும் கலை நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன.

18 ஆம் திகதி திருக்குறள் கருத்தரங்கு,திருவள்ளுவர்விழா, பரிசில்வழங்கும் நிகழ்வு என்பன இடம்பெறும்.

இந்த இரு நிகழ்வுகளும் சிறப்பாக நடைபெறுவதற்கு நலன் விரும்பிகளிடமிருந்து நிதியுதவி எதிர்பார்க்கப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனவே நிதியுதவி வழங்க விரும்புவோர் எதிர்வரும் 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமைக்கு முன்னர் கிளிநொச்சிமாவட்டதமிழ்சங்கத்திற்குவருகை தந்து வழங்கமுடியுமென அவர் தெரிவித்துள்ளார். (அ-2-254)

## வர்த்தக சங்கத்திற்கு நிரந்தர கட்டடம் விரைவில் அமைக்கப்படும்

### மன்னார் வர்த்தக சங்கத்தினருடனான சந்திப்பில் டெனீஸ்வரன் உறுதி



மன்னார் மாவட்டவர்த்தக சங்கத்திற்கு நிரந்தர கட்டடம் விரைவில் அமைப்பதற்கு நிதியொதுக்கித் தருவதாக வடக்கு மாகாண மீன்பிடி போக்குவரத்து வாணிபம் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

மன்னார் மாவட்ட வர்த்தகர் சங்கத்தினரை நேற்று முன்தினம் மாலை 2 மணியளவில் அமைச்சர் பா.டெனிஸ்வரன் மன்னாரிலுள்ள அவரது உப அமைச்சு அலுவலகத்தில் சந்தித்தார்.

இவ் விசேட சந்திப்பின் போது பண்டிகைக் காலத்தில் தென்னிலங்கையில் இருந்து வருகின்ற வியாபாரிகளால் தொடர்ந்து மன்னார் மாவட்ட வர்த்தகர்கள் பெருமளவில் பண்டிகைக்கால வியாபாரத்தை இழந்து மிகவும் பாதிக்கப்படுகின்றமையை கருத்தில் கொண்டே இடம்பெற்றது.எனவே இது தொடர்பில் வர்த்தகர்களும் அமைச்சரும் கலந்துரையாடினர். தொடர்ந்து எதிர்வரும் ஆண்டு தொடக்கத்தில் மன்னார் மாவட்ட வர்த்தகர் சங்கத்துக்கு ஒரு நிலையான கட்டடம் அமைப்பதற்கான நிதியினை ஒதுக்கித் தருவதாகவும் அமைச்சர் இதன் போது தெரிவித்தார். [illegible]

## முதியோர், மாற்றுத்திறனாளிகள், சிறுவர் கௌரவிப்பு நிகழ்வு இன்று

(பனிக்கன்குளம்)

ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் சர்வதேச முதியோர் சிறுவர், முதியோர் மாற்றுத்திறனாளிகள் தின நிகழ்வு இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஒட்டுசுட்டான் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் இகுருபரன் தலைமையில் நடைபெறும்.


இந்நிகழ்வின்போது ஒட்டுசுட்டான் பிரதேசத்திற்குட்பட்ட பாடசாலைகளில் இவ்வாண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 9 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் பரிசில்களும் வழங்கப்படவுள்ளன.

அத்துடன் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இதேவேளை தெரிவு செய்யப்பட்ட மூத்தோர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் 108 பேருக்கு உடுபுடைவைகள் வழங்கப்படவுள்ளன.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக முல்லைத்தீவு மாவட்ட சட்ட உதவி ஆணைக்குழுவின் இணைப்பாளர் சட்டத்தரணி நர்த்தனரூபன் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளார். முத்தையன் கட்டு அன்பு சிறுவர் இல் [illegible] (2-28)

## டிப்பர் - மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞன் படுகாயம்



(மல்லாவி)

மாங்குளம் துணுக்காய் செல்லும் வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த டிப்பர் வாகனத்தின் மீது மோட்டார் சைக்கிள் மோதியதில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார் இச்சம்பவத்தில் அம்பாள் புரம் வன்னி விளாங்குளத்தை சேர்ந்த ஜோசப் நியூட்டன் (வயது21) என்பவரே படுகாயமடைந்தவராவார். இவ்விபத்து சம்பவம் நேற்று முன்தினம் பிற்பகல் 12.30மணியளவில் இடம்பெற்றது.

மாங்குளத்தில் இருந்து துணுக்காய் செல்லும் வழியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த டிப்பர் வாகனத்தின் பின் புறத்தின் மீது அதே வழியில் பயணித்த மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்து மோதியது.

இதில் படுகாயமடைந்த பிரஸ்தாப நபர் மாங்குளம் ஆதார வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக வவுனியா மாவட்ட வைத்தியசாலை அவசர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இச்சம்பவம் தொடர்பாக மாங்குளம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (2-281-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்தவை கவிழ்க்க களமிறங்கும் எதிரணியின் பொது வேட்பாளர் யார்?

*சண்டே டைம்ஸ் பத்திரிகையில் 2014.11.09 அன்று மகிந்த ராஜபக்சவை தோற்கடிப்பதற்கான வேட்பாளர் ஒருவரை தெரிந்தெடுப்பது என்னும் தலைப்பில் வெளியான ஆசிரியர் தலையங்கத்தின் தமிழாக்கம் பிரசுரிக்கப்படுகிறது.*

வர்விருக்கும் ஜனாதிபதித் தேர்தலில், தற்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்குச் சவாலாக இருக்கக் கூடிய பொதுவேட்பாளர் ஒருவரை தெரிந்து கொள்வதற்கான எதிர்க் கட்சிகளின் தேடுதல் முயற்சி இது வரையில் ஒருவித தந்திரோபாய இழுபறியாகவே தொடர்ந்து கொண்டிருக்கிறது என்பது உறுதியான ஒன்றேதான்.

ஆனாலும், அது இருட்டு அறையொன்றில் குருட்டு மனிதர்கள் அங்கு இல்லாத கறுப்புப் பூனையொன்றை தேடுவது போன்ற ஒரு உவமான எடுத்துக்காட்டு போன்றதாகி விடலாகாது. நிச்சயமான அரசியல் தகைமையுடன் கூடிய சக்தி வாய்ந்த வேட்பாளர்கள் இருந்த போதிலும்கூட பொதுவான இந்த முயற்சியில் ஈடுபட்டிருக்கும் சம்பந்தப்பட்ட கட்சிகளது பல்வேறுபட்ட கருத்துக்கள் காரணமாக இத்தெரிவு முயற்சி கடினமான ஒன்றாகவே இருக்கிறது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவு



டைய தோல்வியுடன் ஜனாதிபதி தலைமைத்துவ ஆட்சிமுறையை முடிபுக்குக்கொண்டுவரும் முதன்மை நோக்கத்தையே குறிக்கோளாகக் கொண்டவரும் கோட்டே ராஜமகா விகாரை உயர் பீடத்தைச் சேர்ந்த பௌத்த மதகுருவுமாகிய வனமாதுளுவாவே சோபித்த தேரர் அவர்களே இந்த வேட்பாளர் தெரிவினை முன்னின்று நடத்துகிறார்.

இரு தடவைகள் ஜனாதிபதியாக தெரிந்தெடுக்கப்பட்டவரே மீண்டுமொரு தடவை ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட முடியுமென்ற ராஜபக்சவினது உரிமைக் கோரிக்கைக்கு சவாலாக நிற்கும் ஜே.வி.பியின் பலத்த ஆதரவினைக் கொண்ட முன்னாள் பிரதம தலைமை நீதியரசர் சரத் என் டீ சில்வா அவர்களால் எழுப்பப்படும் அரசியலமைப்பு பிரச்சினையும்கூட உள்ளது.

• அரசியலமைப்பு ரீதியில் கிளம்பும் எதிர்ப்புகளின் நியாயப் பெறுமதி பற்றிய உச்சநீதிமன்றின் கருத்தினை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச நாடியிருந்தபோதிலும் உச்சநீதிமன்றத்தின் கருத்தென்பது அந்த நீதிமன்றத்தின் தீர்ப்பல்ல என்பதால் அதுமட்டில் அது எவரையும் சட்டரீதியில் கட்டுப்படுத்த முடியாது என ஐ.தே.க தலைவர் ரணில் விக்ரமசிங்க கடந்தவாரம் பகிரங்கமான அறிக்கையொன்றினை விட்டிருந்தார்.

அரசியல் கட்சிகள் போலவே பாண்டித்தியம் பெற்ற அரசியல் வல்லுநர்களும்கூட கடந்துவிட முடியாத ஓர் சட்டமுடக்க நிலையே இதுவாகும். இரு தடவைகள் ஜனாதிபதியாக தெரிந் தெடுக்கப்பட்டவரே மீண்டுமொரு தடவை போட்டியிடலாம் என கோரும் அவரது உரிமை மட்டில் எழும் எதிர்பார்ப்புக்கான தீர்வொன்றினை



சம்பந்தப்பட்ட அனைத்துக் கட்சிகளும் இணைந்தே பெற்றுக்கொள்ளத் தவறுமானால் அது மற்றுமோர் ஜனாதிபதி தேர்தலுக்கே வழிகோலுவது மட்டுமல்லாமல் படுமோசமான அரசியல் நெருக்கடியொன்றினை உருவாக்கியுதாகவும் அமைந்துவிடும்.

அதேநேரம், தமக்கான வேட்பாளரை எதிர்க் கட்சியின் தாமதமின்றி தெரிந்துகொள்வதே அவர்கள் மட்டில் விவேகமான செயலாக அமையும். ஏனென்றால் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அவர்கள் ஏற்கனவே தமக்கான பிரச்சார வேலைகளில் முனைப்பாக முன்னேறிச் சென்றுகொண்டிருப்பதாக தெரிகிறது.

விடயங்கள் இவ்விதமிருக்கையில் ஐ.தே.க தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையின் கீழ் அக்கட்சி பல்வேறு தேர்தல்களிலும் தோல்வியையே சந்தித்திருந்த போதிலும் பொது வேட்பாளர் ஒருவருக்கு இருக்க வேண்டிய மிகச் சிறந்த தகுதிகளனைத்தும் அவருக்கே இருப்பது தெளிவானதொன்று.


சிறிய சிறிய உட்கட்சிபூசல் இழுபறி



களுக்கு மத்தியிலும் கட்சி உடைந்து போகாமல் அவரே காத்துவருவது மட்டுமல்லாமல் கட்சிக்குள்ளேயே அவருக்கு பிரதான எதிராளியாக இருக்கும் சஜீத் பிரேமதாஜவையே தனது தலைமைத்துவத்திற்கான ஆதரவாளராகவும் கொண்டுள்ளார்.

ஐ.தே.கவை பலம்வாய்ந்த எதிர்க் கட்சி என்பதில் சந்தேகமேயில்லை. 2005 ஆம் ஆண்டின் ஜனாதிபதி தேர்தலில் மகிந்த ராஜபக்ச பெற்றிருந்த வாக்குக்ளான 50.29%க்கு எதிராக 48.43% வாக்குகளை ரணில் பெற்றிருந்தார். இலங் கையில் தமிழ் சமூகம் ரணிலுக்கே தமது வாக்குகளை அளிப்பதற்கு தயாராகியிருந்த நேரத்தில் ஏதோவொரு நியாயத்தின் அடிப்படையில் தனக்கே உரித்தான விதத்தில் வாக்களிப்பைத் தவிர்க்கும்படி தடையாணை ஒன்றினை விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் பிறப்பித்திருந்தார். அதுவே, ரணில் ஜனாதிபதியாவதை தடுத்துவிட்டதாக நம்பப்படுகிறது.

ரணில் விக்ரமசிங்க இல்லையென்றால் கட்சியின் வலுவான அடிமட்ட ஆதரவுடன் குறிப்பிடத்தக்களவு சிங்கள பௌத்த வாக்குகளையும் கொண்டவரான முன்னாள் கொழும்பு மேயர் கரு ஜயசூரிய உள்ளார். இறுதி நிமிட பந்தயக்குதிரையாக களமிறங்கக்கூடியவரும் விருப்போ, வெறுப்போ, நோக்கமோ வெளிப்படாமல் பொதுவேட்




பாளர் பட்டியலில் திடீரென உள்ளடக்கப்படக் கூடியவருமாக இருப்பவர் முன்னர் இருதடவை ஜனாதிபதியாக இருந்த முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவேயாகும்.

ஆனால், அவரும்கூட 3 ஆம் தடவை போட்டியிடுவதற்கெதிரான அரசியலமைப்புத்தடை தாண்டும் சவாலையே எதிர்கொள்பவராக இருப்பார். முன்னரும் இருதடவை ஜனாதிபதியாக ஆவதற்கு அவரது அக் கட்சியிலிருந்த குறிப் பிடத்தக்க வாக்கு பலத்துடன் ஐ.தே.க மற்றும் ஏனைய எதிர்க்கட்சிகளின் ஆதரவும் இருக்குமானால் எட்டப்படவேண்டிய 50% என்ற வெற்றி இலக்கை அவ ரால் எட்ட முடியும்.

ஆனாலும் சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஆதரவாளர்களில் எவ்வளவு தொகை யினர் மகிந்த ராஜபக்சவுக்கான தமது நீண்ட விசுவாசத்தை முறித்துக்கொண்டு இவர் பக்கம் சாய்வர் என்பதும் கேள்விக்குறியே. நிறை வேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழிப்பது பற்றி மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதியின் பேரில் பதவிக்கு வந்த அவர் ஏன் அதனை ஒழிக்காமல் விட்டிருந்தார்? என்ற தர்ம சங்கடமான கேள்வியொன் றுக்கும் அவர் முகம் கொடுக்க வேண் டியிருக்கும்.



மகிந்த ராஜபக்சவை தோற்கடிக்கக் கூடிய சிறந்த வாய்ப்பினைக் கொண்டவராக கருதப்பட்டவரும் கடந்த தேர்தலில் ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிட்டவருமான ஜெனரல் சரத்பொன்சேகாவும் உள்ளார். போர்க்காலத்தில் தமது வீரர்களை வெற்றிக்கு இட்டுச் சென்ற பெரும் வீர கொமாண்டர் என்ற அங்கீகாரத்தைப் பெற்றவராக இருந்த போதிலும் கடந்த தேர்தல் தோல்விக்குப் பின்னர் அவரது முன்னைய இராணுவ வெற்றியின் மகத்துவம் தொடர்ந்தும் பிரகாசிக்குமா என்பது கேள்விக்கிடமானதே.

தற்போது வரவிருக்கும் தேர்தல்களில் தீவிரமுக்கியத்துவம் வாய்ந்த பங்கினைக் கொண்டவர்களான வணமதுளுவாவே சோபித மற்றும் வண அத்துரலியரத்ன எனும் பிரபல பௌத்த பிக்குகள் இருவரும் கூட உள்ளனர். பொதுவேட்பாளர் ஒருவரை தெரிந்துகொள்வதில் இவர்களது செல்வாக்கும் ஆலோசனையும் கூட பிரதான உந்துசக்தியாக இருக்கும் என்பதில் சந்தேகமேயில்லை.

இப்போதும் அரசியல் ஸ்திரத்தன்மையின் உயர் வாய்ப்பினைக் கொண்டவராகவே இருக்கும் மகிந்த ராஜபக்சவைத் தோற்கடிப்பது கடினமான ஒன்றேயாகும். இவ்விதமாக தேர்தலில் அவருக்கு ஈடுகொடுத்து எதிர்நின்று தோற்கடிக்கும் திராணியுள்ள பொதுவேட்பாளர் ஒருவரை தெரிந்தெடுப்பது பிரதானமான பிரச்சினை ஒன்றாக உள்ளது. அத்துடன் இது எப்போதும் போலவே தொடர்ந்தும் ஒரு இழுபறியாகவே இருந்து கொண்டிருக்கிறது!

**தமிழில்-யோகர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூங்க வேண்டும் நான் புறப்படுகிறேன்

## புடின் வெளிநடப்பு



தொழில் முன்னேற்றம் மற்றும் பொருளாதார ரீதியாக உலகின் மிகவும் வளர்ந்த நாடுகள் என்றழைக்கப்படும் இந்தியா உள்ளிட்ட 20 நாடுகளின் கூட்டமைப்பான ஜி-20 மாநாடு அவுஸ்திரேலியாவில் உள்ள பிரிஸ்பேன் நகரில் நடந்து வருகின்றது.

இந்த மாநாட்டில் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் கலந்து கொண்டார். மாநாட்டின் இடைவேளையின் போது புடினை அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா, கனடா பிரதமர் ஸ்டீபன் ஹார்பர், இங்கிலாந்து பிரதமர் டேவிட் கமரூன் ஆகியோர் சந்தித்து பேசினர்.

அப்போது, புடினிடம் உக்ரைன் விவகாரத்தில் ரஷ்ய தலையீட்டுக்கு இங்கிலாந்து பிரதமர் டேவிட் கமரூன் கண்டனம் தெரிவித்தார். உக்ரைன் ஸ்திரதன்மையுடன் சுதந்திரமாக செயற்பட ரஷ்யா உடன்படிக்கையை நடைமுறைப்படுத்துவதை தவிர வேறு வழி இல்லை" இல்லாவிடில் ரஷ்யா மேலும் பொருளாதார தடைகளை சந்திக்க வேண்டியது இருக்கும் என மறைமுகமாக எச்சரித்தார்.

கனடா பிரதமர் ஸ்டீபன் ஹார்பர் கூறும் போது, உக்ரைனில் இருந்து ரஷ்ய இராணுவம் உடனே வெளியேற வேண்டும். அது ஒன்றையே தங்களிடம் தெரிவிக்கிறேன் என்றார். அதே கருத்தை அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவும் கூறியதாக தெரிகிறது.

கிழக்கு உக்ரைனில் கிளர்ச்சியாளர்களுக்கு ஆதரவாக செயற்பட்டு வருவதாக குற்றம் சாட்டி ரஷ்யா மீது ஐரோப்பிய யூனியன் பொருளாதார தடை விதித்துள்ளது. இதுபோன்ற சூழ்நிலைகளால் ரஷ்ய ஜனாதிபதி புடின் கடும் எரிச்சல் அடைந்தார். எனவே, நேற்று நடைபெறும் 2 ஆவது நாள் மாநாட்டின் நிறைவு விழாவுக்கு இடையில் அவர் வெளியேறினார்.

பின்னர் மாநாட்டு அரங்கத்தில் இருந்து வெளியேறிய புடின், வாசலில் காத்திருந்த பத்திரிகையாளர்களிடம் தனது செயலுக்கான நியாயத்தை பதிவு செய்தார்.

'நானும் என்னுடன் வந்த ரஷ்ய அதிகாரிகளும் இங்கிருந்து (பிரிஸ்பேன் நகரிலிருந்து) விளாடிவோஸ்டாக்குக்கு விமானத்தில் செல்ல 9 மணி நேரமாகும். அடுத்து, அங்கிருந்து மொஸ்கோ நகரைச் சென்றடைய மேலும் 9 மணி நேரமாகும். மொத்தம் 18 மணி நேரம் விமானத்தில் பயணித்து, எனது வீட்டுக்கு செல்ல வேண்டும்.

பின்னர், வழக்கம் போல் மறுநாள் என் பணிகளை தொடர வேண்டும். எனவே, இந்த பயணத்துக்கு முன்னர் குறைந்தது நான்கு மணி நேரமாவது தூங்க வேண்டியுள்ளது. எனவேதான் மாநாடு முடியும் முன்பே புறப்படுகிறேன் என்றார்.

பின்னர், அவரது தனி விமானம் பிரிஸ்பேன் நகரில் இருந்து விளாடிவோஸ்டாக் நோக்கி புறப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# போர் விமானங்கள் குண்டு மழை பாகிஸ்தானில் 27 தீவிரவாதிகள் பலி

(ராவல்பிண்டி)

பாகிஸ்தானில் போர் விமானங்கள் குண்டு மழை பொழிந்ததில் 27 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்.

பாகிஸ்தானில் வஜிரிஸ்தான் பகுதியில் பழங்குடி இன மக்கள் திரளாக வசிக்கின்றனர். இது தலீபான், அல்கொய்தா மற்றும் வெளிநாட்டு தீவிரவாதிகளின் புகலிடமாக திகழ்கிறது.

தீவிரவாதத்துக்கு எதிரான உலகளாவிய நடவடிக்கையின், ஒரு அங்கமாக இங்கு அமெரிக்க ஆளில்லா விமானங்கள் அவ்வப்போது தீவிரவாதிகளை குறிவைத்து குண்டு வீச்சு நடத்தி வருகின்றன. பாகிஸ்தான் போர் விமானங்களும் குண்டு மழை பொழிந்து வருகின்றன.

வடக்கு வஜிரிஸ்தானில் பதுங்கியுள்ள தீவிரவாதிகளை முழுமையாக ஒழிக்க பாகிஸ்தான் இராணுவம் தொடர வான்தாக்குதல்களில் ஈடுபட்டு வருகிறது. இந்த நிலையில், அங்கு தட்டாகேல் பகுதியில் உள்ள தீவிரவாதிகளை குறிவைத்து போர் விமானங்கள் இடைவிடாது குண்டு மழை பொழிந்தன. இதில் 27 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். இவர்களில் சிலர் தீவிரவாத அமைப்புகளின் தளபதிகளாக திகழ்ந்தவர்கள் என்று தகவல்கள் கூறுகின்றன.

ஆனால் சம்பவ பகுதியில் ஒரு குறிப்பிட்ட எல்லைக்கு அப்பால் ஊடகத்தினருக்கு அனுமதி இல்லை என்பதால், மேற்கொண்டு விபரங்கள் வெளியாகவில்லை. இந்த குண்டுவீச்சு குறித்து பாகிஸ்தான் இராணுவம், வடக்கு வஜிரிஸ்தான் பகுதியில் கடந்த ஜூன் மாதம் தொடங்கி தீவிரவாதிகளை கூண்டோடு ஒழிக்கிற விதத்தில் ஆபரேஷன் ஜார்ப்-இ-ஆஜ்ப் என்ற பெயரில் நடவடிக்கை எடுத்து வருகிறோம். இந்த நடவடிக்கையில் இதுவரை 90 சதவீதத்துக்கும் மேற்பட்ட தீவிரவாதிகளை ஒழித்துக் கட்டி விட்டோம் என்று தெரிவித்துள்ளது. (இ-5)

## ரசாயன ஆலையில் விஷவாயு கசிந்தது

அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணம், ஹவுஸ்டன் புறநகர் பகுதியில் உள்ள இரசாயன தொழிற்சாலையில அபாயகரமான விஷவாயு வெளியானதில் நான்கு பேர் பலியானார்கள். மேலும் ஒருவர் பாதிப்புடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஹவுஸ்டன் நகரின் கிழக்கு புறநகர் பகுதியான லா-போர்ட்டில் உள்ள டுபான்ட் தொழிற்சாலையில் இந்த விபத்து நிகழ்ந்துள்ள வாயு செல்லும் குழாயில் உள்ள வால்வில் ஏற்பட்ட கசிவு காரணமாக மெத்தைல் மெர்காப்டன் என்ற விஷவாயு கசிந்து இவ்விபத்து நிகழ்ந்ததாக அதிகாரிகள் கூறியுள்ளனர். விபத்தில் உயிரிழந்த குடும்பத்தாருக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்வதாக அத்தொழிற்சாலையின் மேலாளரான ராண்டால்க் ளெமண்ட்ஸ் கூறியுள்ளார்.

600 ஏக்கர் பரப்பளவில் செயற்படும் அத்தொழிற்சாலையில் 800 தொழிலாளர்கள் வேலை செய்கின்றனர். இத்தொழிற்சாலையில் டெப்லான், பூச்சிக்கொல்லிகள் மற்றும் ஆட்டோ பாதுகாப்பு கண்ணாடிக்கான பிளாஸ்டிக் மூலப்பொருள் ஆகியவை உற்பத்தி செய்யப்படுவது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# பாகிஸ்தான் இளைஞனின் தலை நடுவீதியில் வைத்து துண்டிப்பு

## தீவிரவாதிகள் வெறிச் செயல்



பாகிஸ்தான் நாட்டின் வடமேற்கு மெகர்பான் கெலாய் மற்றும் அருகில் உள்ள பள்ளதாக்கு பகுதி பழங்குடியினர் வாழும் பகுதி பாகிஸ்தானை சேர்ந்த தெக்ரிக்-இ-தலிபான் தீவிரவாத இயக்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ளது.ஆனால் லஸ்கர்-இ.இஸலாம் தீவிரவாத இயக்கத்திற்கும் இங்கு செல்வாக்கு உள்ளது. இந்த இரண்டு தீவிரவாத இயக்கங்களும் இணைந்து லஸ்கர் மக்கள் பாக். தலைமையில் கைகோர்த்து பாதுகாப்பு படைகளுக்கு எதிராக தக்குதல் நடத்தி வருகின்றனர்.

இந்த பகுதியில் பாதுகாபபு படைகளை உளவு பார்த்ததாக பழங்குடியினத்தைச் சேர்ந்த ஒருவர் சந்தைபகுதியிலநேற்று காலை பொது மக்கள் மத்தியில் தீவிரவாதிகளால் தலையை வெட்டி கொல்லப்பட்டார்.

கைபர் மாவட்டத்தில் டைரா பள்ளத்தாக்கில் .மெக்ர்பான் கலெய் பகுதியில் இந்த சம்பவம் நடந்து உள்ளது. அங்குள்ள மக்களிடம் நேற்று மாலை வரை யாரும் அவருடைய உடலை அப்புறப்படுத்தக்கூடாது என மிரட்டல் விடுத்து விட்டு சென்றனர்.

அரசு பாதுகாப்பு படைகள் தீவிரவாதிகளுக்கு எதிராக கடந்த மாதம் 16 ஆம் திகதி கைபர்-1 என்ற இராணுவ நடவடிக்கையை தொடங்கியது. இந்நடவடைக்கையை தொடர்ந்து அந்த பகுதியில் உள்ள ஆயிரக்கண க்கான மக்கள் தங்கள் வீடு களை விட்டு வெளியேறி இடம்பெயர்ந்துள்ளனர். எல்லை பாதுகாப்பு படையும், உள்ளூர் அரசு நிர் வாகமும் இந்த நடவடிக்கைக்கு அங்குள்ள பழங்குடியின மக்களுக்கு நேற்று முன்தினம் வரை கெடு விதித்து இருந்தது.

கெடு நீடிக்கப்பட்ட பிறகு பழங்குடியின தலைவர்கள் நாங்கள் பலமுறை பாது காப்பான இடங்களுக்கு எங்கள் குடும்பங்களை மாற்றி விட்டோம் என கூறினர். பேரழிவு மேலாண்மை அதிகாரி ஒருவர் கூறும் போது இந்த பகுதியில் 53,819 குடும்பங்களை சேர்ந்த 3 இலட்சத்து, 64 ஆயிரத்து,960 பேர் டைரா பளத்தாக்கில் இருந்து வெளியேறப்பட்டுள்ளனர். இதில் 2,13195 குழந்தைகளும் 77, 319 பெண்களும அடங்குவர். ஒவ்வொரு குடும்பத்திற்கும்இலவசஉணவு, போக்கு வரத்து, அவசர கால சுகாதார சிகிச்சை வழங்கப் படுகிறது என தெரிவித்தார்(இ-5)

# ஜப்பானில் முன்கூட்டியே தேர்தல் பிரதமர் ஷின்ஷோ அபே முடிபு

(டோக்கியோ)

ஜப்பானில் கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு பாராளுமன்ற தேர்தல் நடந்தது. அதில் பிரதமர் ஷின்ஷோ அபே அமோக வெற்றி பெற்றார். தற்போது அவரது தலைமையில் ஆட்சி நடைபெறுகிறது.

இந்த ஆட்சி வருகிற 2016 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம வரை உள்ளது. ஆனால் அதற்கு முன்னதாக ஆட்சியை கலைத்து விட்டு தேர்தல் நடத்த அபே முடிவு செய்துள்ளார்.

அதாவது ஜப்பான் பாராளுமன்ற தேர்தலை வருகிற டிசெம்பர் மாதமே நடத்துகிறார். அதற்கான அறிவிப்பை வருகிற 18ஆம் திகதி அதிகாரபூர்வமாக அவர் வெளியிடுகிறார்.

தற்போது எதிர்க்கட்சிகள் பலவீனமான நிலையில் உள்ளது. அதை பயன்படுத்தி அடுத்த தேர்தலை உடனடியாக நடத்த அவர் விரும்புகிறார். ஏனெனில் தற்போது ஜப்பான் பொருளாதார நெருக்கடியை சந்திக்கும் அபாயத்தில் உள்ளது.

அதனை சமாளிக்க நுகர்வோர் வரி 8 சதவீதத்தில் இருந்து 10 சதவீதமாக உயர்த்தப்படுகிறது. எனினும் தேர்தலை மனதில் கொண்டு அந்த முடிவை தற்காலிகமாக அவர் நிறுத்தி வைத்துள்ளார்.

ஜப்பானில் தற்காப்புக்காக மட்டுமே இராணுவம் உள்ளது. அதை படையெடுப்புக்கு தயார்படுத்தும் வகையில் விஸ்தரிக்கவும் பிரதமர் அபே திட்டமிட்டுள்ளார். அதை அமுல்படுத்தும் முனபே தேர்தலை நடத்த அவர் முடிவு செய்துள்ளதாக செய்திகள் வெளியாகி உள்ளன. (இ-5)




ஜி20 மாநாட்டில் காலநிலை மாற்றம், உக்ரைன் பிரச்சினை, எபோலா நெருக்கடி, சுதந்திர வர்த்தகம் போன்ற விடயங்களை வலியுறுத்தியும் ரஷ்ய ஜனாதிபதி புடினுக்கு எதிர்ப்பு தெரிவித்தும் அவுஸ்திரேலியாவில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெ. ஆதரவாளர்கள் அச்சுறுத்தல் விடுப்பு

## ஆச்சாரியாவின் சுயசரிதையில் அம்பலம்

சொத்துக் குவிப்பு வழக்கில் அரசு சட்டத்தரணி வாதாடிய என்னை தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் ஆதரவாளர்கள மிரட்டினார்கள் என்றும், வழக்கிலிருந்து விலகுமாறு பா.ஜ.க அழுத்தம் கொடுத்தது என்றும் பி.வி. ஆச்சார்யா தனது சுயசரிதை புத்தகததில் அதிர்ச்சி தகவலை தெரிவித்துள்ளார்.

கர்நாடக மாநிலம் உடுப்பியைச் சேரந்த பி.வி.ஆச்சார்யா, சுமார் 60 ஆண்டுகளாக சட்டத்தரணியாக பணியாற்றி வருகிறார். நேர்மையும், கண்டிப்பும் மிக்கவர் என வழக்கறிஞர்கள் மத்தியில் பேசப்படும் ஆச்சார்யா, 5முறை கர்நாடக மாநில தலைமை சட்டத்தரணியாக பதவி வகித்துள்ளார்.

பல்வேறு வழக்குகளில் ஆஜராகியுள்ள இவர், கடந்த 2005-ம் ஆண்டிலிருந்து 2013ம் ஆண்டு வரை, ஜெயலலிதா மீதான சொத்துக்குவிப்பு வழக்கில் அரசு வழக்கறிஞராக பணியாற்றினார்.


மூத்த சட்டத்தரணியான பி.வி. ஆச்சார்யா "All from memory" என்ற பெயரில் தனது சுயசரிதையை எழுதியுள்ளார். பெங்களூரில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற விழாவில் கர்நாடக உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி டி.ஹெச். வஹேலா புத்தகத்தை வெளியிட, மற்றொரு உயர் நீதிமன்ற நீதிபதி வேணு கோபால் பெற்றுக்கொண்டார்.

### வாய்தாவுக்கே தனி நூல் எழுதலாம்

இந்த சுயசரிதையில் ஜெயலலிதாவின் சொத்துக்குவிப்பு வழக்கு குறித்து சுமார் 14 பக்கங்களும், 30இற்கும் மேற்பட்ட பின் இணைப்புகளும் இணைக்கப்பட்டுள்ளன. அதில் அவர் எழுதியிருக்கும் தகவல்களின் சுருக்கம்.

என்னுடைய சட்டத்தரணி வாழ்கையில் சந்தித்த பரபரப்பான வழக்கு, ஜெயலலிதா மீதான சொத்துக் குவிப்பு வழக்குதான். மிகவும் எதிர்பார்க்கப்பட்ட இவ்வழக்கில் உச்ச நீதிமன்றம் எனக்கு வழாங்கிய பணியை நேர்மையுடன் செய்தேன். வழக்கு விசாரணையின்போது. ஜெயலலிதா தரப்பு பலமுறை வாயதா வாங்கியுள்ளது.

வாய்தா வாங்கப்பட்ட விதத்தையும், இவ்வழக்கு இழுத்தடிக்கப்பட்ட விதத்தையும் பற்றி தனி நூலே எழுதலாம். குற்றவியல் நடைமுறை சட்டத்தின் அனைத்து பிரிவுகளையும் பயன்படுத்தி வாய்தா வாங்கினார்கள். அது பற்றிய நூலுக்கு வாய்தா சட்டம் என பெயர் சூட்டலாம். ஆனால் அந்த நூலை படித்து எதிர்காலத்தில் குற்றவாளிகள் எளிதில் தப்பிக்க வாய்ப்பு ஏற்பட்டுவிடும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)




# ஜி-20 மாநாட்டில் பிரபலமான தலைவராகத் திகழும் மோடி



அவுஸ்திரேலியாவில் நடைபெறும் ஜி-20 நாடுகள் மாநாட்டில் அனைவரும் விரும்பும் நாட்டுத் தலைவராக பிரதமர் நரேந்திர மோடி திகழ்கிறார் என்று "தி கார்டியன்" தனது கட்டுரை ஒன்றில் தெரிவித்துள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா உட்பட அனைத்து நாட்டுத் தலைவர்களும் மோடியைச் சுற்றிச் சுற்றி வருவதாகவும், ஒபாமா மோடியுடன் பேசி சிரித்து வந்த காட்சியையும் காணமுடிந்தது என்றும் அந்தக் கட்டுரையில் கூறப்பட்டுள்ளது.

ஒபாமா, விளாடிமிர் புடின், அவுஸ்திரேலிய பிரதமர் டோனி அபாட என்று முக்கியத் தலை வர்கள் மோடியின் கவனத்தைப் பெறுவதில் ஆர்வம் காட்டி வரு கின்றனர்.

மோடியை அவுஸ்திரேலியப் பிரதமர் அபாட் வரவேற்ற போது, அவரை கட்டி அணைத்ததும் அங்கு பெரிய செய்தியாக வலம் வந்துள்ளது. மேலும் அபாட், மாநாட்டுத் தலைவர்கள் அனைவரும் தங்களது முதல் பெயரை சொல்லி அழைத தால் நெருக்கம் அதிகமாக உணரப்படும் என பரிந்துரைத்ததாகவும் தெரிகிறது.

தி கார்டியன் தனது கட்டுரையில் கூறியுள்ள வாசகம் இதோ: "இந்தியப் பிரதமர் மோடி, இந்த ஜி-20 மாநாட்டில் மிகவும் பிரபலமான மனிதராகத் திகழ்கிறார். மற்ற தலைவர்கள் இவரைப் பார்க்கவும், இவரால் பார்க்கப்படவும் விரும்புகினறனர்" என்று கூறப்பட்டுள்ளது. (இ-5)




# இந்திய சமூக ஒற்றுமையின் சின்னமாக திகழ்கிறது இந்தி!



## பிரணாப் முகர்ஜி பெருமிதம்

இந்தி மொழி, இந்தியாவின் சமூக, கலாசார ஒற்றுமையின் சினமாக திகழ்கிறது என்று ஜனாதிபதி பரணாப் முகர்ஜி தெரிவித்துள்ளார்.

இந்தியை அலுவலக பயன பாட்டில் ஊக்குவிப்பதில் சிறப்பாக செயற்பட்ட பல்வேறு அமைச்சகங்கள், துறைகளைச் சேர்ந்த அதிகாரிகளுக்கு ஆட்சி மொழி விருதுகள் வழங்கும் விழா, டில்லியில் நேற்று முன் தினம் நடைபெற்றது. மத்திய உள்துறை அமைச்சகம் ஏற்பாடு செய்திருந்த இவ்விழாவுக்கு ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி தலைமை வகித்தார்.

இந்நிகழ்ச்சியில் பிரணாப் முகர்ஜி பேசியதாவது: "இந்தியா போன்ற பல்வேறு மொழிகள் பேசும் மக்கள் வசிக்கும் நாட்டில், இந்தி மொழி தனித்துவம் வாய்ந்ததாக உள்ளது. நமது சமூக, கலாசார ஒற்றுமையின் சின்னமாக இந்தி உள்ளது. மக்களிடையேயும், அரசையும் மக்களையும் இணைக்கும் முக்கிய பாலமாக இந்தி மொழி திகழ்கிறது. சமூக நலத்திட்டங்கள் வெற்றி பெற வேண்டுமானால், அது தொடர்பான தகவல்களை இந்தி மற்றும் இந்திய மொழிகளில் அளிக்க வேண்டும். இதன் மூலம் அத்திட்டம் பற்றி சாமானியர்கள் தெளிவாக அறிந்துகொள்ள முடியும்.

கணனி, தொலைபேசி ஊடகங்க ளில் இந்தி மொழி பயன்பாடு அதிகரந்து வருவது மகிழ்ச்சியளிக்கிறது. இந்தி மொழியை அதிகமாக பயன்படுத்த முழு முயற்சிகளை நாம் எடுக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# பிரிஸ்பேனில் காந்தி சிலையினை திறந்து வைத்தார் பிரதமர் மோடி

அவுஸ்திரேலியாவின் பிரிஸ்பேன் நகரில் மகாத்மா காந்தி சிலையை, பிரதமர் நரேந்திர மோடி திறந்து வைத்தார்.

பிரிஸ்பேன் நகரில் நேற்று முன்தினம் தொடங்கிய ஜி20 நாடுகளின் தலைவர்கள் உச்சி மாநாட்டில் பிரதமர் மோடி பங்கேற்றார். இந்தியர்கள் அதிகம் வாழும் ரோமா பார்க் பகுதியில் மகாத்மா காந்தியின் சிலையை திறந்து வைத்தார். முன்னதாக பிரதமர் மோடிக்கு மக்கள் பெரும் வரவேற்பு அளித்தனர். அவுஸ்திரேலியாவில் வாழும் இந்திய மக்கள் குவிந்திருந்து பிரதமர் மோடியை வரவேற்றனர். பிரதமர் மோடி அனைவருக்கும் வாழ்த்துக்கள் தெரிவித்தார்.

சிலை திறப்பு நிகழ்ச்சியில் பிரதமர் நரேந்திர மோடி உரையாற்றினார். அப்போது அவர் பேசுகையில், நான் எப்போதும் மகாத்மா காந்தியின் கொள்கை மற்றும் தத்துவத்தை நம்புகிறேன் என்றார். இந்திய சமூகத்தினரின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்கும், ஒத்துழைக்கும் பிரிஸ்பேன் மேயருக்கு நன்றி தெரிவித்துக் கொண்டார். (இ-5)

# ஒபாமாவுடன் கட்டடக் கலை நிபுணரின் வாழ்க்கை வரலாற்றை பகிர்ந்த மோடி

அமெரிக்கா, அவுஸ்திரேலியா, இந்தியாவுடன் உணர்வுபூர்வமாக தொடரபுள்ள கட்டட கலை நிபுணரின் வாழ்க்கை வரலாற்றை அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா, அவுஸ்திரேலிய பிரதமர் டோனி அபோட் ஆகியோருடன் இந்திய பிரதமர் மோடி பகிர்ந்து கொண்டார்.

இது தொடர்பான தகவலை வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் சையது அக்பருதீன் டுவிட்டர் இணையதளத்தில் பகிர்நது கொண்டுள்ளார். அதன் விபரம், அமெரிக்காவைச் சேர்ந்த பிரபல கட்டடக்கலை நிபுணர் வால்டர் பர்லே கிறிபின். அவுஸ்திரேலிய தலை நகர் கான்பரா நகர கட்டுமானத்தை இவர்தான் வடிவமைத்தார. இவரது உடல் இந்தியாவில் லக்னோ நகரில் அடக்கம் செய்யப்பட்டது.

அவரது வாழ்க்கை வரலாற்றை ஒபாமா, அபோட் ஆகியோருடன் பகிர்ந்து கொண்ட மோடி, நமது நாடுகளிடையே இதுபோன்ற உணர்வுபூர்வமான தொடர்புகள் உள்ளன என்று சுட்டிக்காட்டினார். அதனை ஒபாமாவும், அபோட்டும் ஆர்வத்துடன் கேட்டனர்.

லக்னோவில் வால்டர் பர்லே அடக்கம் செய்யப்பட்ட இடத்தில் கிறிஸ்தவ முறைப்படி அமைக்கப்பட்ட கல்லறையும் உள்ளது.

1937ஆம் ஆண்டு தனது 61ஆவது வயதில் வால்டர் பர்லே மறைந்தார். உலகின் தலைசிறந்த கட்டட கலை நிபுணரான அவர், பல நவீன கட்டுமாணங்களை உருவாககினார். வீட்டுக்கு முன்பு கார்களை நிறுத்த அமைக்கப்படும் "கார் போர்ட்" அவரது கட்டட அமைப்புகளில் ஒன்று.

28 ஆண்டுகளில் 350 கட்டடங்களையும், பல்வேறு நகர கட்டுமான திட்டங்களையும் அவர் வடிவமைத்துள்ளார். மாளிகைகளின் உள் அலங்கார வடிவமைப்பிலும் வால்டர் பர்லே திறமை வாய்ந்தவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயிற்றை மட்டுமே நினைப்பவன்.
சட்டத்தை மதிப்பதில்லை
– கோபிகிருஷ்ணா

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## விடை- பெயில் சோதனை - பாஸ்

பிழையான விடைக்கு யாராவது பாஸ் கொடுப்பார்களா என்ன? விடை பிழை என்றால் பரீட்சை முடிவும் பெயிலாகவே இருக்கும்.

எனினும் பிழையான விடையை எடுத்தாலும் சோதனை முடிவு பாஸ் என்பதாக இருக்கும் அதிசயம் நடந்து கொண்டுதான் இருக்கிறது. இதை நாம் சொல்லும் போது உங்களுக்கு ஆச்சரியமாக இருக்கும். பிழையான விடை எழுதி சோதனையில் பாஸ் பண்ணுவதென்பது தவறுதலாகக் கூட நடக்க முடியாது என்பது உங்களுடைய வாதமாக இருந்தால், இந்தச் சம்பவத்தை வாசிக்கும் போது உண்மை புரியும்.

அன்பர் ஒருவர் அண்மையில் மோட்டார் சைக்கிளில் யாழ்ப்பாண நகர வீதியால் சென்று கொண்டிருந்தார். அவருக்கு முன்னால் ஒரு வாகனம் ஏகப்பட்ட புகையை கக்கிக் கொண்டு சென்றது.

நுளம்பு ஒழிப்பு நடவடிக்கையின் பொருட்டு புகை அடிக்கப்படுகின்றதோ என்று நினைத்த அந்த அன்பர் அப்படியாக இல்லை என்பதை உறுதி செய்து கொண்டார். ஒரு மாதிரியாக மோட்டார் சைக்கிளை முன்னெடுத்து, வாகனச் சாரதியிடம் ஐயா! இந்தப் புகையைக் கட்டுப்படுத்த முடியாதா? என்று கேட்டார்.

அந்தக் கேள்வியோடு குறித்த வாகனமும் மோட்டார் சைக்கிளும் வீதியோரமாக நிறுத்தப்படுகிறது. இப்போது சாரதி தனது வாகனம் புகையைக் கக்கவில்லை என்று கூறுகிறார்.

இதற்கு மோட்டார் சைக்கிளில் வந்தவர் ஐயா! நீங்கள் சொல்வது தவறு. உங்களுடைய வாகனம் நிறையவே புகை கக்குகிறது என்றார். உடனே வாகனச் சாரதி தன்னிடம் இருந்த புகைப் பரிசோதனை பெறுபேற்றை காட்டுகிறார். இதோ! புகைப்பரிசோதனையில் எனது வாகனம் பாஸாகியுள்ளது. புகைப் பரிசோதனையில் பாஸாகியதால் வரி அனுமதிப் பத்திரமும் கிடைத்துள்ளது என்றார். சாரதியின் பதில் மோட்டார் சைக்கிளில் வந்தவரை வாயடக்கச் செய்து விட்டது.

பட்டப் பகலில், பகிரங்கமாக, நகரத்தின் நடுவீதியில் இத்துணை புகையை வெளியேற்றிய அந்த வாகனமும் புகைப் பரிசோதனையில் பாஸ் பண்ணியுள்ளது என்றால் நிலைமை எப்படி என்று பாருங்களேன்.

என்ன செய்வது! புகைப் பரிசோதனையின் போது குறித்த வாகனத்தின் விடை பெயில் என்றே வந்திருக்கும். ஆனால் சோதனை முடிவு பாஸ் என்றாகி றிசல்ட் வெளியாகியுள்ளது.

ஆக, வாகனங்களில் புகைப் பரிசோதனையை மேற்கொள்வதன் மூலம் சூழல் மாசடைதலை தடுக்கலாம் என்று நினைத்து புகைப் பரிசோதனைக்கு உரிய சட்ட ஏற்பாடுகளை செய்தவர்களே உண்மையில் பெயிலாகியுள்ளனர்.

அகப்பை பிடிக்கின்ற கை நம்ம கை என்றால் முதற் பந்தி, அடிப்பந்தி என்ற வேறுபாடு கிடையாது. இதுபோல புகைப் பரிசோதனை செய்பவர் நமக்குத் தெரிந்தவர் என்றால்; நமக்குத் தெரிந்தவராக ஆக்கிக் கொள்ளக் கூடியவர் என்றால் கரும்புகை, வெண்புகை என எதுவாக இருந்தாலும் றிசல்ட் பாஸ் என்பதாகவே இருக்கும்.

என்ன செய்வது? ஒன்றைத் தடுப்பதற்காக இன்னொன்றை அறிமுகமாக்கினால், பணம் என்ற பேராயுதம் பாதாளம் வரை சென்று தாக்குதல் நடத்தி பிழையான விடைக்கும் பாஸான முடிவை கொண்டு வருகிறது. புகைப் பரிசோதனை சரியானதா? என்று அறியுமாறு பொலிஸாருக்கு உத்தர விட்டால் அங்கும் பணம் பாதாளம் மட்டும் பாயவே செய்யும்.

அட! காசேதான் கடவுளடா! என்பது நம் நாட்டில் முற்றிலும் உண்மைபோல் இருக்கிறது.

# ஊடக சுதந்திரம் வடக்கில் இல்லை

## ஜே.வி.பி.குற்றச்சாட்டு

வடபகுதியில் ஊடக சுதந்திரமும் பேச்சு சுதந்திரமும் முற்றுமுழுதாக குழி தோண்டி புதைக்கப்பட்டுள்ளது என ஜே.வி.வி தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவிக்கையில்,

அரசோடு ஒத்து ஊதினால் அது ஜனநாயகம். அரசிற்கு எதிராக பேசினால் நாட்டுக்கு அவதூறு என நாட்டு மக்களையும் ஊடகவியலாளர்களையும் அரசு அச்சுறுத்தி வருகின்றது.

வடபகுதிக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களாகிய நாம் வருகின்ற போதும் எம்மைப் புலனாய்வுப் பிரிவினர் பின் தொடருகின்றனர்.'

ஊடகவியலாளர்களை சந்திப்பது கூட அச்சுறுத்தல் மிக்கதொன்றாகவே இங்கு காணப்படுகின்றது.

நாடாளுமன்ற உறுப்பினர்களாகிய எமக்கே இந்த நிலைமை என்றால் இங்குள்ள மக்களின் நிலை எமக்கு தெளிவாக புரிகின்றது.

மகிந்த ஆட்சியில் பேச்சு சுதந்திரம், எழுத்து சுதந்திரம், ஜனநாயக சுதந்திரம் குழி தோண்டி புதைக்கப்பட்டுள்ளது.

இங்குள்ள ஊடகவியலாளர்கள் ஊடக நிறுவனங்கள் அச்சுறுத்தலுக்கு மத்தியிலேயே இருந்து வருவதனையும் அவதானிக்க முடிகின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)

## கிணற்றினுள் வீழ்ந்த வயோதிபப் பெண் மரணம்

(கரணவாய்)

யாழ்.வடமராட்சியில் கிணற்றுக்குள் வீழ்ந்த வயோதிபப் பெண் சிகிச்சை பலனின்றி இறந்துள்ளார்.

முறாவில் புலோலி தெற்குப் பகுதியைச் சேர்ந்த சுப்பிரமணியம் மீனாம்பிகை (வயது 72) என்பவரே இவ்வாறு இறந்துள்ளார்.

குறித்த பெண் நேற்று முன்தினம் சனிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் வயல்வெளியில் உள்ள கிணறு ஒன்றில் விழுந்துள்ளார்.

இதனை அவதானித்த பொது மக்கள் சிலர் கிணற்றில் இருந்து காப்பாற்றி மந்திகை வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர்.

இந்நிலையில் அன்றைய தினம் 4 மணிக்கு அவ் வயோதிபப் பெண் இறந்துள்ளார் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இது தொடர்பான விசாரணைகளை நெல்லியடிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (செ-7, 60)

## 100 மணித்தியாலம் சீர்திருத்த தண்டனை

(கரணவாய்)

மது போதையில் வீதியில் சென்றவர்களுடன் அநாகரிகமாக நடந்து கொண்ட நெல்லியடி பகுதியினை சேர்ந்த 21 வயதுடைய நபரை 100 மணித்தியாலங்கள் நீதிமன்ற வளாகத்தில் சமூக சீர்திருத்த பணிக்கு உட்படுத்துமாறு பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் ஜெ.கஜநிதிபாலன் கடந்த வெள்ளிக்கிழமை உத்தரவிட்டுள்ளார்.

மேற்படி சந்தேக நபர் வீதியில் சென்றவர்களுடன் அநாகரிகமாக நடந்து கொண்ட சந்தேகத்தில் கடந்த 11 ஆம் திகதி நெல்லியடி பொலிஸாரால் கைது செய்யப்பட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

மேற்படி வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே நீதவான் மேற்படி உத்தரவை பிறப்பித்தார். (இ-7,60)

## ஸ்ரீ ஐயப்ப சுவாமி மண்டல பூசை

கட்டுவன் கரண்டக்குளம் அருள்மிகு ஸ்ரீ ஐயப்ப சுவாமி மண்டல பூஜை இன்று திங்கட்கிழமை இடம்பெறவுள்ளது. கார்த்திகை முதலாம் நாள் சபரி மலை ஐயப்ப விரதத்தை முன்னிட்டு முற்பகல் 11 மணிக்கு கட்டுவன் ஸ்ரீராஜ ராஜேஸ்வரி அம்மாள் ஆலயத்தில் திருமாலை அணியும் நிகழ்வும் இடம்பெற்றவுள்ளது. (இ-7)

## கும்ப ஊர்வலம்

வேலம்பிராய் கண்ணகி அம்மன் ஆலய பயிர் குளிர்த்தி அம்மன் கும்ப ஊர்வலம் இன்று திங்கட்கிழமை காலை இடம்பெறவுள்ளது. (இ-7)

## உபியில் கோரவிபத்து 12பேர் ஸ்தலத்தில் பலி

உத்தரபிரதேசம் மாநிலம் கோரக்கபூர் மாவட்டம் அருகே உள்ள திங்கார்பூர்-குண்டார்கி சாலையில் நேற்று காலை வானில் சென்று கொண்டிருக்கும் போது எதிர்பாராத விதமாக வான் மீது எதிரே வந்த லொறி மோதியதில் வானில் பயணம் செய்த சாரதி உட்பட 12 பேர் பலியாகினர். இதில் பலியானவர்கள் 10 பெண்கள் 2 ஆண்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வானில் பயணம் செய்த 4 பேர் படுகாயம் அடைந்தனர். படுகாயம் அடைந்தவர்களை அருகில் உள்ள மருத்துவமனைக்கு கொண்டு சென்று சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர்.

விபத்தில் பலியான பெண்களின் வயது சுமார் 35-40 வரை இருக்க கூடும் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தை ஏற்படுத்திவிட்டு தப்பி ஓடிய லொறி சாரதியை திங்கார்பூர் பொலிஸார் வழக்கு பதிவு செய்து தேடி வருகின்றனர். விரைவில் லொறி சாரதி கைது செய்யப்படுவார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-5)

## நைஜீரியாவில் மாணவிகள் கடத்தப்பட்ட நகரை தீவிரவாதிகள் கைப்பற்றினர்

நைஜீரியாவில் பாடசாலை மாணவிகள் கடத்தப்பட்ட சிபோக் நகரை தீவிரவாதிகள் கைப்பற்றியுள்ளனர்.

நைஜீரியா நாட்டில் ஆதிக்கம் செலுத்தி வருகிற போகோஹரம் தீவிரவாதிகள், அங்கு போர்னோ மாகாணத்தில், சிபோக் நகரில் உள்ள பாடசாலையில் கடந்த ஏப்ரல் மாதம் புகுந்து 200 இற்கும் மேற்பட்ட மாணவிகளை கடத்திச் சென்றனர். அந்த மாணவிகள் இன்னும் மீட்கப்படவில்லை. அவர்களை தாங்கள் திருமணம் செய்து கொண்டு விட்டதாக சமீபத்தில் தகவல் வெளியிட்டு கடத்தல்காரர்கள் பரபரப்பை ஏற்படுத்தினர்.

இதற்கிடையே, சிபோக் நகரையும், அதைச் சுற்றியுள்ள கிராமங்களையும் பிடிப்பதற்காக அவர்கள் கடந்த பல நாட்களாக கடுமையாக சண்டையிட்டு வந்தனர்.

இந்த நிலையில் அவர்கள் கடந்த 13 ஆம் திகதி சிபோக் நகரை கைப்பற்றி தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்துவிட்டதாகவும், தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியபோது, பாதுகாப்பு படையினர் ஓட்டம் பிடித்து விட்டதாகவும் நேற்று முன்தினம் தகவல்கள் வெளியாகின. இது தொடர்பாக நைஜீரிய அரசு தரப்பிலோ, ராணுவ தரப்பிலோ தகவல் எதுவும் வெளியிடப்படவில்லை. மேலும் கானோ நகரில் கடந்த வெள்ளிக்கிழமை பெற்றோல நிலையம் ஒன்றில் தற்கொலைப் படை தாக்குதல் நடத்தப்பட்டது. இந்த தாக்குதலில் சுமார் 6 பேர் கொல்லப்பட்டதாக தெரிய வந்துள்ளது. (இ-5)

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை 2014

''பொருட்களின் உண்மையான இயல்புகளை நாம் சரியாகக் கருத்திற்கொண்டால் ஒவ்வொரு மரமும் தங்கத்தினாலோ வெள்ளியினாலோ ஆக்கப்பட்டிருப்பதை விட அது பச்சையாகவே இருப்பதே அதி உன்னதமானது''

*-மார்டின் லூதர் (ஜேர்மனிய கத்தோலிக்க மதகுரு)*

## வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## பூரணப் பொருட்கள்



✦ பிரபஞ்சத்தில் காணும் எப்பொருளும் அணுக்களின் கூட்டமே.சக்தி என்றாலும் வேகம் என்றாலும் ஒன்றே. வேகம் என்பது பிறக்குமிடம் அணுவேயாகும்.

✦ அணுவில் ஒரு வேகம் இருக்கின்றதென்றால் அது ஒரு குறை நிலையாக இருந்து நிறைவான ஒன்றை நாடி எழுகிறது என்பதுதான் பொருள்.

✦ குறை என்பது நிறைவான ஒன்றை ஆதாரமாகக் கொண்டு இருக்கும் மாறுபட்ட நிலை.

✦ ஆகவே, அணு என்ற ஒரு குறை நிலைக்கு மூலமும் முடிவுமாக இருப்பது ஒரே பூரணப் பொருள் தான் என்று விளங்குகிறது.

✦ அணுவைக் கடந்து ஒருபொருளோ, அணு நிலையைக் கடந்து ஒரு தனி நிலையோ உண்டு எனில் அது வெட்ட வெளியைத் தவிர வேறொன்றுமில்லை.

✦ ஆகவே, வெட்டவெளி என்ற தத்துவமே அனைத்திற்கும் ஆதாரமாகவும் மூல சக்தியாகவும் உள்ள சர்வ வல்லமையும் உடைய ஒரு உறுதிப்பொருள் என்றும் அதுவே ஆதியாகவும் அநாதியாகவும் உள்ள பூரணப் பொருள் எனவும் திடமாகக் கூறுகிறேன்.

✦ இயற்கையின் ஆதி நிலை என்றும் சிவம் என்றும் தெய்வம் என்றும் பேசப்படுகிறதும் இதுவே.

✦ ஒரு மனிதனின் விந்து நாதத் தொடர்பைப் பின்நோக்கி ஆராய்ந்து கொண்டே போனால் அது பல்லாயிரம் ஜீவராசிகள் கடந்து கடைசியாக அணுவிலேதான் போய் முடிவு பெறும். அணுவின்மூலமோ மேலே விளக்கிய வெட்டவெளிதான் என்றும் தெரிந்துவிடும். அங்கிருந்து முன்னோக்கிப் பார்த்தால் பிரபஞ்சமாக விரிந்துள்ள அனைத்துமே ஒரே மூலத்தை அடிப்படையாகக் கொண்டே இயங்கிக் கொண்டிருக்கும் உண்மை அறிவுக்கு அகக்காட்சியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியன் சுப்பர் லீக் காற்பந்து புனே-யுனைடட் ஆட்டம் சமநிலை




புனே சிட்டி ,யுனைடெட் அணிகள் மோதிய ஆட்டம் சமநிலையில் முடிவடைந்துள்ளது.


இந்தியன் சுப்பர் லீக் காற்பந்து போட்டியில் (ஐ.எஸ்.எல்.) இந்தியாவின் கவுகாத்தியில் நேற்று முன் தினம் இரவு நடந்த 32 ஆவது லீக் ஆட்டத்தில் நார்த் ஈஸ்ட் யுனைடெட் எப்.சி. (கவுகாத்தி)-எப்.சி.புனே சிட்டி அணிகள் மோதின. விறுவிறுப்பான இந்த ஆட்டத்தில் பந்து அதிக நேரம் கவுகாத்தி அணியினரிடம் வலம் வந்தாலும் அந்த அணியால் கோல் அடிக்க முடியவில்லை. இரு அணிகளும் கோல் அடிக்கும் நல்ல வாய்ப்புகளை நழுவ விட்டனர். முடிவில் இந்த ஆட்டம் கோல் எதுவு மினறி சமநிலையில் முடி நந்தது. இந்த தொடரில் சம நிலையில்முடிந்த 13 ஆவது ஆட்டம இதுவாகும். அத்துடன் கோல்இன்றி சம நிலை ஆன 7 ஆவது ஆட்டம் இது.

தனது 8 ஆவது லீக்கில் ஆடிய கொல்கத்தா 2 வெற்றி, 4 சமநிலை, 2 தோல்வியுடன் 10 புள்ளிகள் பெற்று 5 ஆவது இடத்தில் உள்ளது. 8 ஆவது ஆட்டத்தில் ஆடிய எப்.சி.புனே சிட்டி அணி 3 வெற்றி, 3 டிரா, 2 தோல்வி என்று 12 புள்ளி களுடன் 3 ஆவது இடத்தில் இருக் கிறது. (க)

விளையாட்டுச் செய்திகள்




## மஜெரிக்கை வீழ்த்தி சம்பியனானார் ரஷ்யாவின் மெல்னி கோலா



சர்வதேச டெனிஸ் அமைப்பின் சார்பில் நடந்த பெண்களுக்கான ஒற்றையர் இறுதி போட்டியில் ரஷ்யாவின் மரீனா மெல்னி கோவா 6-2, 7-6 (7-4) என்ற நேர் செட்டுகளில் சுலோவேக்கியா நாட்டின் டடேஜா மஜெரிக்கை வீழ்த்தி பட்டம் வென்றுள்ளார்.

இந்த போட்டியில் வெற்றி பெறுபவர் பெறும் பண மதிப்பு 25 ஆயிரம் அமெரிக்க டொலராகும். முதல் செட்டை மரீனா எளிதாக கைப்பற்றினார். அரை இறுதி ஆட்டத்தில் உக்ரைனின் அனஸ்டேசியா வசிலியேவாவை நேர் செட்டுகளில் வீழ்த்திய டடேஜா நேற்று நடந்த போட்டியில் சற்று போராடினார். 2 ஆவது செட்டில் 3 செட் புள்ளிகளை கைப்பற்றிய டடேஜா, ஆட்டம் டை பிரேக்கர் ஆக செல்வதற்கு ஏற்ற வகையில விளையாடினார்.

ஆனால், தொடர்ந்து அவரால் ஈடு கொடுத்து ஆட முடியாததை அடுத்து செட் மற்றும் போட்டியை இழந்தார். இந்தியாவின் நம்பர் ஒன் வீராங்கனையான அங்கிதா ரெய்னா கால் இறுதி சுற்றில் தோற்று வெளியேறியதால் ஒற்றையர் ஆட்ட த்தில் இந்தியாவின்சவால்முடிவுக்கு வந்தது.

எனினும், நேற்றுமுன் தினம் நடந்த போட்டியில் சீனாவின் ஜியா-ஜிங் லூ உடன் இணைந்து இரட்டையர் ஆட்டத்தில் விளையாடி ரெய்னா வெற்றி பெற்றுள்ளார். (க)

## சந்தேகத்தில் கிளார்க்




அவுஸ்திரேலியா பிரிஸ்பேனில் நடைபெறும் இந்தியாவுக்கு எதிராக முதலாவது டெஸ்ட் போட்டியில் மைக்கல் கிளார்க் விளையாடுவதில் சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

அவுஸ்திரேலியா சென்றுள்ள தென் ஆபிக்க அணி ஒருநாள் போட்டித்தொடரில் விளையாடி வருகிறது. இரு அணிகளுக்குமிடையில் பெர்த்தில் நடந்த முதல் போட்டியில் அவுஸ்திரேலிய அணித் தலைவர் மைக்கல் கிளார்க் காயமடைந்துள்ளார். இடது காலில் மீண்டும் தசைப்பிடிப்பால் கிளார்க் அவதிப்பட்டு வரும் நிலையில், காயத் தன்மை குறித்து அறிய ஸ்கான் பரிசோதனை செய்யப்பட்டது.


இதில், காயம் பெரிதாக இருப்பது தெரிய வந்துள்ளதால் தென் ஆபிரிக்காவுக்கு எதிரான எஞ்சிய 4 போட்டிகளிலும் அவர் விளையாட மாட்டாரஎன்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்த மாதம் நான்காம் திகதி இந்திய - அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி பிரிஸ்பேனில் ஆரம்பமாகிறது. இதில் மைக்கல் கிளார்க் விளையாடுவாரா என்பது தொடர்பில் சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

உலக கிண்ண கிரிக்கெட் தொடர் நெருங்கி வரும் வேளையில் அடிக்கடி காயத்தில் சிக்குவதால், கிளார்க ஒருநாள் போட்டியின் தலைமைப் பொறுப்பிலிருந்து விலக வேண்டும் என அவுஸ்திரேலிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கிளார்க் இருந்தாலும் இல்லாவிட்டாலும் அவுஸ்திரேலிய அணியால் உலக கிண்ணத்தை வெல்ல முடியும் என்று அந்த அணியின் பயிற்சியாளர் டேரன் லீமான் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (க)

## இறுதிப் போட்டியில் பெடரர்



ஏ.பி.டி. உலக டெனிஸ் போட்டி லண்டனில் நடைபெற்று வருகிறது. இதன் இறுதி போட்டிக்கு ரோஜர் பெடரர் (சுவிட்சர்லாந்து) தகுதி பெற்றார்.

அவர் அரை இறுதியில் 4-6, 7-5, 7-6 (8-6) என்ற கணக்கில் சக நாட்டைச் சேர்ந்த வாவ்ரிங்காவை தோற்கடித்தார்.

இறுதிப் போட்டியில் ஜோகோவிச் - பெடரர் மோதுகிறார்கள். (க)

## அஜ்மலின் சோதனை தோல்வி




பாகிஸ்தான் அணியின் சுழற்பந்துவீச்சாளர் சைட் அஜ்மல் உத்தியோகபற்றற்ற பரிசோதனையில் தோல்வியடைந்த்துள்ளார். சைட் அஜ்மல் இங்கிலாந்தில் உத்தியோகபூர்வ பரிசோதனை செய்வதற்கு முன்னர் குறித்த பரிசோதனையை, உயிரியல் இயந்திர தொழில்நுட்பத்தின் மூலம் சைட் அஜ்மல் பரிசோதனை செய்து கொண்டார். ஆனாலும் இந்த பரிசோதனை அவருக்கு தோல்வியை வழங்கியுள்ளது. இந்த அறிக்கை பாகிஸ்தான் கிரிக்கெட் சபைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதனையடுத்து சைட் அஜ்மலை மேலும் ஒரு வார காலம் இங்கிலாந்தில் தங்கி அவருக்கு பயிற்சிகளை வழங்கிய சக்லைன் முஸ்டாகிடம் பயிற்சிகளை பெற்றுக் கொள்ளுமாறு அறிவித்துள்ளது.

குறித்த பரிசோதனையில் சர்வதேசக் கிரிக்கெட் சபைக்காக சோதனைகளை மேற்கொள்ளும் வைத்திய நிபுணர் மார்க் கிங் அவரின் குழுவினருடன் இணைந்து குறித்த சோதனைகளை மேற்கொண்டார். இந்த சோதனையில் 18 வீடியோ படப்பிடிப்பு கருவிகளை வைத்து குறித்த சோதனைகளை செய்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சோதனையில் மீள பந்து வீச அஜ்மலால் முடியும் என அனைவரும் நம்பி இருந்த போதும் இந்த சோதனையில் அவர் தொல்வியடைந்துள்ளது அவரின் கிரிக்கெட் எதிர்காலத்தை கேள்விக்குறியாக்கியுள்ளது. பாகிஸ்தான் கிரிக்கெட் சபை உல்கக்கிண்ணத்திற்கு அஜ்மலை தயார் செய்ய முயற்சித்து வருகின்றது. ஆனாலும் இந்த முயற்சி தோல்வியடைந்துள்ளது பாகிஸ்தான் கிரிக்கெட் சபைக்கும் தோல்வியை ஏற்படுத்தியுள்ளது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோர்கல் அசத்தல்: தென்னாபிரிக்கா வெற்றி



உலகின் அதிவேக ஆடுகளமான அவுஸ்திரேலியாவின் பேர்த் வகாவில் மோர்னி மோர்கல், ஒருநாள் கிரிக்கெட் வாழ்க்கையில் தனது மிகச் சிறந்த பந்துவீச்சு பெறுபேற்றை (5/21) பதிவு செய்ய, தென்னாபிரிக்க அணி 134 பந்துகள் மீதமிருக்கையில் 3 விக்கெட்டுக்களால் அவுஸ்திரேலிய அணியை வீழ்த்தியது.

ஆஸியின் ஹாசில்வூட் 5 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினாலும் அது அணியின் வெற்றிக்கு போதுமானதாக அமையவில்லை.

அவுஸ்திரேலியாவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க அணி அங்கு 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்குபற்றி வருகிறது.

இரு அணிகளுக்கும் இடையிலான முதலாவது ஒருநாள் போட்டியில் அவுஸ்திரேலிய அணி வெற்றி பெற்றிருந்த நிலையில்,

2 ஆவது ஒருநாள் போட்டி நேற்று பேர்த், வகாவில் நடந்தது.

போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற அவுஸ்திரேலிய அணி முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய ஆஸி அணிக்கு ஆரம்பம் நல்லதாக அமையவில்லை.

இந்த போட்டியில் ஹீரோவாக ஜொலித்த மோர்கல், தனது கை வரிசையை ஆரம்ப ஓவரிலேயே காட்டத் தொடங்கினார். ஆட்டத்தின் 5 ஆவது பந்தில் அதிரடி வீரர் வோர்னர் (0) ஆட்டமிழந்தார்.

மோர்கலின் அட்டகாசமான ஆரம்பத்தை சிறப்பாக பயன்படுத்திய தென்னாபிரிக்க பந்துவீச்சாளர்கள் ஆஸி அணிக்கு நெருக்கடியை கொடுத்தனர்.

இதனால் ஆஸி அணியின் முன் வரிசை விக்கெட்டுக்கள் (பின்ஞ் 08, வோட்சன் 10, ஸ்மித் 11) வேகமாக சரியத் தொடங்கின.

எனினும் 5 ஆவது விக்கெட்டுக்காக இணை சேர்ந்த அணித் தலைவர் பெய்லி – மார்ஷ் தமக்கிடையில் 58 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பகிர்ந்து விக்கெட் சரிவை தடுத்து நிறுத்தினர்.

இந்நிலையில் பெய்லி 25 ஓட்டங்களுடன் பிலாண்டரின் பந்துவீச்சில் வெளியேற அவுஸ்திரேலிய அணி மீளவும் தனது விக்கெட்டுக்களை இழக்கத் தொடங்கியது.

ஆனாலும் தனது சொந்த நாட்டில் 2 ஆவது ஒருநாள் போட்டியில் விளையாடிய மிச்சல் மார்ஷ் இறுதி வரை போராடி ஆஸி அணி 150 ஓட்டங்களை கடக்க உதவினார்.

இறுதியில் அவுஸ்திரேலிய அணி தென்னாபிரிக்காவின் வேகப் புயல்களுக்குள் சிக்கி 41.4 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 154 ஓட்டங்களை எடுத்தது.

மிச்சல் மார்ஷ் இறுதிவரை போராடி 67 ஓட்டங்களை எடுத்தார்.

பந்துவீச்சில் தென்னாபிரிக்க அணி சார்பில் மோர்கல் 5, ஸ்ரெய்ன் 3, பிலாண்டர், பொஹாா்டியன் தலா ஒரு விக்கெட்டை கைப்பற்றினர்.

இலகுவான வெற்றியிலக்கை நோக்கி தமது துடுப்பாட்டத்தை ஆரம்பித்த தென்னாபிரிக்க அணிக்கு நியு சவுத் வேல்ஸின் வேகப் புயல், ஹாசில்வூட்டின் பந்துவீச்சு சிக்கலை கொடுத்தது.

இதனால் தென்னாபிரிக்க அணியும் ஆஸி அணியைப் போலவே முன்னணி விக்கெட்டுக்களை வேகமாக இழந்தது. எனினும் அணித் தலைவர் ஏபி.டி.வில்லியர்ஸின் (27 பந். 41 ஓட்.) அதிரடி ஆட்டத்தால் தென்னாபிரிக்க அணி 27.4 ஓவர்களில் வெற்றியிலக்கை (157) 3 விக்கெட்டுக்களால் அடைந்தது.

பந்துவீச்சில் அசத்திய ஹாசில்வூட் 31 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

போட்டியின் ஆட்டநாயகனாக தென்னாபிரிக்காவின் மோர்கல் தெரிவானார். 5 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடர் 1:1 என்ற கணக்கில் சமனிலையில் உள்ளது.

இரு அணிகளுக்கும் இடையிலான 3 ஆவது ஒருநாள் போட்டி கான்பெராவில் எதிர்வரும் 19 ஆம் திகதி ஆரம்பமாகிறது.

# கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட பெண்ணுக்கு ஒரு இலட்சம் அபராதத்துடன் விளக்கமறியல்

(கரணவாய்)

யாழ்.வடமராட்சி பகுதியில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட நபர் ஒருவருக்கு 15 ஆயிரம் ரூபாயும், கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட பெண் ஒருவருக்கு ஒரு இலட்சம் ரூபாய் குற்றப் பணமாகவும் அறவிடும் படி பருத்தித்துறை நீதவான் கடந்த வெள்ளிக்கிழமை உத்தரவிட்டுள்ளார்.

இதில் கரவெட்டி மேற்கில் உள்ள குறித்த நபர் தொடர்ச்சியாக கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டு வந்தமையும் துன்னாலை கிழக்கில் உள்ள மேற்படி பெண் தொடர்ச்சியாக கசிப்பு விற்பனையில் ஈடுபடுவது தொடர்பான தகவல்கள் நெல்லியடிப் பொலிஸாருக்கு கடந்த வியாழக்கிழமை கிடைத்துள்ளன.

இதன்படி குறித்த பகுதிகளுக்கு சென்ற பொலிஸார் அவ்விருவரையும் கைது செய்து பொலிஸ் காவலில் வைத்து விசாரணைகளை நடத்திய போதும் எந்தவொரு குற்றங்களையும் அவ்விருவரும் ஒப்புக் கொள்ளவில்லை.

இதனையடுத்து மறுநாள் வெள்ளிக்கிழமை பருத்தித்துறை நீதி மன்றத்தில் ஆஜர்படுத்திய போது குற்றங்களை ஒப்புக் கொண்டுள்ளனர்.

இதில் குறித்த பெண் பல குற்றங்களுடன் தொடர்புடையவர் எனவும் தெரிய வந்தது.

இதற்கமைய ஒரு இலட்சம் ரூபாய் குற்றப்பணம் அறவிடும் படியும் எதிர்வரும் 28 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறும் உத்தரவிடப்பட்டதுடன் அந் நபருக்கு 15 ஆயிரம் ரூபாய் குற்றப் பணத்தினை அறவிடும்படியும் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. (இ-7,60)

# இலங்கைக்கு வெள்ளையடிப்பு



அணித் தலைவர் அஞ்சலோ மத்யூஸின் சகல துறை பெறுபேற்றினால் வெற்றிக்கு அண்மையாக இலங்கை அணி பயணித்தபோதும் இந்திய அணித் தலைவர் ஹோலி, அக்ஷர் பட்டேலுடன் இணைந்து வீழ்த்தப்படாத 8 ஆவது விக்கெட்டுக்காக பெறுமதி வாய்ந்த 57 ஓட்டங்களைப் பகிர்ந்து இலங்கை அணிக்கு வெள்ளையடித்தார்.

இந்தியாவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்ட இலங்கை அணி அங்கு 5 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் பங்குபற்றியது.

இத்தொடரின் முதல் நான்கு போட்டிகளிலும் தோல்வியடைந்த இலங்கை அணி, இப்போட்டியில் வெற்றிபெற்று ஆறுதல் அடைவோம் என்ற எண்ணத்தில் களமிறங்கியது.

போட்டியின் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பாட்டத்தை தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி வழமை போன்றே தனது விக்கெட்டுக்களை இழந்து (4-85) தடுமாறியது.

எனினும் அணித் தலைவர் மத்யூஸின் அபார சதம் (116 பந். 139) கைகொடுக்க இலங்கை அணி 50 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 286 ஓட்டங்களை எடுத்தது.

287 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இந்திய அணி தனது ஆரம்ப விக்கெட்டுக்களை வேகமாக இழந்த போதிலும் அணித் தலைவர் விராட் ஹோலி தனியொருவராகமறுமுனையில் நிலையாக நின்று கொண்டிருந்தார்.

போட்டியின் இறுதிக்கட்ட வேளையில் இந்திய அணி 43.2 ஓவரில் 7 விக்கெட்டுக்களை இழந்து 231 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இதன்போது வெற்றியானது இலங்கை அணி பக்கம் சாய்ந்திருந்தாலும் விராட் ஹோலி அதிரடித் துடுப்பாட்டத்தினால் (139*) அதனை மாற்றினார்

இறுதியில் இந்திய அணி 48.4 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை 3 விக்கெட்டுக்களால் அடைந்தது..

போட்டியின்நாயகனாக இலங்கை அணியின் மத்யூஸும், போட்டித் தொடரின் நாயகனாக இந்திய அணியின் விராட் ஹோலியும் தெரிவாகினர்.

# குடும்பஸ்தர் மீது வாள் வெட்டு

வவுனியா, புளியங்குளம், பிள்ளையார் குடியிருப்பு பகுதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு குடும்பஸ்தர் மீது வாள்வெட்டுத் தாக்குதல் நடைபெற்றுள்ளதாக புளியங்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

கந்தையா செல்வராசா என்ற குடும்பஸ்தரின் வீட்டினுள் புகுந்த சிலர் அவர் மீது சரமாரியாக வாளால வெட்டிவிட்டு தப்பியோடியுள்ளனர் என்றும், படுகாயமடைந்தவர் புளியங்குளம் வைத்தியசாலையில் இருந்து நோயாளர் காவு வண்டி மூலம் வவுனியா கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து கொழும்புக்கு மாற்றப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இச் சம்பவம் தொடர்பாக தாம் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர் என்று புளியங்குளம் பொலிஸார் தெரிவித்தனர். (செ-6)

# தண்டம் செலுத்த புதியமுறை

நெடுஞ்சாலைகளில் பயணிக்கும் போது வீதி ஒழுங்கை மீறும் குற்றங்களுக்கான தண்டப் பணத்தை சாரதிகள், இவ்வருட இறுதிக்கு முன்னர் இருந்து தொலைபேசி மூலமாக செலுத்த முடியும் என்று பொலிஸ் ஊடகப்பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இந்த புதுமுறைமை பொலிஸாரினால் அறிமுகப்படுத்தப்படும் என்றும் தொலைபேசிகளின் எந்த வலையமைப்பினூடாகவும் தண்டப் பணங்களை செலுத்த முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (செ-6)

# கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட 26 வயது பெண் கைது

யாழ்ப்பாணம், துன்னாலை, கோட்டப்பளை பகுதியில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட 26 வயதுடைய சந்தேகநபரான பெண் ஒருவரை நேற்று முன்தினம் சனிக்கிழமை கைது செய்ததாக நெல்லியடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சுமித்.சி. பெரேரா தெரிவித்தார்.

குறித்த பெண்ணின் வீட்டுக்கு விசாரணைக்காகச் சென்ற பொலிஸார், அப்பெண் கசிப்பு வடிப்பதைக் கண்டு அவரை கைது செய்துள்ளனர்.

அத்துடன், இரண்டு போத்தல் கசிப்பு, 10 லீற்றர் கோடா மற்றும் கசிப்பு வடிப்பதற்கு பயன்படுத்தும் உபகரணங்கள் என்பனவும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேகநபரை நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக பொறுப்பதிகாரி மேலும் தெரிவித்தார். (செ-60)

# ஜனாதிபதித்...

ரணை நடத்த வேண்டும் என்று கோரிக்கை விடுத்திருந்தார்.

சுமார் 7 ஆண்டுகாலம் இலங்கையில் அமைதி முயற்சிகளுக்கு சொல்ஹெய்ம் பங்காற்றியிருந்தார்.

அன்று சொல்ஹெய்ம் வந்து என்னிடம் என்ன கூறினார். உங்களின் இராணுவத்தால் எந்த வழிகளிலும் (விடுதலைப் புலிகளை) தோற்கடிக்க முடியாது. அவர் (பிரபாகரன்) யுத்தத்தில் மிகவும் வல்லவர், ஜீனியர்ஸ் என்று கூறினார். நான் ஒரு பதில்தான் அவரிடம் கூறினேன. அவர் வடக்குக் காட்டில் பிறந்த மனிதர். நான் தெற்கு காட்டில் பிறந்த மனிதர் என்று அவருக்கு பதில் கூறினேன் என்று கூறியுள்ளார் மகிந்த ராஜபக்ஷ. நோர்வேயின் சமாதானத [illegible] வும் அதுதொடர்பில் தம்மிடம் ஆதாரங்கள் இருப்பதாகவும் சரியென்றால் இந்தக் குற்றச்சாட்டுக்கள் பற்றி நோர்வே அரசாங்கம் விசாரணை நடத்த வேண்டும் என்றும் ஜனாதிபதி இங்கு கூறினார்.

இந்நிலையில், மகிந்த ராஜபக்ஷவின் இக்குற்றச்சாட்டுகள் தொடர்பில் டுவிட்டரில் பதிலளித்துள்ள எரிக் சொல்ஹெய்ம், இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தேர்தலை மையப்படுத்தி பொய் கூறியுள்ளார் எனத் தெரிவித்துள்ளார். அத்துடன், இது தொடர்பில் ஒளிவு மறைவற்ற உண்மையை இன்று வெளிப்படுத்து வேன் என்றும் அவர் டுவிட்டரில் தெரிவித்துள்ளார். (செ-6)

# பொய்ப் பிரசாரத்தை...

உறுப்பினர்கள் அரசாங்கத்துடன் இணையப் போவதாக பொய்ப் பிரசாரங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. நாட்டு மக்கள் ஆட்சி மாற்றத்தை விரும்புகின்றதொரு நிலையில் ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து எவரும் ஆளுந்தரப்புடன் இணைய போவதில்லை.

தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கப்பட்டமைக்கு, ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் மீது குற்றஞ்சாட்டப்படுகின்றது.

ஐரோப்பாவில் விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்குமாறு கோரி புலம்பெயர்ந்தோர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தனர். இவ்வழக்கு நான்கு வருடங்கள் நீடித்த போதிலும் அரசாங்கம் அதற்கு எதுவிதமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை. இதனை மறைத்து, தமிழீழ விடுதலை புலிகள் மீதான தடை நீக்கத்துக்கு ஐக்கிய தேசியக் கட்சியின்மீது குற்றம்சாட்டுவதில் பயனில்லை.

இன்னும் சில தினங்களில் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான அறிவிப்பு வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஐக்கிய தேசிய கட்சி எத்தேர்தல்களுக்கும் தயாராக வுள்ளது என்றார். (செ-6)

# தேர்தல் அறிவிப்பின்...

மும் பூர்த்தியாகாத நிலையில், ஐக்கிய தேசியக் கட்சியினால் தேர்தலுக்கு ஆயத்தமாக முடியாது என அவர் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஆண்டில் நடைபெறவுள்ள தேர்தல்களுக்கான ஆரம்ப கட்ட ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, எதிர்வரும் தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சி இலகுவாக வெற்றியீட்டும் என கட்சியின் பொதுச செயலாளர் திஸ்ஸ அத்த நாயக்க நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

அனைத்து எதிர்கட்சிகளின் ஒத்துழைப்பும் பெற்றுக்கொள்ள வேண்டியது அவசியமானது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி மகிந்தவை தோற்கடிப்பதற்கு அனைத்து எதிர்க்கட்சி களினதும் ஒத்துழைப்பு தேவை என அவர் குறிப்பிட்டுள்ளார். (செ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 81 கிலோ கஞ்சாவுடன்...

லும் நடவடிக்கை யொன்றில் குழு வொன்று ஈடுபட்டு வருவதாக பொலிஸாருக்கு தகவல் கிடைத்தது.

இந்த குழுவினரை கைது செய்வதற்காக, வடமாகாண பிரதிபொலிஸ மா அதிபர் பூஜித ஜயசுந்தரவின் வழிகாட்டலில், இளவாலை பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பொலிஸ் அதிகாரி டி.கே.எஸ்.ஏ.றோஹண தலைமையில் பொலிஸ் அணியொன்று நடவடிக்கையில் ஈடுபட்டது.

இந்நிலையில், கார் ஒன்றில் கஞ்சா பொதிகளை கடத்தி சென்ற நல்லூர் மற்றும் கல்வியங்காடு பகுதிகளைச் சேர்ந்த 19 மற்றும் 35 வயதுடைய இரண்டு சந்தேகநபர்கள கைது செய்யப்பட்டனர்.

அத்துடன், அவர்கள் பயணித்த காரிலிருந்து 1 கோடியே 2 இலட்சம் ரூபாய் பெறுமதியுடைய கேரளா கஞ்சா பொதிகளும் கைப்பற்றப்பட்டன என்று அவ்வதிகாரி கூறினார்.

சந்தேகநபர்களிடம் விசாரணைகளை மேற்கொண்ட போது, இந்தியாவிலிருந்து படகு ஒன்றின் மூலம் யாழ்ப்பாணத்துக்கு இந்த கஞ்சா கொண்டுவரப்பட்டதாகவும் கார் ஒன்றை வாடகைக்கு எடுத்து, அதன மூலம் இவற்றை கொழும்புக்கு கொண்டுசெல்ல முயன்றதாகவும் சந்தேக நபர்கள் தெரிவித்தனர்.

சந்தேகநபர்களிடம் மேலதிக விசாரணைகள இடம்பெற்று வருவதாகவும் இவர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள தாகவும் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மேலும் கூறினார். (செ-6)


**வாழ்க்கையில் வெறுப்பா?**

பிரச்சினை எதுவானாலும், எம்முடன் தொலைபேசியில் அல்லது நேரில் பேசுங்கள். இரகசியங்களைப் பேணுவோம்

காலை 9.00 - பி.ப 1.00

**கைகொடுக்கும் நண்பர்கள்**
104,4 ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
021 222 8117

(C-9108)



THE FIRST TIME யாழ்ப்பாணத்தில் முதல் முதலாக
2880 DPI



NEW Photo Quality Printing
Gongzheng Thunderjet Digital Printer
(World Color Digital Technology)

Jana Digital 0770731654

Photo Quality 40/=
Normal Quality 35/=

- பந்தல் பிறிண்டிங்
- பனர் பிறிண்டிங்
- விளம்பரப் பதாகைகள்
- ஸ்ரிக்கர்கள்
- லைட் பதாகைகள்

Light Board - 1Side - 450/= 2 Side - 500/=
Name Board - 1Side - 160/= 2Side - 230/= 1Side - 210/= 2Side - 320/=
3 வருட உத்தரவாதம்
Sticker Print 70/=
Backlit Print 70/=

ஜனா டிஜிற்றல் பிறிண்டிங் | மானிப்பாய் வீதி, ஆறுகால் மடம். 021 221 3233, 077 073 1654

(C-9107)



**தேவை**

கனடாவில் உள்ள வயதான வர்களை பராமரிக்க ஆண்/பெண் இருபாலாரும் தேவை.

தொடர்பு:-0776018406

(8346)


## சபாபதிப்பிள்ளை முகாம் காணி...

றுள்ளனர்.

எனினும் சம்பவ இடத்துக்கு சென்ற வலி.வடக்கு பிரதேச சபையின் தவிசாளர் எஸ்.சுகிர்தன் மற்றும் உப தவிசாளர் எஸ்.சஜீவன் ஆகியோரும் மக்களும் சேர்ந்து காணி அளப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

காணியை அளக்கவந்த நில அளவைத் திணைக்களத்தினரிடம் குறித்த காணியின் உறுதி இல்லாமல் எவ்வாறு காணியை அளப்பீர்கள் என எதிர்ப்புக் காட்டியுள்ளனர்.

அதற்கு நாம் காணியை அளக்க வரவில்லை எனவும் இராணுவமே எம்மை அழைத்து வந்தது. என்ன பிரச்சினை வந்தாலும் நாம் பார்த்துக் கொள்கின்றோம் என இராணுவமே எமக்குக் கூறியது எனத் தெரிவித்தனர்.

எமது எதிர்ப்பையும் மீறி காணி அளக்க முடியாது எனவும் முகாம் அமைந்துள்ள காணியின் உரிமையாளர் தன்னிடம் கடிதம் மூலம் தனனுடைய காணி தேவை யென்று முறையிட்டுள்ளதாகவும், இதனையும் மீறி அளந்தால் வழக்கு தொடருவோம் என உபதவிசாளர் எஸ்.சஜீவன நில அளவைத் திணைக்களத்தினரிடம் தெரிவித்துள்ளார்.

எனினும் இராணுவத்தினரோடு அங்கு வந்த ஒருவர், இதில் நீங்கள் தலையிட முடியாது. நாம் மக்களுக்கு காணி கொடுக்கப் போகின்றோம் என பிரதேச சபையினரிடம் கூறியபோதிலும் எதிர்ப்புக் காரணமாக காணி அளவிடப்படும் பணிகை விடப்பட்டது.

இதேவேளை இன்று மாதகலில் கடற்படைத் தேவைக்கென காணிகள் அளவிடப்படும் பணிகள் இடம் பெறவுள்ளதாக அறிய முடிகின்றது. (செ-4)

## கிழக்கு முதலமைச்சர் மஜீ...

அமீர் அலியை நியமிக்கும் படி ஆளும் கூட்டணியில் அங்கம் வகிக்கும் அகில இலங்கை முஸ்லிம காங்கிரஸ் வலியுறுத்தி வருகிறது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்த வாக்குறுதியை காப்பாற்ற வில்லை என்று அக்கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

இந்தப் பிரச்சினையை தான் தீர்ப்பதாக அமைச்சர் பசில் ராஜபக்ஷ அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ்ஃக்கு வாக்குறுதி அளித்திருந்த போதிலும், அது நிறைவேற்றப்பட வில்லை.

கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் அமீர் அலி ஏனைய வேட்பாளர்களை விட அதிக வாக்குகளைப் பெற்றிருந்த போதிலும், அவருக்கு எவ்வித பதவியும் வழங்கப்படவில்லை.

கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ்ஃக்கு நான்கு ஆசனங்கள் மற்றும் இரண்டு தேசியப் பட்டியல் ஆசனங்களையும் வழங்குவதுடன், மேலதிகமாக தவிசாளர் மற்றும் அமைச்சர் பதவியையும் வழங்குவதாக சிறிலங்கா சுதந்திரக் கட்சி வாக்குறுதி அளித்திருந்தது.

ஆனால் சிறிலங்கா சுதந்திரக் கட்சி இந்த வாக்குறுதியை இதுவரை நிறைவேற்றவில்லை என அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் தெரிவித்துள்ளது. (செ-6)

## பசு மாட்டினை...

பொலிஸ் பொறுப்பதிகாரி சஞ்சீவ ஜெயக்கொடி தெரிவித்தார்.

கோப்பாய் சந்திப்பகுதியில் பசு மாடு வெட்டப்படுவதாக பொலிஸாருக்கு கிடைத்த ரகசிய தகவலையடுத்து அங்கு சென்ற பொலிஸ் குழுவினர் மேற்படி நபரைக் கைது செய்துள்ளதாகவும் அவரிடமிருந்து சுமார் 35 கிலோக் கிராம் நிறையுடைய மாட்டு இறைச்சியினை பறிமுதல் செய்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை பசு மாடு வெட்டப்படுவதாக கிடைத்த தகவலையடுத்து பொலிஸார் சம்பவ இடத்திற்கு சென்ற போது அங்கிருந்து சிலர் தப்பித்து சென்றதாவும் பொலிஸார் கூறியதாக பொறுப்பதிகாரி ஜெயக்கொடி மேலும் தெரிவித்தார். (செ-6)

## குழந்தை...

கில் உள்ள கிணற்றில் விழுந்துள்ளது.

தமது குழந்தையை தேடி அலைந்த பெற்றோர் இறுதியில் கிணற்றில் இருந்து குழந்தையை சடலமாக மீட்டு எடுத்துள்ளனர்.

இதில் இராஜசேகரன் கோபினா என்ற குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக கொடிகாமம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் மேற்படி குழந்தையின் சடலம் யாழ்.போதனா வைத்திய சாலையில் மரண விசாரணைக்காக வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை யாழ்.புங்குடுதீவு 3 ஆம் வட்டாரப் பகுதியில் சிவசுபபிரமணியம் தனுஷன்(வயது 09)என்ற சிறுவன் கிணற்றினுள் தவறி விழுந்து மரண மடைந்துள்ளான்.

தனது நண்பர்களுடன் நேற்று முனதினம் சனிக்கிழமை மாலை விளையாடிக் கொண்டிருந்த இந்தச சிறுவன் நீர் அருந்துவதற்காக கிணற்றடிக்கச் சென்றபோதே தவறி விழுந்துள்ளான்.

சிறுவனை நீண்ட நேரமாக மீட்காத நிலையில் சிறுவன் நீரில் மூழ்கி மரண மடைந்ததாகவும் ஊர்காவற்துறைப் பொலிஸார் குறிப்பிட்டனர். (செ-6.29)

# மரண அறிவித்தல்

## திருமதி பத்மாசினி அம்மா சிவபாதசுந்தரம்



வேலணை மேற்கை பிறப்பிடமாகவும், 118/4, பிறவுண் வீதியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி பத்மாசினி அம்மா சிவபாதசுந்தரம் நேற்று (16.11.2014) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வீரசிங்கம் (புவனேஸ்வரி மருந்துக்கடை) - பாக்கியலட்சுமி தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியும் காலஞ்சென்ற சிவபாதசுந்தரம் (ஓய்வுபெற்ற அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் - யாழ். மாநகரசபை) அவர்களின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்றவர்களான கோணேசபிள்ளை - (பிரபல வர்த்தகர் அக்குரஸ்ஸ) - ஆச்சிமுத்து தம்பதியர்களின் பாசமிகு மருமகளும் லோகநாதன் (கனடா), அமரர் உலகநாதன் (கனடா), இராஜேஸ்வரி (ஜேர்மனி), பரமநாதன் (கனடா), தருமநாதன் (ஜேர்மனி), கேதாரநாதன் (பிரான்ஸ்), தேவமலர் (கனடா), புவனேஸ்வரி (பிரான்ஸ்), பரமகுருநாதன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும். அமரர் சோமாவதி, இராசலிங்கம் (ஓய்வுபெற்ற ஆசிரியர் - லண்டன்), வேதவதி ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் மற்றும் கமலாதேவி, விமலாதேவி, சச்சிதானந்தம், ஞானாம்பிகை, உஷாராணி, தவமலர், சிவதாஸ், இராஜேந்திரன், சகிலா, கந்தையா, பரமேஸ்வரி, இராஜேஸ்வரன் ஆகியோரின் பாசமிகு மைத்துனியும்,

வைத்திய கலாநிதி அச்சுதன் (மயக்க மருந்து நிபுணர் - அவுஸ்திரேலியா), கனகதாரணி (ஆசிரியை - நல்லாயன் கன்னியர்மடம் - கொழும்பு 13), எந்திரி விகிர்தன் (நீர்ப்பாசன பொறியியலாளர் - கிளிநொச்சி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், வைத்திய கலாநிதி சுபத்திரா (அவுஸ்திரேலியா), ஞானவேல் (விரிவுரையாளர் - தேசிய கல்வியியற் கல்லூரி, கோப்பாய்), சைலஜா (அபிவிருத்தி உத்தியோகத்தர் - கிராம அபிவிருத்தித் திணைக்களம் - கச்சேரி, கிளிநொச்சி) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், அச்சயன், சாம்பவி, மேத்ரா, அவிக்னா, சதுசிகா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

118/4, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

தகவல் : குடும்பத்தினர்
0777702247


LATVIA நாட்டிற்கான வீசா சட்டஆலோசனையில் 100% வீசா வெற்றி



08.09.2014 மற்றும் 22.10.2014 அன்று எமது நிறுவனத்தின் விசா சட்டஆலோசனை மூலம் LATVIA நாட்டிற்கு விசாவை பெற்ற மாணவர்கள்

குறிப்பு: மேற்படி LATVIA நாடானது செங்கன் நாடுகளில் ஒன்றாகும் என்பதுடன் கல்லூரி விடுமுறைக்காலங்களில் GERMAN,SWISS,FRANCE, ITALY, HOLAND, SPAIN, NORWAY ....etc ஆகியநாடுகளிற்கு சென்றுவரமுடியும்.

* UK நாட்டிற்கான VISA reject ஆன மாணவர்களும் LATVIA விண்ணப்பிக்க முடியும் (C-9102)

FEB INTAKE ற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

WORLD EDUCATION CONSULTANCY (WEC)
வீசா ஆலோசனை மையம் City&Guilds approved centre-UK

0779265447,0217200989 web : www.wecgroups.com
please call 9am to 5pm Gov.reg.no: TN/DS/UC/0324

No - 377, sangathanai. (சாவகச்சேரி இந்துக்கல்லூரிக்கு அருகே)



Digital இண்டர்நஷனல் எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை

விஷேட கட்டண சலுகைகள்



- 200க்கும் மேற்பட்ட நாடுகளுக்கான உலகின் முதற்தர கூரியர் நிறுவனம் மூலம் தபால் மற்றும் பொதி விநியோக சேவையினை தரமாகவும் பாதுகாப்பாகவும் அனுப்பிட நாடுங்கள்
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- மிகச்சிறந்த வாடிக்கையாளர் சேவை
- அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்

WESTERN UNION MONEY TRANSFER

மிக விரைவான பணப்பரிமாற்ற சேவையினை நம்பிக்கையாகவும் பாதுகாப்பாகவும் பெற்றுக்கொள்ள முடியும்

62/16 ஸ்ரான்லி வீதி
(சம்பத்வங்கி முன்பாக)
யாழ்ப்பாணம்
தொடர்புகளுக்கு -
021 753 8330, 0777 151 101

(C-9102)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.11.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.